இரட்டிப்பான வரம்

J.சாம் ஜெபத்துரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

இரட்டிப்பான வரம்!

(DOUBLE PORTION OF SPIRIT)

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்
J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை- 600 024.

முதற் பதிப்பு : ஜுலை' 1988
இரண்டாம் பதிப்பு : ஜனவரி 1990
விலை ரூ. 5/-

அச்சிட்டோர் :-
ஒரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை-600 024.

அர்ப்பணம்!

ஆவியின் வரங்களாலும்
ஆவியின் கிருபைகளாலும்
ஆவியின் கனிகளாலும்
என்னை நிரப்பும்
என் அருமை ஆவியானவருக்கே!

பொருளடக்கம்

என்		பக்கம்
1.	உன்னத அழைப்பு!	5
2.	நான் உனக்குச் செய்ததை நினைத்துக்கொள்!	8
3.	இரட்டிப்பான ஆவியின் வரம்!	22
4.	தண்ணீர் ஆரோக்கியமானது!	32
5.	நியாயத்தீர்ப்பின் வார்த்தை!	37
6.	கர்த்தரின் பார்வைக்கு அற்ப காரியம்!	43
7.	உன்னிடத்தில் என்ன இருக்கிறது?	52
8.	சூனேமியாளின் பிள்ளை!	59
9.	நாகமான்!	69
10.	அது இரவலாய் வாங்கப்பட்டதே!	81
11.	எலிசாவின் மரணம்!	89

உன்னத அழைப்பு!

எலிசா!

எலிசா என்ற பெயருக்கு 'கர்த்தர் என் இரட்சிப்பானவர்' என்று அர்த்தம்.

வேதத்தில் எலிசாவைக் குறித்து வாசிக்கும் போதெல்லாம் ஆவிக்குரிய தலைமை தாங்கி நடத்திச் செல்லுகிற ஒரு தேவனுடைய மனுஷனாகவே அவரைக் காண்கிறோம். இரட்டிப்பான ஆவிக்குரிய வரங்களின் மேல் அவருக்கிருந்த வாஞ்சையானது, நம்முடைய இருதயத்தைப் புல்லரிக்க வைக்கிறது!

தேவன் தம்முடைய மகிமையான ஊழியத்திற்கென்று அவரை அழைத்தபோது அவர் எவ்விதமாய் தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்து, தன்னைத் தாழ்த்தி, தியாகமாக எலியாவிற்குப் பின்சென்றார் என்பதையெல்லாம் தியானிக்கும்போது உண்மையிலேயே அவர் இரட்டிப்பான ஆவியின் வரங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு பாத்திரவான்தான் என்று நாம் கண்டுக் கொள்கிறோம்.

எலிசாவின் வார்த்தைகள் எப்போதும் அதிகாரமுள்ளதாய் இருந்தது, தேவனிடத்திலிருந்து வருகிறதாய் இருந்தது, வல்லமை பொருந்தியதாய் இருந்தது (II இராஜா 3:16,17).

எலிசா தன்னுடைய ஊழியத்திலே தன்னுடைய முழு இருதயத்தையும், முழு ஆத்துமாவையும், முழு பலத்தையும் ஊற்றினார் என்பதை நாம் அறிந்துக் கொள்ளலாம். அவருடைய வாழ்க்கையில் வேறு நோக்கமோ, குறிக்கோளோ இருந்ததில்லை (II இராஜா 5:16).

எலிசா தன்னுடைய ஊழியத்தில் ஒருபோதும், மனச்சோர்வோ, தோல்வியோ அடைந்தது இல்லை! வெற்றியின்

முழக்கமே அவருடைய ஊழியத்தின் மேன்மையாய் இருந்தது. கர்த்தரின் ஜெயகெம்பீரமே அவருடைய பெலனாய் இருந்தது. ஒருபோதும் தோல்வி அடையாத, ஒருபோதும் தலைகுனியாத, ஒருபோதும் சோர்ந்து போகாத மகிமையான ஊழியத்தை கெம்பீரமாய் செய்து முடித்தார் (II இராஜா 6:5-16).

எலிசாவிற்கு அருமையான ஆவிக்குரிய பார்வை இருந்தது! கண்களில் தெளிவான தரிசனம் இருந்தது! தான் யார் என்பதையும், தன்னுடைய தேவனாகிய கர்த்தர் யார் என்பதையும், தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வரங்களும், வல்லமைகளும் எவ்வளவு பெரியவை என்பதையும் அவர் திட்டமும், தெளிவுமாய் அறிந்திருந்தார். தன்னுடைய ஊழியத்தைப் பற்றிய நிச்சயமான தரிசனம் அவரது கண்களில் இருந்தது. ஆகவே அவர் எதற்கும் அஞ்சவில்லை! (II இராஜா 6:17).

அவர் மற்ற தீர்க்கதரிசிகளையும், தேவனுடைய ஜனங்களையும் அன்புடன் விசாரித்து அவர்களுடைய வாழ்க்கையில் நன்மை செய்ய ஆவலுள்ளவராய் இருந்தார். அன்றைக்கு இருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரரைத் தலைமை ஏற்று நடத்திச் சென்றார் (II இராஜா 4:1).

ஒரு ராஜாவிடத்திலிருக்கிற சேனையைப் பார்க்கிலும் தன்னிடமிருக்கும் கர்த்தருடைய சேனை பெரியது என்பதும், வல்லமையுள்ளது என்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது! மாம்சீகக் கண்களால் காணமுடியாத சேனையை தங்கள் பட்சத்தில் அவர் எப்போதும் வைத்திருந்தார்! மட்டுமல்ல, எதிரிகளின் சேனையை தனியனாய் நின்று முற்றுகையிடுகிற பெலனும் அவருக்கு இருந்தது (II இராஜா 6:17).

அவருடைய மரணத்திலும் அவர் ஜெயம் கொண்டவராகவே இருந்தார். மரணப் படுக்கையிலும் தன்னுடைய அதிகாரத்தையும், வல்லமையையும் வெளிப்படுத்தி

னர். அவருடைய மரணம் எத்தனை மகிமையானது!
(II இராஜா 13:14-19).

அவருடைய மரணத்திற்குப் பின்பு அவருடைய எலும்புகளில்கூட தேவ வல்லமை இணைந்திருந்தது! அந்த வல்லமை அற்புதங்களைச் செய்வதற்கு போதுமானதாய் இருந்தது! அந்த வல்லமை மரித்த ஒரு மனுஷனை உயிர்ப்பிக்கப்பண்ணினது (II இராஜா 13:20,21).

பழைய ஏற்பாட்டில் மிக அதிகமான அற்புதங்களைச் செய்த மனுஷன் யார் என்றால் அது மோசேதான்! அதற்கு அடுத்தபடியாக மிக அதிகமான அற்புதங்களைச் செய்தவர் எலிசா! அவர் யோர்தானை இரண்டாகப் பிரிந்து போகச் செய்தார்; குடிக்க உதவாத தண்ணீரை சுவைமிக்கத் தண்ணீராக மாற்றினார்; வனாந்தரத்தில் ஆற்றுத் தண்ணீரை அற்புதமாய் கொண்டு வந்து ராஜாவின் சேனைகளின் தாகம் தீர்த்தார்; விதவையின் எண்ணெய் பெருகும்படியும், பாத்திரங்களெல்லாம் நிரம்பி வழியும் படியும் செய்தார்; பானையில் இருந்த கூழின் விஷம் நீங்கிப் போகும்படி செய்தார்; அப்பங்களை அற்புதமாய் பெருக்கிக் கொடுத்தார்; மரித்த குழந்தையை உயிரோடு எழுப்பினார்; குஷ்டரோகியான நாகமானை சொஸ்தமாக்கினார். அமிழ்ந்து போன கோடாரியை மிதக்கும்படி செய்தார். ஆம், தேவன் தமது ஊழியர்கள் மூலம் செய்யும் அற்புதங்கள் எத்தனை மகிமையானது! தேவன் ஒரு மனுஷனைக் கொண்டு அற்புதங்களைச் செய்கிறார் என்பதற்கு எலிசாவின் வாழ்க்கை முழுவதும் நமக்கு ஒரு நல்ல சான்று.

அப்படிப்பட்ட அருமையான தேவ ஊழியனைக் குறித்து நாம் தியானிப்பது உண்மையாகவே நம்முடைய ஆத்துமாவிற்கு பெலனையும், வல்லமையையும் கொண்டு வரும். அவருடைய வாழ்க்கை நமக்கு நல்ல முன்மாதிரியான வாழ்க்கை! ஊழியர்களுக்கு ஓர் சவால்!

கர்த்தர் ஆயிரமாயிரமான எலிசாக்களை நம் தேசத்தில் எழுப்பும்படி ஜெபிப்போமாக! நீங்களும் ஒரு எலிசாவாக எழும்பும்படி இந்தப் புத்தகத்தை ஜெபத்தோடும், விசுவாசத்தோடும் உங்களுடைய கைகளில் படைக்கிறேன்.

அத்தியாயம் 2

நான் உனக்கு செய்ததை நினைத்துக் கொள்!

அப்படியே அவன் அவ்விடம் விட்டு புறப்பட்டுப் போய் பன்னிரண்டு ஏர் பூட்டி உழுத சாப்பாத்தின் குமாரனாகிய எலியாவைக் கண்டான்; அவன் பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக் கொண்டிருந்தான்; எலியா அவன் இருக்கும் இடம் மட்டும் போய், அவன் மேல் தன் சால்வையை போட்டான்.

அப்பொழுது அவன் மாடுகளை விட்டு, எலியாவின் பிறகே ஓடி; நான் என் தகப்பனையும் என் தாயையும் முத்தஞ்செய்ய உத்தரவு கொடும், அதற்குப் பின் உம்மைப் பின் தொடர்வேன் என்றான். அதற்கு அவன்: போய்த் திரும்பி வா; நான் உனக்குச் செய்ததை நினைந்துக் கொள் என்றான் (I இராஜா 19:19,20).

இந்தப் பகுதியில் எலிசாவை வேதம் நமக்கு அறிமுகம் செய்கிறது. அந்த நாள் எலிசாவின் வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தின் நாள்! ஒரு புதிய தீர்மானத்தின் நாள்! கர்த்தருடைய மகிமையான ஊழியத்திற்கென்று வேறு பிரிக்கப்பட்ட நாள்!

எலிசாவை நாம் வயல்வெளியில் சந்திக்கிறோம். அந்த வயல்வெளியில் பன்னிரண்டு ஏர்கள் பூட்டி நிலத்தை உழுது கொண்டிருக்கிறார்கள். பன்னிரண்டாவது ஏரை ஓட்டிக் கொண்டிருக்கிறவர் தான் இந்த எலிசா!

எலிசாவின் ஊர் ஆபேல்மேகொலா. எலிசாவின் பெயர் சாப்பாத்து. இவ்வளவு தான் எலிசாவின் குடும்பத்தைக் குறித்து வேதம் நமக்கு அறிமுகம் செய்வது!

எலிசா தன்னுடைய தகப்பனின் வயலில் உழுது கொண்டிருக்கும்போது, மற்ற உழவர்களோடு கூட

எலியாவைக் குறித்து பேசிக் கொண்டிருந்திருக்கக் கூடும்! காரணம் எலியாவின் ஜெபத்தால் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது தான் மழை பெய்திருக்கிறது. மூன்று ஆண்டுகள் மழையில்லாமல், எலியா செய்து அற்புதத்தின் மூலமாக மழை பெய்ததினுல் அவர்கள் ஏர் உழ வந்திருக்கிருர்கள். ஆகவே, அவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரனுகிய எலியாவைக் குறித்தும், அவனுடைய ஜெபத்தைக் குறித்தும், அவனுடைய வல்லமையைக் குறித்தும் பேசி உழுது கொண்டே இருந்திருப்பார்கள்.

அப்பொழுது திடீரென்று அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்த போது தூரத்தில் எலியா வருவதைக் கண்டார்கள். தூரத்தில் தெரிந்த எலியா நேராக அவர்களை நோக்கி நடந்து வந்தார். ஒருவேளை அவரைக் கண்ட பன்னிரண்டு ஏர் ஒட்டிகளும் ஆச்சரியத்தால் அப்படியே நின்றிருந்திருப்பார்கள்.

எலியா ஒரு வார்த்தையும் பேசவில்லை. நேராக எலிசாவண்டை வந்தார். தன் தோளில் இருந்த சால்வையை எடுத்து எலிசாவின் மேல் போட்டார். அந்த ஒரு செயல் எவ்வளவு பெரிய காரியத்தை வெளிப்படுத்தியது. அங்கு வார்த்தைகளைப் பேச வேண்டிய அவசியம் இல்லாமல் போனது. அவர் வார்த்தைகளுக்கு முதலிடம் கொடுக்கவில்லை. செயலுக்கே முதலிடம் கொடுத்தார். எலியா நீண்ட நேரம் வார்த்தைகள் பேசிக் கொண்டிருக்கிற ஒரு மனுஷன் அல்ல. சுருக்கமான வார்த்தைகளாய் இருந்தாலும் அவர் ஒருசெயல்வீரனுய் இருந்தார்.

எலிசாவைப் பார்த்தவுடன் அவர் செய்ததெல்லாம் தன்னுடைய சால்வையை எடுத்து அவன் மேல் போட்டது தான். அந்தச் சால்வை எலிசாவின் மேல் விழுந்ததும் எலிசா தன்னுடைய அழைப்பு, தன்னுடைய தெரிந்து கொள்ளுதல், தனக்கு வரப்போகிற ஊழியம், தன்னுடைய எதிர்காலம் எல்லாவற்றையும் இமைப்பொழுதில் அறிந்து கொண்டான்.

ஆம், அது ஒரு தீர்மானத்தின் நேரம்! பதினொரு ஏர்களைப் பின் தொடர்ந்து, பன்னிரண்டாவது ஏரை ஓட்டிச் சென்ற அவர், இனி எலியாவைப் பின் தொடர்ந்து தேவனுடைய ஊழியத்தை நடத்திச் செல்லப் போகிறார்! மாடுகளை நடத்திய அவர் இனிமேல் ராஜாக்களை நடத்தப் போகிறார். நிலத்தை உழுத அவர் தேவ ஜனங்களின் உள்ளங்களைக் கர்த்தருக்கென்று உழப் போகிறார். ஆம், அது தீர்மானத்தின் நேரம்!

மட்டுமல்ல, அது அழைப்பின் நேரம்! கர்த்தருடைய ஊழியத்திற்கான அழைப்பு அது! ஒருவேளை இந்தச் சால்வை அவர் மேல் விழுந்தவுடன் கர்த்தர் அதற்கு முன்பாக தேவனுடைய ஊழியக்காரர்களை எவ்விதமாய் அழைத்திருக்கிறார் என்கிற எண்ணம் அவரது உள்ளத்தில் வந்திருக்கக்கூடும். தன்னையும் அவ்விதமான மேன்மையான அழைப்பினால் தேவன் அழைக்கிறார் என்பதை திட்டமும் தெளிவுமாய் உணர்ந்து கொண்டார்.

அப்படிப்பட்ட ஒரு நாளில் தான் கர்த்தர் ஆபிரகாமை அழைத்தார். நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்குப் போ என்றார் (ஆதி 12:1).

அப்படித்தான் கர்த்தர் மோசேயையும் அழைத்தார். நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா என்றார் (யாத் 3:10).

அப்படித்தான் கர்த்தர் கிதியோனையும் அழைத்தார். நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார் (நியாயா 6:14).

அப்படித்தான் ஏசாயாவின் அழைப்பும் அன்று வந்தது. யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்

போவான் என்று கேட்டபோது ஏசாயா மகிழ்ச்சியோடு ''இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்'' என்று ஒப்புக் கொண்டான் (ஏசாயா 6:6-8).

தேவனுடைய அழைப்பில் தன்னுடைய அபாத்திர நிலைமையை உணர்ந்த எரேமியாவைப் பார்த்து கர்த்தர் சொன்னார், ''நான் சிறு பிள்ளை என்று நீ சொல்லாதே. நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய் நான் உனக்கு கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக'' (எரேமி 1:7).

அன்றைக்கு எலிசாவிற்கு தன்னுடைய முற்பிதாக்களின் தேவனுடைய அழைப்புகளெல்லாம் ஞாபகத்திற்கு வந்திருக்கக்கூடும். தன்மேல் விழுந்த சால்வையின் உத்திரவாதம் என்ன? கடமை என்ன? என்பதையெல்லாம் இமைப்பொழுதில் அவர் புரிந்துக் கொண்டார். எலியாவைத் தொடர்ந்து தான் செல்லவேண்டும் என்பதையும், தன்னுடைய அழைப்பு தீர்க்கதரிசியின் அழைப்பு என்பதையும், எலியாவின் ஸ்தானத்தில் தேவன் தன்னை அபிஷேகம் பண்ணியிருக்கிறார் என்பதையும் அவரால் புரிந்துக்கொள்ள முடிந்தது.

அந்தச் சம்பவத்தை நினைக்கும்போது நம்முடைய உள்ளம், நம்முடைய ஆண்டவருடைய ஊழியத்தை நோக்கித் திரும்புகிறது. கிறிஸ்துவும் கூட தன்னுடைய சீஷர்களை அவ்விதமாய்தான் அழைத்தார். பேதுருவும், யாக்கோபும் தங்களுடைய வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தபோது கிறிஸ்து அவர்களை அழைத்தார் (மத் 4:21). மத்தேயு, லேவி ஆயத்துறையில் அமர்ந்து வரி வசூலித்துக் கொண்டிருந்தபோது தேவன் அவர்களையும் அழைக்க சித்தம் கொண்டார் (மத் 9:9). அவர்கள் படகுகளையும், வலைகளையும், தொழில்களையும் விட்டுவிட்டு கிறிஸ்துவைப் பின்சென்றார்கள்.

தேவபிள்ளையே, அந்த கிறிஸ்து இன்றைக்கு உன்னுடைய உள்ளத்தைத் தட்டி எழுப்பி அவரைப்பின்

தொடர்ந்து செல்லும்படி அழைக்கிறார். அவருடைய அழைப்பு உன்னை நோக்கி வருகிறது. இன்றைக்கு நீ ஒரு தீர்மானம் செய்ய வேண்டிய நாள்! நீ இன்றைக்கு கர்த்தருக்காக முடிவு எடுக்கவேண்டிய நாள்!

மோசே அன்றைக்கு ஒரு தீர்மானம் எடுத்தார். வேதம் சொல்கிறது, ''மோசே பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்பட்டதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும், தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு, இனி வரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்'' (எபி 11:25,26).

எலிசா தன் வயலில் ஏரை ஓட்டிக்கொண்டிருந்தாலும் கூட அவனுடைய உள்ளமோ தேவ ஆவியினால் நிரம்பியிருந்தது! கர்த்தரை மகிமைப்படுத்திக் கொண்டே ஏரை ஓட்டிக் கொண்டிருந்திருப்பான்! ''இரண்டு பேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் எடுத்துக் கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான்'' என்று வேதம் சொல்லுகிறது (மத். 24:40). இங்கு வயல் வெளியில் இரண்டு பேர் அல்ல. பன்னிரண்டு பேர்கள் உழுது கொண்டிருக்கிறார்கள். பதினொரு பேருக்குக் கிடைக்காத ஒரு பெரிய பாக்கியம் எலிசாவிற்கு அன்றைக்கு கிடைத்தது! ஆகவே தன்மேல் எலியாவின் சால்வை விழுந்தவுடனே, அவன் தனக்குரிய எல்லாவற்றையும் விட்டுவிட்டு எலியாவைப் பின்பற்ற உடனே தீர்மானித்தான்!

கிறிஸ்துவின் நாட்களிலே பர்திமேயு என்ற குருடன் இயேசு அவ்வழியாய் வருகிறார் என்று தெரிந்தவுடனே, தன்னுடைய வஸ்திரங்களையெல்லாம் எறிந்து விட்டு, ''தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்'' என்று இயேசுவை சத்தமிட்டு அழைத்தான். அவன் பார்வை அடைந்தபோது தேவனை மகிமைப்படுத்திக் கொண்டே அவருக்குப்

பின் சென்றான் என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம் (லூக் 18:37). இயேசுவைப் பின் செல்ல அன்றைக்கு பர்திமேயு திடமாய் தீர்மானம் செய்தான்.

தேவபிள்ளையே, அந்த தேவன் உனக்கு இரட்சிப்பைத் தந்திருக்கிறார். உள்ளத்தில் தேவ சமாதானத்தைத் தந்திருக்கிறார், பாவமன்னிப்பின் நிச்சயத்தைத் தந்திருக்கிறார்! அவர் உன்னைத் தெரிந்து கொண்டிருக்கிறார் என்பதை மறந்து போகாதே! இயேசு இந்த வேளையில் உங்கள் மேல் அன்போடு தம்முடைய கைகளை வைத்து, ''நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்'' என்கிறார்!

எலியாவின் சால்வை எலிசாவின் மேல் விழுந்தவுடன் அவன் அடுக்கடுக்கான தீர்மானங்களை உடனடியாக தனக்குள்ளே எடுத்துக் கொண்டான். சீஷத்துவம் என்பது எல்லாவற்றையும் விட்டு விட்டு எஜமானைப் பின்செல்லுவது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது! இனி அவனால் தன்னுடைய சுய சித்தத்தைச் செய்ய முடியாது. இனி அவனால் சொந்த காரியங்களைக் கவனிக்கவும் இயலாது. தன்னை முற்றிலும் எலியாவின் தலைமைக்கு கையளிக்கப் போகிறான் என்றாலும் அவனுடைய உள்ளத்தில் ஒரு சிறு விருப்பம் இருந்தது.

அதை மனம் திறந்து தீர்க்கதரிசியாகிய எலியாவிடம் சொன்னான்: ''நான் என் தகப்பனையும், தாயையும் முத்தம் செய்ய உத்தரவு கொடும்; அதற்குப் பின் உம்மைத் தொடருவேன்'' என்றான்.

எலிசாவிற்கு இருந்த பூமிக்குரிய ஆசையெல்லாம் இது ஒன்றுதான். என்னைப் பெற்று வளர்த்த பெற்றோருக்கு என் அன்பின் காணிக்கையாக ஒரு முத்தத்தை பரிசாய் கொடுத்து அவர்களுடைய ஆசீர்வாதத்தோடு கூட உம்மைப் பின் தொடருவேன் என்றான்.

வேதத்திலுள்ள பரிசுத்தவான்களைக் குறித்து நாம் வாசிக்கும்போது அவர்கள் எவ்வளவு பெரிய தேவனு

டைய ஊழியக்காரர்களாய் இருந்தாலும் குடும்பத்தில் பாசம் அவர்களுக்கு இருந்தது. அது தவறல்ல, கர்த்தர் அதை அனுமதி அளிக்கிறார். ஆனால் கர்த்தர் மேலுள்ள அன்பைவிட குடும்ப பாசம் அதிகரித்து விடக்கூடாது. குடும்பம் விக்கிரகமாகி விடக்கூடாது. அதில் நாம் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.

யோசேப்பு யாக்கோபுக்கு முன்பாக தன்னுடைய பிள்ளைகளைக் கொண்டு வந்து அவனுடைய முகத்திற்கு முன்பாக தரைமட்டும்குனிந்து வணங்கினான் (ஆதி 48:12). தகப்பனையும், தாயையும் கனம் பண்ணும்போது கர்த்தர் அந்தக்குடும்பத்தை கனம் பண்ணி ஆசீர்வதிக்கிறார். உன்னிலே உன் வாழ்நாளெல்லாம் நீடித்திருப்பதற்கு உன் தாயையும், தகப்பனையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள தேவனுடைய கட்டளையாய் இருக்கிறது.

தாவீதைக் குறித்து வேதத்தில் வாசித்துப் பாருங்கள். தன்னுடைய தகப்பனையும், தாயையும் பராமரிக்க வேண்டும் என்ற வாஞ்சையோடு கூட அவர்களைப் பொறுப்பாக மோவாபின் ராஜாவிடத்தில் ஒப்புவித்தான். சவுலின் ஆட்சியில் அவர்கள் இருந்தால் நிச்சயம் அவர்களை அவன் கொன்று போடுவான் என்று தாவீது திட்டமாய் அறிந்திருந்தபடியினாலே அவர்களுக்குப் புகலிடமும், பாதுகாப்பும் கொடுத்தான் (I சாமு 22:3).

சாலொமோனுக்குக் கூட பெற்றோரின் மேல் அளவில்லாத ஒருபாசமும், மதிப்பும் இருந்தது. அவன் தாயாகிய பத்சேபாள் அவனைப் பார்க்க வந்தபோது அவன் ராஜஸ்தானத்திலிருந்து எழுந்து இருந்து அவளுக்கு எதிர்கொண்டு போய் அவளை வணங்கி தன் சிங்காசனத்தின் அருகிலே ஒரு ஆசனத்தை வைத்தான் (I இராஜா 2:19).

இயேசுவினுடைய வாழ்க்கையை வாசித்துப் பாருங்கள். அவர் தாயாகிய மரியாளோடும், யோசேப்போடும்

போய் நாசரேத் ஊரில் சேர்ந்து அவர்களுக்குக் கீழ்ப்படிந் திருந்தார் என்று வேதம் சொல்லுகிறது (லூக் 2:51). மட்டுமல்ல, சிலுவையில் அவர் தொங்கும்போது கூட தன்னுடைய தாயின் மேல் பொறுப்புள்ளவராய் தன்னு டைய அன்பான சீஷனுகிய யோவானிடம் மரியாளை ஒப்படைத்தார்.

முத்தம் செய்ய எலிசா புறப்பட்டுப் போகும்போது எலியா கூறுகிற ஒரு வார்த்தையை சற்று சிந்தித்துப் பாருங்கள் ''போய் திரும்பி வா! நான் உனக்குச் செய் ததை நினைத்துக் கொள்'' என்ருர்.

''நான் செய்ததை நினைத்துக் கொள்!'' என்ற வார்த் தைகள் எலிசாவின் உள்ளத்தில் தொனித்துக் கொண்டே இருந்திருக்க வேண்டும். என்னுடைய சால்வை உன்மேல் போடப்பட்டிருக்கிறது என்பதை நினைத்துக் கொள். நீ தேவனுடைய கனமான ஊழியத்திற்கென்று வேறு பிரிக் கப்பட்டவன் என்பதை நினைத்துக் கொள். நீ உன்னத மான தேவனுடைய பணிவிடைக்காரன் என்பதை நினைத் துக் கொள். எத்தனையோ தீர்க்கதரிசிகளின் புத்திரர் அந்த நாட்களில் எரிகோவில் இருந்தாலும் கர்த்தர் அவர்களை யெல்லாம் தெரிந்து கொள்ளாமல் உன்னைத்தெரிந்து கொண்டிருக்கிருர் என்பதை நினைத்துக் கொள்.

எலிசா தன்னுடைய பெற்றோரை முத்தம் செய்யும் போது ஒரு வேளை அவர்கள் அழக்கூடும். ஊழியத்திற்கு போக வேண்டாம் என்று தடுக்கக் கூடும். இனத்தவர் களெல்லாம் ஆலோசனை கூறக்கூடும். உடன் பிறந்தவர் களெல்லாம் கண்ணீர் சிந்தி அவனுடைய இருதயத்தை மன மடிவாக்கி ஊழியத்திற்குச் செல்லாதபடி செய்யக் கூடும். அந்த வேளைகளிலெல்லாம், ''நான் உனக்குச் செய்ததை நினைத்துக் கொள்'' என்று எலியா ஞாபக மூட்டி அனுப்புகிருர்.

தேவபிள்ளையே, இயேசு உனக்குச் செய்ததையெல் லாம் நீ நினைத்துக் கொண்டிருக்கிருயா? உனக்காக

சிலுவையிலே தன்னை ஒப்புக் கொடுத்ததை நீ நினைவில் வைத்திருக்கிறாயா? உனக்காக அவர் பலியானதையும், உனக்கு மீட்பை உண்டாக்கினதையும் ஒருபோதும் மறந்து போகாதே.

தாவீது எப்போதும் தேவன் செய்த நன்மைகளையெல்லாம் நினைவு கூருவது வழக்கம். தன்னுடைய ஆத்துமாவைப் பார்த்து அவர் சொல்லுகிறார், "கர்த்தர் செய்த சகல உபகாரங்களையும் மறந்து போகாதே" என்கிறார் (சங் 103:4). மட்டுமல்ல, கர்த்தர் நடத்திக் கொண்டு வந்த வழிகளையெல்லாம் நன்றியோடு நினைவுகூருங்கள். கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் நான் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்? இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன் என்கிறார் (சங் 116:12).

நான் உனக்குச் செய்தவைகளை நினைத்துக் கொள். கர்த்தர் நமக்குச் செய்தவைகளையெல்லாம் நாம் நினைவு கூர்ந்தால் ஒரு போதும் நாம் பாவத்தில் பிரவேசிக்க மாட்டோம். தெய்வீக அன்பு நம்முடைய உள்ளத்தில் இருந்தால் உலக சிநேகிதத்தை ஏற்றுக் கொள்ளவே மாட்டோம். கிறிஸ்துவுக்குக் கொடுத்த உள்ளத்தை ஒரு போதும் இச்சைகளுக்குக் கொடுக்கவே மாட்டோம். "நான் உனக்குச் செய்ததை நினைத்துக் கொள்" என்று தேவபிள்ளையே, கர்த்தர் உன்னிடம் சொல்லுகிறார்.

நீ தெரிந்து கொள்ளாத வேளையிலும் கர்த்தர் உன்னைத் தெரிந்து கொண்டார். காணாமல் போன ஆட்டைக் கண்டு பிடிக்கிறதைப் போல உளையான சேற்றிலே கர்த்தர் உன்னைக் கண்டுபிடித்து தூக்கி எடுத்தார். சிலுவை சுமந்த தோள்களிலே அவர் ஒவ்வொரு நாளும் உன்னை சுமந்தார். மட்டுமல்ல, உன்னை ராஜாவாகவும், ஆசாரியனாகவும் அபிஷேகம் பண்ணினார்.

அன்றைக்கு எலியா தன் சால்வையை எலிசாவின் மேல் போட்டார். கர்த்தரோ பரிசுத்த ஆவியை உன் மேல் போட்டு உன்னைத் தம்முடைய மகிமைக்கென்று தெரிந்து கொண்டிருக்கிறார். அவர் உனக்கு செய்ததை நினைத்துக்கொள்!

அன்றைக்கு ஓர்பாள் நகோமியை முத்தம் செய்தாள். அவளுக்கு முன்னால் பெத்லகேம் இருந்தது. ஆனால் பெத்லகேமுக்கு நகோமியோடு செல்ல அவளுக்கு விருப்பமில்லாமல் மீதியானியர் தேசத்திற்குத் திரும்பிச் சென்று விட்டாள். தேவபிள்ளையே, மீதியானியரின் தேசமாகிய உலகம் உன்னைக் கவர்ச்சிக்க இடம் கொடாதே. உன்னுடைய முத்தம் உன்னை பின்மாற்றத்திற்குள் கொண்டு செல்லாமல் இருக்கட்டும். கர்த்தர் உனக்குச் செய்ததை நினைத்துக்கொள்!

நீ தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன் என்பதையும், நீ கர்த்தருக்கு முன்பாக பரிசுத்த ஜாதி என்பதையும் மறந்து போகாதே. உன் கிறிஸ்து உலகத்தார் அல்லாதது போல, நீயும் இந்த உலகத்தான் அல்ல. நீ கர்த்தரால் வேறு பிரிக்கப்பட்டவன் கர்த்தருடைய சால்வையாகிய பரிசுத்த ஆவி உன் மேல் இருக்கிறது!

ஆகவே நீ இனி உன்னுடையவனல்ல. நீ கர்த்தருடையவன். இனி நீ உன்னுடைய வழிகளில் செல்லாமல் வேத வசனத்தின்படியே செல்ல வேண்டும். கர்த்தர் உனக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். உன்னுடைய ஆவி, ஆத்துமா, சரீரமெல்லாம் கர்த்தருடையது. உன்னுடைய தோளை நீ அவருக்குக் கொடுத்திருக்கிறாய். அவருடைய நுகம் மெதுவாயும், அவருடைய சுமை இலகுவாயும் இருக்கிறது.

எலியாவை விட்டுச் சென்ற எலிசா செய்தது என்ன தெரியுமா? தன்னுடைய ஏர் மாடுகளைப் பிடித்து, அடித்து, தன்னுடைய ஏரின் மரமூட்டுகளால் இறைச்

சியை சமைத்து ஒரு பெரிய விருந்து செய்தான். தன்னுடைய மகிழ்ச்சியை ஜனங்களோடுகூட பகிர்ந்து கொண்டான்.

பொதுவாக விருந்து என்பது தங்களுடைய மகிழ்ச்சியை பிறருக்குத் தெரிவிக்கச் செய்வதாகும். வேதத்தில் திருமண விருந்துகளைப் பார்க்கிறோம். பிறந்த நாள் விருந்துகளைப் பார்க்கிறோம். ஆனால் அதைப் பார்க்கிலும் மேன்மையான விருந்து கர்த்தருடைய ஊழியத்திற்கென்று நான் செல்லுகிறேன் என்பதற்கு கொடுக்கப்படும் மகிழ்ச்சி விருந்தாகும்! மத்தேயுவும்கூட தான் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டதினால் ஒரு பெரிய விருந்து செய்தான் என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம்.

எலிசா அந்த விருந்தைச் செய்யும்போது தன்னுடைய சொந்த மாடுகளை அடித்து, தன்னுடைய சொந்த ஏரை விறகாக்கி அதன் மூலமாய் சமைத்தான் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்! அதன் அர்த்தம் என்ன?

கர்த்தருடைய ஊழியமாகிய கலப்பையிலே நான் கை வைக்கப் போகிறேன். நான் இனி பின்னிட்டு உலக கலப்பையையோ, ஏரையோ, ஏர் மாட்டையோ பார்ப்பதில்லை. கலப்பையின்மேல் தன்னுடைய கையை வைத்துவிட்டு பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவன் அல்ல.

ஒருவேளை தன்னுடைய ஏரையோ, அல்லது ஏர் மாடுகளையோ அப்படியே விட்டுவிட்டு வந்திருந்தால், பிற்பாடு உள்ளத்தில் ஒரு சபலம் ஏற்படக்கூடும். தேவனுடைய ஊழியத்தைவிட்டு, உலகப்பிரகாரமான ஏர் ஓட்டுவதற்கு பின் விலகிச் செல்லும் அனுபவம் ஏற்பட்டு விடக்கூடும். ஆகவே, தன்னைப் பின்னிட்டுத் திரும்ப பண்ணுகிற ஒவ்வொன்றையும் அவன் அழிக்கத் தீர்மானித்தான்.

அன்றைக்கு தான் விட்டுவிட்டு வந்த சோதோமை திரும்பிப் பார்த்ததினால் அல்லவா, லோத்தின் மனைவி

உப்புத் தூண் ஆனுள்! தான் விட்டுவிட்டு வந்த எகிப்தின் கொம்மட்டிக்காய்களையும், வெள்ளைப் பூண்டுகளையும் இஸ்ரவேலர்கள் நினைத்ததினுல் அல்லவா தேவ கோபாக் கினைக்கு ஆளானுர்கள்!

எனக்குச் சில ஊழியக்காரர்களைத் தெரியும். கர்த்தர் தியாகமாக முழு நேர ஊழியத்திற்கென்று அவர்களை அழைத்தபோது அவர்கள் தங்களுடைய படிப்பின் சர்டிபி கேட்டுகள், பழைய அனுபவத்தின் நற்சான்றிதழ்கள் எல்லாவற்றையும் தீ கொளுத்திவிட்டு கர்த்தருக்குப் பின் சென்ருர்கள். நாங்கள் பின்னிட்டுத் திரும்ப விரும்ப வில்லை. உலக சர்டிபிகேட்டுகள் ஊழியத்திற்கு ஒரு போதும் தடைக் கல்லாய் இருக்கக்கூடாது என்பதே அவர் களுடைய நோக்கமாய் இருந்தது.

ஒரு முறை நெப்போலியன் தன்னுடைய படை வீரர் களை அழைத்துக் கொண்டு ஒரு ஆற்றின் பாலத்தைக் கடந்து அக்கரையிலுள்ள பகைவர்களோடுகூட யுத்தத்திற் குப் புறப்பட்டுச் சென்ருன். யுத்தம் நடந்தது. நெப்போலி யனுடைய படை வீரர்கள் புறமுதுகிட்டு பாலத்தின் வழி யாக இக்கரைக்கு ஓடி வந்து விட்டார்கள். மீண்டும் அவர்களை அழைத்துக் கொண்டு சென்ருன். பாதியிலே அவர்கள் புறமுதுகிட்டு திரும்பவும் வந்து விட்டார்கள். ஆகவே நெப்போலியன் மூன்ருவது முறை தன்னுடைய வீரர்களை யுத்தத்திற்கு அழைத்துச் சென்ற போது வெடி வைத்து பாலத்தைத் தகர்த்து விட்டான். முன் சென்ற வீரர்கள் தங்களுக்குப் பின்னுலுள்ள பாலம் தகர்க்கப்பட் டது என்று உணர்ந்தபோது எந்த வழியிலும் பின்னுல் செல்ல முடியாது என்பதை அவர்கள் உணர்ந்து கொண் டார்கள்! ஜெயமா? சாவா? என்ற உறுதியோடு அஞ்சா நெஞ்சத்தோடு யுத்தம் செய்தார்கள். யுத்தத்தில் வெற்றி கண்டார்கள். வெற்றி வாகை சூடினுர்கள்!

நெப்போலியன் அந்தப் பாலத்தைத் தகர்த்தது போலவே, எலிசா தன்னுடைய ஏர்மாடுகளை அடித்து

ஏரின் மரத்திலேயே சமையல் செய்து, இனி உலகத்திற்கும் தனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்பதை வெளிப்படுத்தி கர்த்தருக்குப் பின் சென்றான்.

சீஷத்துவம் என்பது அதுதான். இயேசு சொன்னார்: ''ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' (மத் 16:24). ''யாதொருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்'' (லூக் 14:26).

ஊழியம் என்பது ஒரு எளிதான காரியமல்ல. அது கர்த்தரைப் பின்பற்றுதலாகும். நமது ஊழியம் தாழ்மையோடு இருக்க வேண்டும் (மத் 10:43, 44). நல்ல சமாரியனைப் போல மனதுருக்கத்தோடும் பிறர் மேல் இரக்கம் பாராட்டுகிற தியாகத்தோடும் ஊழியம் செய்ய வேண்டும் (லூக்கா 10:36, 37). கிறிஸ்துவின் முன்மாதிரியான ஊழியமாய் அமைந்திருக்க வேண்டும் (யோவான் 13:14). மட்டுமல்ல, ஒருவருடைய பாரத்தை ஒருவர் சுமந்து ஊழியம் செய்ய வேண்டும் (கலா 6:2).

உலகத்திலுள்ள எல்லா சேவைகளைப் பார்க்கிலும் கர்த்தருக்கு ஊழியம் செய்வது மகிமையானது. மகத்துவமானது! பில்லிகிரகாம் ஒரு முறை சொன்னார், ''அமெரிக்காவின் ஜனாதிபதி பதவியைப் பார்க்கிலும் தேவனுடைய ஊழியக்காரன் என்று அழைக்கப்படுவதையே நான் விரும்புகிறேன். இந்த மகிமையான ஊழியத்தை விட்டுவிட்டு, உலகப்பிரகாரமான எந்தப் பெரிய பதவியையும் வகிக்க நான் விரும்பவில்லை'' என்றார்.

''ஒருவன் எனக்கு ஊழியம் செய்வானானால் அவனை என் பிதா கனம்பண்ணுவார்'' என்று இயேசு கிறிஸ்து உன்னை இந்த கனமான ஊழியத்திற்கு அழைக்கிறார்!

அழைக்கிற அவர் உன்னைத் தகுதிப்படுத்துவார். உன்னை ஆவியினாலும், வல்லமையினாலும் நிரப்புவார். நித்திய மான ஆசீர்வாதங்களை உனக்குத் தந்தருளுவார்!

எலிசாவை நோக்கிப் பாருங்கள். தேவனுடைய அழைப்பை எவ்வளவு நன்றியோடு அவன் ஏற்றுக் கொண்டான். எவ்வளவு தியாகமாய் தேவனைப் பின் செல்ல தீர்மானித்தான். தேவபிள்ளையே, கர்த்தர் உனக்குச் செய்தவைகளை மறந்து போகாதே!

கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக!

அத்தியாயம் 3

இரட்டிப்பான ஆவியின் வரம்!

"அவர்கள் அக்கரைப்பட்ட பின்பு எலியா எலிசாவை நோக்கி, நான் உன்னை விட்டு எடுத்துக் கொள்ளப்படும் முன்னே நான் உனக்கு செய்ய வேண்டியது என்ன? கேள் என்றான். அதற்கு எலிசா : உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய் கிடைக்கும்படி வேண்டு கிறேன் என்றான். அதற்கு அவன்: அரிதான காரியத்தை கேட்டாய். உன்னை விட்டு நான் எடுத்துக் கொள்ளப் படுகையில் நீ என்னைக் கண்டால் உனக்கு கிடைக்கும். இல்லாவிட்டால் கிடைக்காது என்றான்"

(II இராஜா2:9,10).

எலிசாவின் வாழ்க்கையில் இன்னொரு மகிமையான நாள் அது! அவன் இரட்டிப்பான ஆவியின் வரங்களினால் நிரப்பப்பட்ட நாள்! பரிசுத்த ஆவியானவர் எலியாவிற் கிருந்த வல்லமையை எலிசாவிற்கு . இரட்டிப்பாகக் கொடுத்த நாள்! ஊழியம் செய்வதற்காக உன்னதத்தின் பெலனை விசேஷித்த விதமாக பெற்றுக்கொண்ட நாள்!

எலியாவின் ஊழியம் முடிவடைகிற நேரம் வந்தது! பூமியிலே அவன் இனி செலவழிக்க போகிற காலம் ஒருசில நிமிட நேரங்கள் தான்! கர்த்தர் அவனை எடுத்துக் கொள்ளப் போகிற சமயம் வந்தது!

இளம் ஊழியனாகிய எலிசாவின் உள்ளத்தில் இருந்தது எல்லாம் எப்படியாவது ஆவியின் வரங்களை இரட்டிப் பாய் பெற்று ஊழியம் செய்ய வேண்டும் என்பதேயாகும்! அந்த ஒரு நோக்கத்திற்காக தான் அவன் தன் தகப்பனு டைய வீட்டையும், தன்னுடைய தொழிலையும், தன்னு டைய கிராமத்தையும் விட்டு எலியாவிற்கு பின் சென்றி ருக்கிறான். அதற்காகவே எலியாவிற்கு ஒரு அடிமையை போல, ஒரு வேலைக்காரனைப் போல, ஒரு மாணவனைப்

போல பத்து ஆண்டுகள் சேவை செய்திருக்கிறுன். எலியா வின் கைகளுக்கு தண்ணீர் வார்த்து, பணிவிடை செய்தி ருக்கிறுன்! அதற்காகவே எலியா எங்கெங்கு சென்ருனே அங்கெல்லாம் தியாக உணர்வோடு, வாஞ்சையோடு பின் பற்றியிருக்கிறுன்.

எலியா கில்காலுக்கு சென்றபோது எலிசாவும் கூடவே கில்காலுக்கு வந்தான். பெத்தேலுக்கு வந்தபோது நான் உம்மை விடுகிறதில்லே. உம்மையே பின் தொடர்ந்து வருவேன் என்று கர்த்தரின் ஜீவனேக் கொண்டு ஆணே யிட்டு பின் சென்ருன். எரிகோவிற்கும் அதன் பின்பு யோர்தானுக்கும் நடந்து வந்தார்கள். அவனுடைய உள்ள மெல்லாம் இரட்டிப்பான ஆவியின் வரங்களேயே ஏங்கி நின்றது.

தேவபிள்ளேயே, கர்த்தருக்கென்று ஊழியம் செய்ய உன் உள்ளத்தில் அந்த வாஞ்சை உண்டா? உன்னேச் சூழ இருக்கிற தேவையுள்ள மக்களுக்கு கர்த்தரை தெய்வம் என்று நிரூபிக்க உன்னுடைய உள்ளத்தில் அந்த சிந்தனே உண்டா? புற ஜாதியினரை வார்த்தையினுலும், வல்லமை யினுலும் தேவ வசனத்திற்கு கீழ்படியப் பண்ணும் பொருட்டு உன் உள்ளத்தில் அந்த ஆர்வம் உண்டா?

மூன்று முறை எலியா, எலிசாவை நோக்கி, நீ இங்கே யிரு, நான் பெத்தேலுக்கு போகிறேன், எரிகோவிற்கு போகிறேன், யோர்தானுக்கு போகிறேன் என்று சொல்லி தட்டிக் கழிக்க நினேத்த போதிலும் எலிசாவோ ஆவியின் வரங்கள் மேல் நாட்டம் கொண்டு எலியாவைப் பின் தொடர்ந்ததை நினேத்துப் பாருங்கள்.

எலிசாவுக்கு தன் தேசத்தைப் பற்றிய ஒரு பாரம் இருந்தது. இஸ்ரவேல் ஜனங்களேக் குறித்த ஒரு வைராக் கியம் இருந்தது. எலியா எடுத்துக் கொள்ளப்பட்டால், இஸ்ரவேலிலே கர்த்தரே தெய்வம் என்று நிரூபிக்கிறவர் யார்? பாகால் தீர்க்கதரிசிகளுக்கு சவால் விடுகிறவர் யார்? யேசபேலின் ஆவிகளோடு எதிர்த்து நிற்பவர் யார்?

ஆகவே கர்த்தர் தன்னை ஆவியின் வல்லமைகளினால் இடைகட்டினாலொழிய தேவனுடைய கனமான ஊழியத்தை வல்லமையாய் செய்ய முடியாது என்பதை அவர் தெளிவாய் அறிந்திருந்தார்.

எலிசா ஊழியத்திற்கென்று அழைக்கப்பட்டிருந்தது உண்மை தான். எலியாவின் சால்வை எந்த நிமிடம் அவன் மேல் விழுந்ததோ அந்த நிமிடமே ஊழியத்திற்கென்று வேறு பிரிக்கப்பட்டிருந்ததும் உண்மை தான். ஆனால் அவன் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் இடைக்கட்டப்பட வேண்டியது அவசியமாயிருந்தது! ஆவியின் வரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாயிருந்தது! அழைப்பு வேறு; அபிஷேகம் வேறு.

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை ஊழியத்திற்கென்று அழைக்கிறாரென்றால் கர்த்தரிடத்தில் போராடி பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொள். அவர் உன்னை பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும், அக்கினியினாலும் நிரப்ப ஆவலோடு கூட இருக்கிறார். நீ கேட்க வேண்டியதெல்லாம் ஆண்டவரே, உம்முடைய வாக்குத்தத்தத்தின்படி என்னை அபிஷேகியும் என்பதேயாகும்!

அநேகம்பேர் பரிசுத்த ஆவி உடனே கிடைக்காததினால் சோர்ந்து போய்விடுகிறார்கள். எனக்கு எங்கே கர்த்தர் தரப்போகிறார் என்று எண்ணி விட்டு விடுகிறார்கள்.

ஆனால் வேதமோ, ''கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான்'' என்று வாக்குக் கொடுக்கிறது. ''என் நாமத்தின் நிமித்தம் நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்'' என்று இயேசு சொல்லுகிறார் (யோவான் 14:14). அதேநேரத்தில் நம்முடைய உள்ளத்தில் இடைவிடாத தாகமும், ஊக்கமான வாஞ்சையும், விடாப்பிடியான உறுதியும் இருக்கவேண்டும். வேதம் சொல்லுகிறது, ''தேவன் தம்மை நோக்கி இரவும், பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட

வர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராய் இருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?" (லூக் 18:7). ஆகவே தேவபிள்ளையே, சோர்ந்துபோகாமல் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுவாயாக.

எலிசாவைப் பாருங்கள். அவன் சோர்ந்து போக வில்லை. எலியா பல முறை அவனைப் பார்த்து: நீ இங்கேயே இரு. நான் எரிகோவிற்குப் போகிறேன்; நீ இங்கேயே இரு. நான் பெத்தேலுக்குப் போகிறேன் என்று சொன்னபோதி லும், எலிசா மனம் சோர்வடையாமல் எலியாவை நிழல் போல பின்தொடர்ந்து சென்றான்! இதிலிருந்து எலிசாவி னுடைய உள்ளத்தில் எவ்வளவு தீர்மானமும், எவ்வளவு உறுதியும் இருந்தது என்பதை அறிந்துகொள்ளலாம்.

ஆகவேதான் எலியா அவனைப் பார்த்து நான் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது, இமைப்பொழுதும் தாம திக்காமல் உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய் கிடைக்கும்படி வேண்டுகிறேன் என்றார் (II இராஜா 2:9).

சாலொமோனைப்போல ஞானத்தைக் கேட்கவில்லை. எசேக்கியா ராஜாவைப் போல தன் ஆயுளில் பதினைந்து ஆண்டுகள் வேண்டும் என்று கேட்கவில்லை. அல்லது தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என்று விரும்ப வில்லை. எனக்கு ஆவியின் வரம் இரட்டிப்பாய் வேண்டும் என்பதே அவனுடைய வேண்டுகோளாக இருந்தது.

இரட்டிப்பான வரம் கேட்டதில் ஒருவேளை எலியா விற்கு ஆச்சரியமாய் இருந்திருக்கலாம். ஒருவேளை பொறு மையாக கூட இருந்திருக்கக்கூடும். பொதுவாக ஒரு குருவோ, அல்லது மந்திரவாதியோ தன்னுடைய சிஷ்யப் பிள்ளைக்கு தான் கற்ற எல்லா வித்தைகளையும் சொல்லிக் கொடுக்க விருப்பப்படமாட்டான். முக்கால்பகுதி சொல் லிக்கொடுத்து விட்டு முக்கியமானவைகளை தன்னிடத்

திலேயே மறைத்து வைத்துக் கொள்ளுவான். சிஷ்யன் குருவை மிஞ்சிவிட்டால் என்ன செய்வது? என்ற அச்சம் அவனுக்கு இருக்கும்.

ஆனால் எலிசா கேட்டதன் காரணம் என்ன? பொது வாக இஸ்ரவேல் தேசத்தில் சேஷ்டபுத்திரன் அதாவது மூத்த குமாரன் தகப்பனுடைய ஆஸ்தியில் இரண்டு பங்குக்கு உரிமையுள்ளவன். இங்கே எலியா ஒரு ஆவிக் குரிய தகப்பனல்லவா? எலிசா ஒரு ஆவிக்குரிய மகனாய் இருந்ததினால் இரட்டிப்பான பங்கு கேட்பதற்கு முழு உரிமை அவனுக்கு உண்டு.

புதிய ஏற்பாட்டில் ஆவிக்குரிய தகப்பனாக அப்போஸ் தலனாகிய பவுலையும், விசுவாச குமாரனாக தீமோத்தே யுவையும் நாம் காண்கிறோம். அதுபோலவே பழைய ஏற் பாட்டில் எலியாவும் எலிசாவும் இருந்தார்கள்.

நாம் இயேசுவினுடைய பிள்ளைகள். அவர் நம்மு டைய தகப்பன். கர்த்தர் நமக்கு இரட்டிப்பான ஆசீர் வாதங்களை எப்போதும் வாக்குப் பண்ணியிருக்கிறார். இயேசு சொன்னார், ''என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளை தானும் செய்வான்; இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்'' (யோவான் 14:14). தான் செய்த கிரியைகளின் அளவே நாம் செய்யவேண்டும் என்று அவர் எண்ணாமல், அதை விட அதிகமாக நாம் செய்ய வேண்டும் என்பதே அவருடைய விருப்பமும், எதிர்பார்ப்புமாக இருக்கிறது.

கர்த்தர் நமக்கு இரட்டிப்பான நன்மைகளையும், ஆசீர் வாதங்களையும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அவர் சொல்கிறார், ''அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன்; இன்றைக்கேத் தருவேன்''
(சகரியா 9:12)

இரட்டிப்பான ஆவியின் வரத்தை எலிசா கேட்ட போது எலியா அதற்கு என்ன பதில் சொன்னார் தெரியு மா? அரிதான காரியத்தைக் கேட்டாய் என்றார். இரட்டி

பான வரம் அரிதான ஒருகாரியம். எல்லோருக்கும் அது எளிதாகக் கிடைப்பதில்லை. எளிதாகக் கிடைத்தால் அதற்கு மதிப்போ, அல்லது மேன்மையோ இல்லாமல் போய் விடக்கூடும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தகுதி வேண்டியதாய் இருக்கிறது போல, இரட்டிப்பான வரம் பெற்றுக் கொள்ளுவதற்கும் ஒரு தகுதி வேண்டுமல்லவா?

ஒருவேளை எலியா நினைத்திருக்கக்கூடும், ஆவியின் வரத்தை தேவன் ஒருவர் தானே கொடுக்க முடியும்? தேவனுடைய ஆவியின் வரத்தைச் சாதாரணமாய் வேறு ஒரு மனிதன் வாங்கி இன்னொரு மனிதனுக்குக் கொடுக்க முடியாதே. அவரவருக்கு தேவனாக கொடுக்கிற வரம் தானே அது என்று எண்ணியிருக்கலாம்!

ஆவியின் வரம் அரிதான காரியம்தான். பத்து ஆண்டுகள் எலிசா எலியாவிற்கு ஊழியம் செய்த போதிலும் ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்ளவில்லையே! பழைய ஏற்பாட்டில் ஆவியானவர் நிரந்தரமாக ஒரு மனுஷனில் தங்கியிருப்பது அரிதான காரியம் தான்!

என்றாலுங்கூட எலியா தன்னை விடாமல் பின்பற்றி வந்த எலிசாவிற்கு ஒரு உறுதியை கொடுக்கிறார். இரட்டிப்பான வரம் கிடைப்பது அரிதான காரியமாய் இருந்தாலும்கூட உன்னைவிட்டு நான் எடுத்துக் கொள்ளப்படுகையில் நீ கண்டால் உனக்குக் கிடைக்கும், இல்லாவிட்டால் கிடையாது என்றார் (II இராஜா 2:10).

கர்த்தருடைய சில ஆசீர்வாதங்கள் நிபந்தனை இல்லாமல் கிடைக்கக் கூடியது. சில ஆசீர்வாதங்கள் நிபந்தனையோடு கூடவே நமக்குக் கிடைக்கிறது.

ஒருமனுஷன் தன்னுடைய வாழ் நாளெல்லாம் பரிசுத்தமாய் ஜீவித்துவிட்டு, தன்னுடைய மரணத்திற்கு முன்பு கொடிய பாவத்தில் விழுந்து மரித்தான் என்றால் அவன் அத்தனை காலம் பரிசுத்தமாய் ஜீவித்ததில் அவனுக்குப் பிரயோஜனம் இல்லை. ஒருவன் காலமெல்லாம் கர்த்தருக்கு

ஊழியம் செய்துவிட்டு கிறிஸ்துவினுடைய வருகையில் போது பின்வாங்கிப் போய் விட்டான் என்றால் அவனு டைய ஊழியத்தால் அவனுக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை. மணவாளனுக்காக காத்துக் கொண்டிருக்கும் கன்னிகைகள் எவ்வளவோ ஆயத்தம் செய்திருந்தாலும் மணவாளன் வரும்போது தீவெட்டிகளில் எண்ணெய் இல்லாமல் போனால் அவர்களுடைய வாழ்க்கையில் பிரயோஜனமில்லை.

ஆகவேதான் கர்த்தர் நமக்கு நிச்சயமாக, நீ மரண பரியந்தம் உண்மையுள்ளவனாய் இரு; அப்போது ஜீவகி டத்தை உனக்குத் தருவேன் என்று சொல்லுகிற (வெளி 2:10). மட்டுமல்ல, இயேசு சொன்னார்: "முடி பரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவ எவனோ, அவனுக்கு ஜாதிகள்மேல் அதிகாரம் கொடு பேன்" என்றார் (வெளி 2:26). "முடிவு பரியந்தம் நி நிற்பவனே இரட்சிக்கப்படுவான்" (மத் 24:13).

எலியாவின் அந்த வார்த்தைகள் எலிசாவின் உள்ள தில் ஒரு உறுதியான தீர்மானத்தைக் கொடுத்திருக் வேண்டும். இந்தக் கடைசி நேரத்தில் இவரை நா விட்டு விடக்கூடாது, எங்கே சென்றாலும் அவரைப் பி பற்ற வேண்டும். ஆவியின் வரத்தை எப்படியா பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்திரு பார்.

தேவபிள்ளையே, இரட்டிப்பான வரத்திற்காக அ றைக்கு எலிசா அவ்வளவாக எலியாவைப் பின் பற் யிருப்பாரென்றால் நாம் பரலோகராஜ்யத்தில்சேருவதற் ஆட்டுக்குட்டியானவரை எவ்வளவாகப் பின்பற்ற வே டும்! ஆட்டுக்குட்டியானவர் எங்கே சென்றாலும் அவ பின்பற்றுகிறவர்களே சீயோன் பர்வதத்தில் காணப்ப வார்கள்.

யோர்தான் நதிக்கரையில் இரண்டு தீர்க்கதரிசிக நடந்துபோகிற காட்சியை உங்களுடைய மன

காண்டு வாருங்கள். அவர்கள் இருவரும் பசிக்கொண்டே நடந்து போனார்கள். திடீரென்று க்கினி இரதமும், அக்கினி குதிரைகளும் இறங்கிவந்தன, ருவரையும் பிரித்தன. எலியா சுழல் காற்றில் பரலோகத் ற்கு ஏறிப்போனான்.

எலிசா அதைக் கண்டு "என் தகப்பனே! என் கப்பனே...! இஸ்ரவேலுக்கு இரதமும், குதிரை வீரரு ாய் இருந்தவரே...!" என்று புலம்பினான்.

எலியா வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை வ்வளவு நேரம் எலிசா பார்த்துக்கொண்டிருந்தாரோ தரியாது கொஞ்ச நேரத்திற்குள்ளாக மேலிருந்து லியாவின் சால்வை கீழ் நோக்கி ஆகாயத்திலிருந்து கீழே ந்து கொண்டிருக்கிறதை எலிசா பார்த்தார். மிகுந்த ந்தோஷமாய் சால்வையை ஓடிப்போய் எடுத்துக் காண்டார்.

முதலாவது அந்த சால்வை சில ஆண்டுகளுக்கு முன்பு ன்மேல் போட்டபோது எலிசா தன்னுடைய அழைப் ன் நிச்சயத்தை உணர்ந்தார்! இப்போது அந்தச் ால்வை ஆகாயத்திலிருந்து விழும்போது தேவனுடைய ல்லமையை இரட்டிப்பாய் பெற்றுக்கொண்டார்!

தேவபிள்ளையே, கிறிஸ்தவ மார்க்கத்தில் இரண்டு முக் யமான அனுபவங்கள் உண்டு. பாவ மன்னிப்பின்போது ர்த்தர் இரட்சிப்பின் சால்வையை உன்மேல் வைக்கிறார். ரிசுத்த ஆவியினுடைய அபிஷேகம் பெறும்போது வியின் வல்லமையின் சால்வையை உனக்குத் தரிப்பிக் றார். ஆகவேதான் அப்போஸ்தலனாகிய பவுல் எபேசி ரைப் பார்த்து, "நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த வியைப் பெற்றீர்களா?" என்று கேட்டார் (அப் 19:2).

இரட்சிப்பிலே பாவ மன்னிப்பின் நிச்சயத்தைக் ர்த்தர் உனக்குத் தருகிறார். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்

திலே ஜெய ஜீவியத்தை உனக்கு வாக்கு பண்ணுகிறார்.

அல்லேலூயா

ஒரு சகோதரி தான் இரட்சிக்கப்படும்போது, இயேசு சிவப்பங்கி தரித்தவராய் கடந்து வந்து, அந்தச் சிவப்பு அங்கியினால் அவர்களுடைய பாவங்களையெல்லாம் நீக்கு கிறதைக் கண்டார்களாம். பரிசுத்த ஆவியின் அபிஷேகத் தைப் பெற்றபோது வெண் வஸ்திரம் தரித்தவராய் அரு கில் வந்து பரிசுத்தத்தைத் தருகிறதை தரிசித்தார்களாம்.

எலியாவின் சால்வை ஒன்றுதான். முதலில் அவரு டைய சால்வை தோளில் விழுந்தபோது அது ஊழியத்தை உறுதிப் படுத்தினது. இரண்டாவது முறை ஆகாயத்தி லிருந்து விழுந்தபோது அது ஆவியின் வரத்தை உறுதிப் படுத்தினது.

அன்றைக்கு எலியாவும், எலிசாவும் யோர்தான் நதி கரையில் நடந்து சென்றதைப் போல கிறிஸ்து தமது பூமிக்குரிய வாழ்க்கையின் கடைசி நாளிலே தம்முடைய சீஷர்களோடு நடந்து சென்றார். எருசலேமிலிருந்து பெத் தானியாவிற்குச் சென்ற பிரயாணம் அது சீஷர்கள் படை சூழ இயேசு பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத் துக் கொண்டு போய் ஆசீர்வதித்தார். ஒரு வெண்மேகம் அவரை எடுத்துக் கொண்டது. சீஷர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இயேசு உயர எடுத்துக்கொள்ளப் பட்டார்.

ஒருவேளை சீஷர்களுடைய கண்களிலே ஒரு எதிர் பார்ப்பு இருந்திருக்கக்கூடும் எலியா எடுத்துக் கொள்ளப் படும்போது சால்வை கீழே விழுந்ததைப்போல இயேசு எடுத்துக் கொள்ளப்படும்போது அவருடைய சால் வையோ, அல்லது அங்கியோ விழக்கூடும் என்று ஆவலாய் எதிர்ப்பார்த்திருந்திருப்பார்கள்.

நல்லவேளை இயேசுவின்மேல் இருந்த சால்வையோ அங்கியோ கீழே விழவில்லை. விழுந்திருக்குமென்றால்

இருவரும் ஓடிப்போய் அந்தச் சால்வையின்மேல் விழுந்து அந்தச் சால்வையை ஒன்றும் இல்லாதபடி கிழித்திருந்திருப்பார்கள். சால்வையின் ஒவ்வொரு துண்டையும் கையில் வைத்துக்கொண்டு இயேசுவின் வாரிசு நான்தான். எனக்குத்தான் ஆவியின் இரட்டிப்பானவரம் என்றெல்லாம் சொல்லியிருந்திருப்பார்கள்'

நல்லவேளை இயேசுவின்மேல் இருந்த சால்வை கீழே விழவில்லை. ஆனால் சீஷர்கள் பெந்தேகொஸ்தே நாளில் ஓர் இடத்தில் ஒருமுகமாய் கூடியிருந்தபோது எலியாவின் சால்வையைப் போல பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கி வந்தார். மேல் வீட்டு அறையில் கூடியிருந்த 120 பேரையும் ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகித்தார். ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படி பல்வேறு பாஷைகளில் பேச ஆரம்பித்தார்கள். அதைத் தொடர்ந்து அற்புதங்கள் தொடர்ச்சியாய் நிகழ ஆரம்பித்தது. கிறிஸ்து செய்த அற்புதங்களைச் சீஷர்களும் செய்ய ஆரம்பித்தார்கள். சப்பாணிகளை எழுப்பினார்கள், குருடர்களை சொஸ்தமாக்கினார்கள், மரித்தோரை எழுப்பினார்கள், வல்லமையாய் பிரசங்கித்து ஆத்துமாக்களை ஆயிரக்கணக்கில் ஆதாயம் செய்தார்கள் (அப் 2:1-4).

தேவபிள்ளையே, எலிசாவின் தேவன் பட்சபாதமுள்ளவரல்ல, அவர் உன்னைத் தம்முடைய வரங்களினாலும், வல்லமையினாலும் நிரப்ப வல்லமையுள்ளவராய் இருக்கிறார். எலிசாவின் உள்ளத்திலிருந்த வாஞ்சையைப்போல ஆவியின் வரங்களுக்காக வாஞ்சித்து கதறுவாயாக! எலிசா பெற்றுக் கொண்டதைப்போல நீயும் நிச்சயமாய் பெற்றுக்கொள்ளுவாய்! ஆவியின் வரங்களோடு வல்லமையாக கர்த்தருக்காக எழும்பி பிரகாசித்து ஊழியம் செய்வாயாக! கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக!

தண்ணீர் ஆரோக்கியமானது!

"அந்த பட்டணத்தின் மனுஷர் எலிசாவை நோக்கி: இதோ எங்கள் ஆண்டவன் காண்கிறபடி இந்த பட்டணம் குடியிருப்புக்கு நல்லது; தண்ணீரோ கெட்டது; நிலமும் பால் நிலம் என்றார்கள். அப்பொழுது அவன் ஒரு புது தோண்டியை எடுத்து அதிலே உப்பு போட்டுக் கொண்டு வாருங்கள் என்றான். அதை அவனிடத்தில் கொண்டு வந்தபோது அவன் நீரூற்றண்டைக்குப் போய் உப்பை அதிலே போட்டு இந்த தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன். இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்கிறார் என்றான் எலிசா சொன்ன வார்த்தையின் படியே அந்த தண்ணீர் இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி ஆரோக்கியமாயிற்று"

(II இராஜா 2:19-22)

எலிசா செய்த இரண்டாம் அற்புதம் இதுதான். கெட்ட தண்ணீரை ஆரோக்கிய தண்ணீராய் மாற்றினார். பிரயோஜனமற்ற தண்ணீர் தேவ ஊழியனின் கையினால் சுவைமிக்க ஆசீர்வாதமான தண்ணீராயிற்று.

எரிகோ பட்டணம் பார்ப்பதற்கு மிகவும் அருமையான பட்டணம். குடியிருப்புக்கும் நல்ல பட்டணம்தான். ஒரு வேளை பண வசதியுள்ள, செழிப்பான பட்டணமாகக் கூட இருந்திருக்கக்கூடும். அந்தப் பட்டணத்தைக் கட்ட தீர்மானித்த பொறியியல் வல்லுனர்கள், இஞ்சினியர்கள் மிகவும் அழகாக திட்டமிட்டு நல்ல முறையில் கட்டியிருந்திருக்கக்கூடும்.

அங்கு தண்ணீர் இருந்தது. கிணறுகள் இருந்தன. நீரூற்றுகள் இருந்தன. ஆனால் எல்லாத் தண்ணீருமே கெட்டுப்போன தண்ணீர். வியாதிகளை உண்டாக்கக்கூடிய தண்ணீர். ஆரோக்கியமற்ற தண்ணீர்.

ஒரு பட்டணத்திற்கு தண்ணீர் ஜீவநாடி அல்லவா? தண்ணீர் இல்லாமல் மக்கள் என்ன செய்யக்கூடும்? அந்தத் தண்ணீர் சுகாதாரத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் கெடுதல் உண்டாக்கும் என்றால் ஒன்று ஜனங்கள் பட்டணத்தை விட்டு வேறு இடத்திற்குச் சென்று விட வேண்டும்; அல்லது அந்தத் தண்ணீர் உண்டாக்குகிற நோயினால் செத்து மடிய வேணடும்!

முதல்முறையாக யோசுவா எரிகோவிற்குள் பிரவேசித்தபோது எரிகோ பட்டணத்தைச் சபித்தான். ஆனால் இப்பொழுதோ எத்தனையோ நூறு ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும், அந்த சாபம் இப்பொழுது தண்ணீரைப் பிடித்திருக்கிறதோ என்று ஜனங்கள் எண்ணினார்கள், அந்தச் சாபத்தை நீக்கும் வழி அவர்களுக்குத் தெரியவில்லை.

இப்படித்தான் இன்றைக்கு அநேகரின் உள்ளத்திலுள்ள தண்ணீராகிய எண்ணங்கள் கெட்டுக்கிடக்கின்றன. தங்களுடைய முன்னேற்றத்திற்காக பல திட்டங்களைத் தீட்டுகிறார்கள். பல வழிகளிலும் சம்பாதிக்கிறார்கள். ஆனாலும் உள்ளத்தின் ஆழத்தில் சமாதானம் இல்லாமல், வேதனையோடு வாழ்க்கை நடத்துகிறார்கள். உள்ளத்தில் ஜீவத் தண்ணீருள்ள தேவனுடைய நதிகள் பாயாவிட்டால் மன அமைதி இருப்பதில்லை. நான் எவ்வளவுதான் சம்பாதித்து என்ன பிரயோஜனம்? என் உள்ளத்தில் அமைதி இல்லையே என்று சொல்லுகிறார்கள்.

ஒரு மனுஷன் வெளிப்பார்வைக்கு எவ்வளவோ படித்திருந்தாலும், செல்வாக்கு இருந்தாலும் அவனுடைய உள்ளம் கறைபட்டிருக்குமேயென்றால் அவனுடைய வாழ்க்கை சாபமாகவே விளங்கும். உள்ளத்தின் ஆழத்திலுள்ள எண்ணங்களாகிய தண்ணீர் எப்படி இருக்கிறது? இயேசு சொன்னார், "இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகிறவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும். கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்

களும், களவுகளும், பொய்சாட்சியும், தூஷணமும் புறப்பட்டு வரும்'' (மத் 15:20).

இந்தத் தீட்டிலிருந்து விடுபடுவது எப்படி? சாபத்தீட்டான தண்ணீரை ஆரோக்கியமாக்குவது எப்படி? வேதனையை நீக்கி ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவது எப்படி?

அன்றைக்கு அந்தப் பட்டணத்திலிருந்த மக்கள் எலிசாவை நோக்கி ஓடிவந்தார்கள். எலிசா ஒரு விஞ்ஞானி அல்ல; எலிசா ஒரு ஆராய்ச்சியாளரல்ல; எலிசா ஒரு அனுபவமுள்ளவரும் அல்ல; ஆனால் எலிசா ஒரு தேவ மனுஷன் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். தேவனால் மாத்திரமே இந்த சாபம் நீங்கும் என்பதை அவர்கள் நிச்சயமாய் உணர்ந்திருந்தார்கள்.

முன்பெல்லாம் எலியாவையோ, அல்லது விசேஷ வரம் பெற்றவர்களையோ, தீர்க்கதரிசிகளையோ காண்பது என்பது ஒரு அரிதான காரியம். காரணம் ஆகாப் அவர்களை வேட்டையாடினான். எலியா தன் வாழ்க்கையில் பெரும் பகுதி ஒளிந்திருக்கவேண்டியதாயிற்று. ஆனால் இன்று எலிசாவோ எல்லாரும் கிட்டிச் சேரக்கூடிய அளவுக்கு ஜனங்களின் மத்தியிலே வாசம் பண்ணுகிற வனாய் இருந்தான். ஆகவே ஜனங்கள் விடுதலையோடு அவனிடத்தில் வந்து தங்களுடைய பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்ளமுடிந்தது.

தேவபிள்ளையே, புதிய ஏற்பாட்டில் நம்முடைய ஆண்டவர் இன்னும் அதிகமாக நம் அருகில் இருக்கிறார். நாம் அவரை நோக்கிக் கூப்பிடும்போது நமக்கு அவர் சமீபமாய் இருக்கிறார் மட்டுமல்ல, அவர் நமக்குள்ளே வாசம்பண்ணி, நமக்குள்ளே உலாவுகிறார். பரம எலிசாவாகிய நம் தேவன், எலிசா செய்த அற்புதங்களைப் பார்க்கிலும் மேன்மையான அற்புதங்களைச் செய்ய வல்லமையுள்ளவர். அந்த இயேசு சொல்லுகிறார், ''என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனோ அவனுடைய உள்ளத்

தில் இருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்'' என்றார் (யோவான் 7:38).

முன்பு தீட்டான எண்ணங்கள் ஓடின. இருதயத்தில் இனி பரிசுத்த ஆவியாகிய நதிகள் ஓடும்! அது உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தும்! வாழ்க்கையை கிறிஸ்துவின் சாயலில் மறுரூபமாக்கும்! தேவபிள்ளையே, கிறிஸ்து அந்த வாக்குத்தத்தத்தை உனக்குத் தருகிறார்.

அன்றைக்கு எலிசா தண்ணீரை ஆரோக்கியமான தண்ணீராய் மாற்றுவதற்குச் செய்தது என்ன தெரியுமா? ஒரு புது தோண்டியை எடுத்து, அதில் உப்பைப் போட்டு நீரூற்றிலே போட்டான். கர்த்தர் உடனே அங்கே அற்புதத்தைச் செய்தார். அந்தத் தண்ணீர் உடனே ஆரோக்கியமான தண்ணீரானது.

நமக்குத் தேவை புதிய தோண்டியும், உப்பும்தான். பழைய ஏற்பாட்டிலே பழைய பிரமாணமாக நியாயப் பிரமாணம் இருக்கிறது. ஆனால் அது ஒரு மனுஷனை கற்பனைகளின்படி குற்றவாளியாய்த் தீர்க்குமே தவிர கிருபை கொடுப்பதில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டிலோ கிறிஸ்து நமக்கு புதிய பிரமாணமாய் இருக்கிறார். நாம் அவருக்குள் உப்பாய் இருக்கிறோம்.

ஆம், பாவத்தில் பாழடைந்து கிடக்கும் இவ்வுலகத்தைச் சீர்படுத்த கிறிஸ்துவும், கிறிஸ்தவர்களும் தேவை. புது தோண்டியும். உப்பும் தேவை.

நீங்களே பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள் என்று இயேசு உங்களைப் பார்த்து சொல்லுகிறார் (மத் 5:13). 'உப்பில்லாத பண்டம் குப்பையிலே' என்பது பழமொழி அல்லவா! அப்படியே கிறிஸ்தவர்கள் அல்லாத உலகமும் குப்பைக்குத்தான் சமானமாய் இருக்கும். தேவபிள்ளையே, இவ்வுலகம் சீரடைய வேண்டுமானால் விசுவாசிகள் சாரமுள்ள உப்பாக காணப்படவேண்டும்.

இந்தியாவிற்கு நாம் உப்பைப் போல இருக்கிறோம். காலா காலமாய் சாபத்தை அனுபவித்துவருகிற நம்முடைய தேசம், காலா காலமாய் அறியாமையிலும், வெறுமையிலும் ஓடுகிற நம்முடைய தேசம் ஆரோக்கியடைய, உப்பாகக்கரையும் உண்மைக் கிறிஸ்தவர்கள் தேவை!

சாதாரணமாக சோற்றுக்கோ, உணவு வகைளுக்கோ உப்பு நிறைய போடுவதில்லை. மிகக் குறைந்த அளவே உப்பை அதில் சேர்ப்பார்கள். மூன்று சதவீதம் உப்பு போதும் உணவு அத்தனையையும் சுவையாக்குவதற்கு. இன்றைக்கு கிறிஸ்தவர்கள் இந்தியாவில் ஏறக்குறைய மூன்று சதவீதம் இருக்கிறோம். நாம் உப்பாக கர்த்தருக்காக கரைந்துபோக ஒப்புக் கொடுப்போமென்றால் நிச்சயமாகவே நம்முடைய தேசம் ஆசீர்வதிக்கப்படும்.

கர்த்தர் வெறும் உப்பை அல்ல, புதுத் தோண்டியிலுள்ள உப்பையே எதிர்பார்க்கிறார். ஆம், கிறிஸ்துவிலுள்ள கிறிஸ்தவர்களாகவும், கிறிஸ்துவின் சித்தத்தின்படி செய்கிற கிறிஸ்தவர்களாகவும் விளங்கும்பொழுதுதான் நம்முடைய தேசத்தில் அற்புதங்கள் நிகழும்.

தேவபிள்ளையே, நீ உப்பாக விளங்குவாயா? சாபத்தை நீக்கி ஆரோக்கியத்தை தேசத்தில் கொண்டு வருவாயா? கர்த்தர் உன்னை ஆசீர்வாதமாக உபயோகிப்பாராக!

அத்தியாயம் 5

நியாயத்தீர்ப்பின் வார்த்தை!

"அவன் அவ்விடத்தைவிட்டுப் பெத்தேலுக்குப் போனான்; அவன் வழிநடந்து போகையில் பிள்ளைகள் பட்டணத்திலிருந்து வந்து, அவனைப் பார்த்து: மொட்டைத்தலையா ஏறிப்போ, மொட்டைத்தலையா ஏறிப்போ என்று சொல்லி நிந்தித்தார்கள்.

அப்பொழுது அவன் திரும்பி அவர்களைப் பார்த்து கர்த்தரின் நாமத்திலே அவர்களை சபித்தான். உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து, அவர்களில் நாற்பத்திரண்டு பிள்ளைகளைப் பீறிப்போட்டது" (IIஇராஜா 2:23,24).

நம்முடைய தேவன் அன்புள்ளவர்தான், ஆனால் அதே நேரத்தில் அவர் பட்சிக்கிற அக்கினியாகவும் இருக்கிறார் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

நம்முடைய தேவன் அற்புதங்களைச் செய்கிறவர்தான், அதே நேரத்தில் பூமியில் நியாயத்தீர்ப்பையும் செலுத்துகிறவர் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

நம்முடைய தேவன் விபச்சாரத்தில் சிக்குண்ட பெண்ணுக் விடுதலை தருவதற்காக மனதுருக்கத்தோடு தரையில் ஏதேதோ எழுதினார். அதே நேரத்தில் பெல்ஷாத்சார் என்ற ராஜா குடித்து வெறித்துக் கொண்டிருந்தபோது சுவரிலே மெனே மெனே தெக்கேல் உப்பார்சின் என்று எழுதி நியாயத்தீர்ப்பை அவன் மேல் செலுத்தினார். அன்று இரவு அவன் கொலை செய்யப்பட்டு மரித்தான்.

நாம் மேலே வாசித்த வேத பகுதியிலே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு பெத்தேலிலுள்ள சிறுவர்கள் மேல் வந்தது என்பதை அறிகிறோம். பெத்தேல் கர்த்தருடைய பிரசன்னம் உள்ள ஒரு இடம். அங்குதான் யாக்கோபு

தேவனுடைய ஏணியானது பூமிக்கும், வானத்திற்கு மிடையே வைக்கப்பட்டிருந்ததைத் தரிசித்தான். அந்த இடத்தில் ஒரு தூணை நட்டு அதன்மேல் எண்ணெய் வார்த்து, அந்த இடத்திற்கு பெத்தேல் என்று பெயரிட்டான். காலாகாலமாய் அந்த இடம் கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்கிறவர்களின் ஐக்கியம் நிறைந்த இடமாயும் இருந்தது.

ஆனால் காலம் சென்றபோதோ, அங்கு இருந்த ஜனங்கள் கர்த்தரை விட்டு தூரமாய் போனது மாத்திரமல்ல, தங்களுடைய பிள்ளைகளுக்கு அவலட்சணமான பாடல்களைக் கற்றுக் கொடுத்தார்கள். தேவனுடைய தீர்க்கதரிசிகளை புண்படுத்துகிற வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்து கேடு உண்டாக்கினார்கள். ஆகவே சிறுவர்கள் தேவனுடைய ஊழியர்களை கேலியும், பரியாசமும் செய்வதற்குத் துணிகரம் கொண்டார்கள்.

வேதம் சொல்லுகிறது, ''எலியா வழிநடந்து போகையில் பிள்ளைகள் பட்டணத்திலிருந்து வந்து அவனைப் பார்த்து: மொட்டைத் தலையா ஏறிப்போ, மொட்டைத் தலையா ஏறிப்போ என்று சொல்லி நிந்தித்தார்கள்'' (II இராஜா 2:23).

ஒருவேளை அந்தப் பட்டணத்தில் இருந்த ஜனங்கள் பாகாலை வழிபடுகிறவர்களாய் இருந்திருக்க வேண்டும். பாகால் தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக எலியா கர்மேல் பர்வதத்தில் ஏறியது அவர்களுடைய உள்ளத்தில் பழி வாங்கும் எண்ணத்தை உருவாக்கியிருந்திருக்க வேண்டும். எலியா கர்மேல் பர்வதத்தில் ஏறிப்போனான். பிறகு அக்கினி இரதத்தின் மேல் ஏறி பரலோகத்திற்கு ஏறிப் போனான். அவனுடைய சீஷனாகிய நீயும் எங்கேயாவது ஏறி போகக்கூடாதா? ''மொட்டைத்தலையா நீயும் ஏறிப் போ'' என்பதே அவர்களுடைய பரியாசத்தின் பொருளாய் இருந்தது.

ஜீவனுள்ள தேவனை விட்டு விட்டு பாகாலைப் பின் பற்றினது மாத்திரமல்ல, தேவனுடைய ஊழியர்களையும் நிந்தித்து, அவமானப்படுத்த அவர்கள் தீர்மானித்தார்கள். தன் வழியாக அமைதியாக சென்று கொண்டிருந்த தேவனுடைய தீர்க்கதரிசியை கேலி செய்ய துணிகரம் கொண்டு பட்டணத்தில் இருந்து சிறுவர்களை அனுப்பி யிருப்பார்களானால் அவர்கள் எவ்வளவு கொடியவர் களாய் இருந்திருக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு காலத்தில் சாபமாய் இருந்த எரிகோவிற்கு தேவனுடைய ஊழியனான எலிசாவினால் ஆசீர்வாதமும், ஆரோக்கியமும் வந்தது. அதே நேரத்தில் ஒரு காலத்தில் ஆசீர்வாதமாய் இருந்த பெத்தேலோ தேவ ஊழியனாகிய எலிசாவின் மூலம் சாபத்தை வரவழைத்துக் கொண்டது.

எலிசா அந்தப் பிள்ளைகளைச் சபித்தபோது கர்த்தர் அந்த வார்த்தைகளைக் கனம் பண்ணினார். ஏனென்றால் கர்த்தர் ஆபிரகாமின் மூலமாக வாக்குத்தத்தம் செய்திருக் கிறார் அல்லவா? உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப் பேன்; உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன் (ஆதி 12:3). அப்படியே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து பிள்ளைகளில் நாற்பத்திரண்டு பேரை பீறிப் போட்டது.

தேவபிள்ளையே, ஒருபோதும் தேவனுடைய ஊழியர் களை நிந்திக்காதே. ஒருபோதும் அவர்களை மனமடிவாகப் பேசாதே! அவர்களைக் கண்ணீர் சிந்த வைக்காதே! அவர் கள் உள்ளத்தில் படுகிற ஒவ்வொரு வேதனையும், சிந்துகிற கண்ணீரும், பெருமூச்சும், உனக்கும் உன் குடும்பத்திற்கும் சாபமாய் மாறும் என்பதை மறந்து போகாதே. எந்த தேவனுடைய ஊழியக்காரனையாவது நீ புண்படுத்தியிருந் தால் உடனே அவர்களுடைய பாதங்களில் விழுந்து மன்னிப்பைப் பெற்றுக்கொள்.

உன் பக்கம் நியாயம் இருந்தாலும், கர்த்தர் உன்னுடைய நியாயத்தைப் பொருட்படுத்தாமல், நீ தேவ ஊழியனை நிந்தித்தபடியினால் உன்னையே குற்றப்படுத்துவார் அது கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கென்று தேவன் கொடுத்திருக்கிற ஒரு விசேஷித்த வாக்குறுதி! ஊழியக்காரனைப் பார்த்து கர்த்தர் சொல்லுகிறார், "உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய். இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்திரமும், என்னாலுண்டான, அவர்களுடைய நீதியுமாய் இருக்கிறது" என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசா 54:17).

புதிய ஏற்பாட்டில் கனி கொடுக்காதிருந்த அத்தி மரத்தைக் கர்த்தர் சபித்தார். கொஞ்ச நேரத்திற்குள்ளெல்லாம் அந்த அத்தி மரம் வேரோடு பட்டுப் போயிற்று. கிறிஸ்துவினுடைய வார்த்தைகளைப் புறக்கணித்த கப்பர்நகூமையும் கர்த்தர் சபித்தார். "வான பரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்" என்றார். கப்பர்நகூம் ஒன்றும் இல்லாமல் அழிந்து போனது!

கிறிஸ்துவினுடைய சுவிசேஷம் கிருபையையும், ஜீவனையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொண்டு வருகிறது உண்மைதான். அதே நேரத்தில் அந்த சுவிசேஷத்தை புறக்கணித்துத் தள்ளி கேலியும், பரியாசமும் செய்யும்போது, அதே சுவிசேஷமே சாபத்தைக் கொண்டு வரும் என்பதை மறந்து போகாதே!

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், "இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும் நாங்கள் தேவனுக்கு கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருக்கிறோம்" (II கொரி 2:15,16).

எனக்கு ஒரு ஊழியரைத் தெரியும். ஒருமுறை அவர் தெருவிலே நின்று பிரசங்கித்தபோது, மூன்று வாலிபர்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்து அவருடைய பிரசங்கத்தை உடனே நிறுத்தும்படி உத்தரவிட்டார்கள். ஆனால் அவரோ தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். கோப முற்ற வாலிபர்கள் அவரை ஓங்கி அறைந்து தரையில் வீழ்த்தினார்கள். மனமுடைந்த அவர் ஒரு அறைக்குள் சென்று பூட்டிக் கொண்டு தேவனை நோக்கி அழுது: ஆண்டவரே, ஏன்னை உம்முடைய ஊழியத்திற்கு அழைத் தீரே, என்னை இந்த வாலிபர்கள் அவமானபடுத்திவிட்டார் களே என்று சொல்லி கண்ணீர் விட்டார். ஊழிய ரின் கண்ணீரின் துளிகள் அந்த வாலிபருக்கு சாபத்தின் ஆயுதங்களாய் மாறினது. அவரை அடித்த ஒருவன் அன்றே விபத்தில் சிக்கி மரித்தான். மற்ற ஒருவனுக்கு பைத்தியம் பிடித்தது. மூன்றாவது ஆளுக்கு தன்னுடைய இருதயத்தில் கலக்கம் அதிகமாய் இருந்தபடியினால் போத கருடைய கால்களிலே வந்து விழுந்து கண்ணீரோடு மன் னிப்புக் கேட்டு மனம் திரும்பினான். அவன் இயேசுவை ஏற்றுக் கொண்டபடியினால் அவனுடைய வாழ்க்கை தப்பியது.

இயேசு தன்னுடைய சீஷர்களைப் பார்த்துச் சொன் னார்: "உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான்" (மத் 10:40). "எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாம லும் போனால் அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும்போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப் போடுங்கள். நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகு வாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன்" (மத் 10:14,15) என்றார்.

கர்த்தர் எப்போதும் தம்முடைய ஊழியக்காரர்களின் பட்சத்தில் நிற்கிறார். கர்த்தர் கட்டளையிட இரண்டு

கரடிகள் வந்து பிள்ளைகளைப பீறிப்போட்டது. அன்று தம்முடைய ஊழியனுகிய தானியேனுக்காக சிங்கங்களின் வாயைக் கட்டிய கர்த்தர், தீர்க்கதரிசியாகிய எலிசாவிற்காக இரண்டு கரடிகளின் வாயைத் திறந்து, நிந்தித்த பிள்ளைகளை பீறிப் போடச் செய்தார். ராஜாவாகிய எசேக்கியாவின் ஜெபத்தைக் கேட்டு ஒரு தேவதூதனை அனுப்பி அசீரியரில் 1,85,000 பேரைச் சங்கரித்தார். கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்க கரடிகளும், சிங்கங்களும், வெட்டுக்கிளிகளும், பெரிய பெரிய மீன்களும், தேவ தூதர்களும் எப்போதும் ஆயத்தமாய் இருக்கிருர்கள். உன்னதமான தேவனுக்கு ஊழியம் செய்வது எவ்வளவு பெரிய பாக்கியம்!

அன்றைக்கு பெத்தேலில் ஒரு பெரிய அழுகுரல் எழும்பியிருந்திருக்கக் கூடும். ஆனல் அந்த அழுகுரல் காலாகாலமாய் தேவனுடைய ஊழியக்காரர்களை நிந்திக்கிறவர்களுக்கு ஒரு எச்சரிப்பின் சத்தமாய் இன்றைக்கும் தொனித்துக் கொண்டிருக்கிறது.

அத்தியாயம் 6

கர்த்தரின் பார்வைக்கு அற்ப காரியம்!

"இஸ்ரவேலின் ராஜாவும், யூதாவின் ராஜாவும், ஏதோமின் ராஜாவும் சேர்ந்து போனார்கள். ஆனாலும் அவர்கள் ஏழு நாள் சுற்றித் திரிந்தபோது, அவர்களைப் பின் செல்லுகிற இராணுவத்துக்கும், மிருக ஜீவன்களுக்கும் தண்ணீர் இல்லாமல் போயிற்று... அதற்கு எலிசா, கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள். நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருக ஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்கிறார்; கர்த்தரின் பார்வைக்கு இது அற்ப காரியம்; மோவாபியரையும் உங்கள் கையிலே ஒப்புக்கொடுப்பார்"

(II இராஜா 3:9,16,17).

வேதத்திலுள்ள இந்தப் பகுதியை நாம் வாசிக்கும்போது தேவன் எவ்வளவு வல்லமையுள்ளவர் என்பதையும், அவருக்கு முன்பாக நமது பிரச்சனைகளெல்லாம் அற்ப காரியம் என்பதையும் நாம் உடனே அறிந்துக் கொள்ளலாம்.

மூன்று ராஜாக்கள் அதாவது இஸ்ரவேலின் ராஜா, யூதாவின் ராஜா, ஏதோமின் ராஜா சேர்ந்து மோவாபிய ராஜாவை எதிர்த்து யுத்தம் செய்யும்படி புறப்பட்டார்கள். ஆனால் அவர்கள் வனாந்திர மார்க்கமாய் ஏழு நாட்கள் சுற்றித்திரிந்தபடியால் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்காமல் தவிக்கலானார்கள். இராணுவத்திற்கும் மிருக ஜீவன்களுக்கும் கொஞ்சமும் தண்ணீர் இல்லாமல் போய்விட்டது.

தேவபிள்ளையே, உன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும்கூட இருண்ட நேரங்கள் வருகிறதல்லவா? மூன்று ராஜாக்களைப் போல உன் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் சோர்வு ஏற்பட்டு இந்த கிறிஸ்தவ ஜீவியம் செய்யமுடியுமா என்ற சந்தேகம் எழும்புகிறதல்லவா? நீயும், உன் குடும்பத்தினரும் பாடுகளின் வழியாகவும், நிந்தைகளின் வழியாகவும் கடந்து செல்ல வேண்டியிருக்கிறதல்லவா? வறுமை வாழ்க்கையில் தவிக்கிறாயோ?

அந்த மூன்று ராஜக்களும் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி எலிசா தீர்க்கதரிசியிடம் சென்றார்கள். இன்றைக்கும் தேவபிள்ளையே, உன்னுடைய பிரச்சனை நேரங்களில் உலகப் பிரகாரமான மனுஷரிடத்தில் ஓடாமல், தேவனுடைய பாதங்களை நோக்கியே ஓடுவாயாக! உனக்காக! பாரமெடுத்து ஜெபிக்கும் தேவ ஊழியரை நோக்கிச் செல்வாயாக! அப்பொழுது நீ அற்புதத்தைப் பெற்றுக்கொள்வாய்!

விசுவாசமற்ற சந்ததிக்கு தேவன் எழுப்பிய தேவ மனுஷன்தான் எலிசா. கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் என்று மேன்மை பாராட்டுகிற தீர்க்கதரிசி தான் எலியா (II இராஜா 3:14).

மட்டுமல்ல, கர்த்தருடைய வார்த்தை அவனிடத்திலிருக்கிறது என்று சாட்சி பெற்றவராக இருந்தார். (II இராஜா 3:12). ஜெபத்தில் கர்த்தருக்கு முன்பாக நிற்கிற அவர் தேவனுடைய வார்த்தைகளைக் கர்த்தரிடத்தில் வாங்கி ராஜாவிற்கு அறிவிக்கிறவராய் இருந்தார்.

எலிசா சொன்ன தீர்க்கதரிசனம் இதுதான். இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள் இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும், இது கர்த்தருடைய பார்வைக்கு அற்ப காரியம் (II இராஜா 3;16,17). அந்தத் தீர்க்கதரிசனத்தைத் தொடர்ந்து கர்த்தர் உடனே அற்புதங்களைச் செய்தார்.

என் உள்ளத்தை மிகவும் தொட்ட ஒரு வேத வசனம், "இது கர்த்தருடைய பார்வைக்கு அற்ப காரியம்" என்பதே!

நம்முடைய தேவன் மிகப் பெரியவராய் இருக்கிறபடியினால், வானத்தையும், பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ளவராய் இருக்கிறபடியினால், நம்முடைய பிரச்சனை எவ்வளவு பெரியதாய் இருந்தாலும் அது கர்த்தருடைய பார்வைக்கு அற்ப காரியமாகவே இருக்கிறது!

சில கல்நெஞ்சர்களையும், முரடர்களையும் நாம் பார்க்கும் போது, யார் இரட்சிக்கப்பட்டாலும் இவர்கள் இரட்சிக்கப்படமாட்டார்கள் என்று எண்ணுவதுண்டு. ஆனால் அவர்களை இரட்சிப்பது கர்த்தருக்கு முன்பாக ஒரு அற்ப காரியம். அவர் அவர்களை மெழுகுபோல உருகச்செய்கிறவர்; கற்பாறையைப்போல உள்ள கடின உள்ளங்களை ஆட்டுக்குட்டியைப்போலத் துள்ளப்பண்ணுகிறவர்.

ஒரு காலத்தில் நான் கர்த்தருடைய ஊழியக்காரனாய் மாறுவேன் என்பது, நம்பமுடியாத ஒரு காரியமாய் இருந்தது. ஆனால் கர்த்தரோ என்னை இரட்சிப்பிற்குள் கொண்டு வந்தது மாத்திரமல்ல, அவருடைய மகிமையான ஊழியத்தில் என்னை நிலைநிறுத்தினார். அது அவருக்கு முன்பாக அற்ப காரியம். என்னுடைய பார்வையில் மலைபோல இருந்தவைகளெல்லாம் கர்த்தருடைய பார்வையில் பனியைப்போல உருகி போயிற்று. தேவபிள்ளையே, உன்னுடைய பிரச்சனைகள் உனக்கு முன்பாக எவ்வளவு பெரியதாய் இருந்தாலும், அது கர்த்தருக்கு முன்பாக அற்ப காரியமாய் இருக்கிறது என்பதை மறந்துபோகாதே.

வனாந்தரத்தில் மூன்று பெரிய ராஜாக்களின், திரளான சேனை வீரர்களின் படை திரண்டு நிற்கிறதை சிந்தித்துப் பாருங்கள்! முழு இராணுவத்திற்கும், குதிரைகளுக்கும், யானைப் படைகளுக்கும், மற்ற மிருக ஜீவன்களுக்கும் தண்ணீர் இல்லாமல் போயிற்று. ஏழு நாட்கள் தண்ணீர்

கிடைக்காமல் அலைந்திருப்பார்களென்றால் அவர்கள் நிலை எத்தனை பரிதாபமாய் இருந்திருக்கும்! முழு இராணுவமும் அநியாயமாய் வனாந்தரத்திலே மரிக்கவேண்டிய ஒரு சூழ் நிலைதான்.

ஒருவேளை அவர்கள் முயற்சித்து தண்ணீர் கிடைக்கு மென்றாலும் அது அவ்வளவு பெரிய இராணுவத்திற்கு நிச்சயமாகவே போதுமானதாக இருக்கமுடியாது. திரும்பிச் செல்லவும் அவர்களுக்குப் பெலன் இல்லை. அவர்களுக்கு தண்ணீர் பிரச்சனை ஒரு பெரிய பிரச்சனை? மனித ஞானத்தால் தீர்க்கமுடியாத பிரச்சனை!

ஆனால் எலிசா சொல்லுகிறார். இது கர்த்தருடைய பார்வைக்கு அற்ப காரியம். ஏன் அது அற்ப காரியம்? நம்முடைய தேவன் சர்வ வல்லமையுள்ள தேவன். அவர் செய்ய நினைக்கிறது ஒருபோதும் தடைபடாது. சூரியனை நிறுத்தி யோசுவாவுக்காக யுத்தம் செய்த கர்த்தருக்கு, தண்ணீர் கொடுப்பது ஒரு அற்ப காரியம் அல்லவா?

1. சர்வ வல்லமையுள்ள தேவனும், அற்ப காரியங்களும்:-

ஆபிரகாமிற்கு 99 வயது ஆனபோது, கர்த்தர் ஆபிரகாமிற்கு தரினமாகி நான் சர்வ வல்லமையுள்ள தேவன் என்று சொல்லி தன்னை வெளிப்படுத்தினார் (ஆதி 17:1)

கர்த்தர் ஆபிரகாமோடே பேசி உனக்கு ஒரு குமாரனை தருவேன். ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாக ஆசீர்வதிப்பேன் என்றார். ஆபிரகாம் விழுந்து நகைத்து நூறு வயதானவனுக்கு பிள்ளைப் பிறக்குமோ என்று தன் இருதயத்தில் சொன்னான். சாராளும் தன் உள்ளத்தில் நகைத்து நான் கிழவியும், என் ஆண்டவர் முதிர் வயதுமுள்ளவர் என்றாள் (ஆதி 17:17,18:12).

ஆனால் சர்வல்லமையுள்ள கர்த்தர் தாம் சொன்னபடியே வானத்தின் நட்சத்திரங்களைப் போல விசுவாச சந்ததியையும், அவர்களுக்கு கானான் தேசத்தையும் கொடுத்தார்! ஆம் அவர் முடியாதவைகளை முடிய வைக்

கிற தேவன்! ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்கிற தேவன்!

மோசேயோடுகூட இருக்கிறவராகவே இருக்கிறேன் என்று தம் நாமத்தைக் கூறி மோசேயும், பார்வோனும் அதிசயிக்கக்கூடிய காரியங்களை அற்ப காரியமாய், சாதாரண நிகழ்ச்சியாய் நிறைவேற்றினார்.

மரித்த லாசருவை உயிரோடு எழுப்புவது என்பது முடியாத ஒன்றுதான். நான்கு நாள் ஆயிற்றே, நாறுமே என்று மார்த்தாள் சந்தேகப்பட்டாள். ஆனால் அவனை உயிர்ப்பிப்பது கர்த்தருக்கு முன்பாக ஒரு அற்ப காரியம் தான். "லாசருவே வெளியே வா" என்று கர்த்தர் சொன்ன ஒரு வார்த்தை உடனே அற்புதத்தை நிகழ்த்தினது. பாதாளமும், மரணமும், தங்கள் பிடியை கூட விட்டுவிட்டது. தன் வார்த்தைகளினாலே உலகங்களை உண்டாக்கினவருக்கு முன்பாக இந்த அற்புதம் சிறிய காரியமல்லவா!

2. **உன் பிரச்சனைகள் கர்த்தருக்கு முன்பாக அற்ப காரியமே:-**

தேவபிள்ளையே, நீ ஆவிக்குரிய ஜீவியத்தில், தேவன் விரும்புகிற பரிசுத்தமான ஜீவியத்தில் முன்னேற முடியாமல் அநேக பிரச்சனைகள் உன்னைத் தடுத்து சோர்ந்து போகப் பண்ணுகிறதோ? வனாந்தரத்திலே வழி தெரியாமல் தவிக்கிறாயோ? உன்னுடைய வாழ்க்கை வெறுமையும், வறுமையுமாய் இருக்கிறதோ? ஜீவத்தண்ணீருள்ள நதியைத் தேடி களைத்துப்போய் வாடுகிறாயோ? கடைசி வரை கிறிஸ்தவ ஜீவியத்தில் நின்று பிடிக்க முடியாது என்று எண்ணி மனம் சோர்ந்து போகிறாயோ?

உண்மைதான், உன்னால் முடியாது. உன் பெலத்தாலும் கூடாத காரியம்தான் ஆனால் வானத்திலும், பூமியிலும், சகல அதிகாரமும் உடைய கர்த்தராலே ஆகும். அல்லேலூயா!

கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? (ஆதி 18:14)
தேவனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை!
(லூக் 1:37).

உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றும் இல்லை (ஏசாயா 32:17).

தேவபிள்ளையே, உன்னுடைய எல்லாப் பிரச்சனைகளையும் கிறிஸ்துவின் பாதத்தில் வைப்பாயாக? ஆண்டவரே, என் குடும்பப் பிரச்சனை, மனம் திரும்பாத கணவனால், அல்லது மனைவியினால் வரும் தொல்லை, கீழ்படியாத பிள்ளைகளால் அனுபவிக்கும் வேதனை, வருமானம் போதாமல் கடனோடு போராடும் கஷ்டம் ஆகிய எல்லாவற்றையும் உமக்கு முன்பாக வைத்து விடுகிறேன். உமக்கு முன்பாக அவை அற்ப காரியம். நீர்தான் அவைகளை நீக்கவேண்டும். எனவே என் பாரங்களையும், கவலைகளையும் உம்மேல் வைத்து விடுகிறேன் என்று சொல்லுவாயா?

3. **மிகப் பெரிய காரியமும், அற்ப காரியமும்:-** இயேசு மிகப் பெரிய காரியங்களை நமக்காக செய்தார் தம்மையே நமக்காகத் தந்தார். தம்முடைய விலையேறப் பெற்ற இரத்தத்தை நமக்காக ஊற்றிக் கொடுத்தார். நம்மைத் தம்முடைய உள்ளங்கைகளில் வரைந்து கொள்ளும்படி தம்முடைய கரங்களை ஆணிகள் துளைக்கும்படி மகிழ்ச்சியோடு ஒப்புக் கொடுத்தார். நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்.

ஒருவன் தன் சிநேகிதனுக்காக உயிரைக் கொடுப்பதைப் பார்க்கிலும் வேறு சிறந்த அன்பு ஒன்றுமே இல்லை. தேவபிள்ளையே, தம்முடைய ஒரேபேறான குமாரனை உனக்காக தந்த தேவன், உனக்காக மற்ற எல்லாவற்றையும் தருவது அதிக நிச்சயமல்லவா? உன்னைப் பரிசுத்தப் பாதையில் நடத்துவது அவரது சித்தமல்லவா! உன்னுடைய பிரச்சனைகள் உன் பார்வைக்கு எவ்வளவு பெரிதாய் இருந்தாலும் அது கர்த்தருடைய பார்வைக்கு ஒரு அற்ப காரியமாகவே இருப்பதால் எளிதாய் அதை செய்து முடிப்பார்.

4. மோவாபியரும், அற்ப காரியமும்:- இஸ்ரவேல், யூதா, ஏதோம் ராஜாக்கள் எலிசாவைத் தேடி வந்தது வெறும் தண்ணீருக்காகத்தான். ஆனால் கர்த்தரோ எலிசாவின் வார்த்தையின் படியே அவர்கள் பகைஞரான மோவாபியரையும் அவர்கள் கைகளிலே ஒப்புக் கொடுத்தார். இரட்டிப்பான ஆசீர்வாதம் பார்த்தீர்களா? யோபு தன் சிநேகிதனுக்காக வேண்டுதல் செய்தபோது கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபு வேண்டிக் கொண்டதெல்லாம் சிநேகிதனுக்காகத் தான். ஆனால் கர்த்தர் ஆசீர்வதித்ததோ, யோபுவையும்,சிநேகிதனையும்!(யோபு42:10).

அன்னாள் அன்றைக்கு தேவனிடம் அழுது விண்ணப்பித்தது, ஒரு ஆண்குழந்தைக்காகத்தான் ஆனால் கர்த்தர் சாமுவேலோடுகூட இன்னும் மூன்று குமாரரையும், இரண்டு குமாரத்திகளையும் கட்டளையிட்டார். அது கர்த்தருக்கு முன்பாக அற்ப காரியம்!

இரட்டிப்பான நன்மைகளைக் கர்த்தர் இன்று உனக்குத் தருவார். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே தேவனுக்கு பிரியமும், சித்தமுமாய் இருக்கிறது. நீ தேவனுடைய ராஜ்யத்தையும், நீதியையும் தேடும்போது இவைகளெல்லாம் உனக்குக்கூட கொடுக்கப்படும்.

5. கர்த்தருக்கு முன்பாக நில்லுங்கள், வாய்க்காலை வெட்டுங்கள்:- எலிசா சொன்ன வார்த்தை என்ன தெரியுமா? "இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் போய் வாய்க்காலை வெட்டுங்கள். நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள். ஆனாலும் நீங்களும், உங்கள் ஆடு மாடுகளும், மிருக ஜீவன்களும் குடிக்கும்படிக்கு இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றான்.

வாய்க்காலை வெட்டுங்கள்! பெரிய காரியங்களை தேவனிடத்திலிருந்து எதிர்பாருங்கள்!

வாய்க்காலை வெட்டுவது என்பது விசுவாசத்தைக் குறிக்கிறது; எதிர்ப்பார்ப்பைக் குறிக்கிறது. தாகத்தோடு

இருக்கிற வீரர்கள் பொதுவாக தொடர்ந்து வேலே செய்ய விரும்பமாட்டார்கள். வாய்க்காலே வெட்டும்போது அவர்கள் அதைரியம் அடைந்து சோர்ந்து போகக்கூடும்.

ஆனுல் தேவனே தம்முடைய ஜனங்களிடத்தில் விசுவாசத்தை எதிர்பார்க்கிருர். லாசருவின் கல்லறையில் கல்லேப் புரட்டித் தள்ளுங்கள் என்று சொன்ன கர்த்தர் இங்கு ராஜாக்களேப் பார்த்து வாய்க்கால்களே வெட்டுங்கள் என்கிருர். அப்பொழுதுதான் அந்த இடம் தண்ணீரால் நிரப்பப்படும்.

தேவபிள்ளேயே, வாய்க்காலே வெட்டுவாயா? தேவனுக்கும், உனக்குமிடையிலே ஒரு தொடர்பை உண்டாக்குவாயா? தேவனேடும், ஜனங்களோடும்நல்மனம் பொருந்துவாயா? மனிதருக்கு முன்பாகவும், தேவனுக்கு முன்பாகவும் கரை திறை இல்லாமல் காத்துக் கொள்ளுவாயாக! அதுவே வாய்க்கால்!

வாய்க்கால்களே வெட்டுங்கள்! பரலோகத்தின் நதி உங்களே நிரப்பக் காத்துக் கொண்டிருக்கிறது.

இயேசு சொன்னுர்: ''என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனே அவனுடைய உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்ருர்'' (யோ 7:37). தேவபிள்ளேயே, உன்னுடைய விசுவாசத்தையும், கீழ்ப்படிதலேயும் சோதிக்கும்படியான பரீட்சைகள் வரும்போது சோர்ந்து போகாதே! வாய்க்காலே வெட்டுவாயாக!

இஸ்ரவேலின் ராஜாக்கள் அவ்விதமாய் வாய்க்கால்களே வெட்டினபோது மறு நாள் காலேயில் பலி செலுத்தப்படும் நேரத்தில் தண்ணீர் ஏதோம் தேசத்தின் வழியாக வந்தது. அந்தப் பள்ளத்தாக்கையெல்லாம் நிரப்பிற்று. அந்த ராஜாக்களுக்கும், ராணுவ வீரர்களுக்கும் இருந்த மகிழ்ச்சி சொல்ல முடியாதது.

தேவபிள்ளையே, கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட பண்ணின கர்த்தர், வனாந்தரத்திலும் தண்ணீர் புறப்படப் பண்ண வல்லமையுள்ளவராய் இருக்கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். மோசேக்கும், எலிசாவிற்கும் தேவனாய் இருந்த கர்த்தர், இன்று உன் தேவனாய் இருக்கிறார். அவர் பட்சபாதம் உள்ளவரல்ல. பள்ளத்தாக்குகளையெல்லாம் தண்ணீரால் நிரப்புவதற்கு அவர் வல்லமையுள்ளவராய் இருக்கிறார். அது அவருக்கு முன்பாக அற்ப காரியம்.

''அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்; மழையும் குளங்களை நிரப்பும்'' (சங் 84:6).

உன்னிடத்தில் என்ன இருக்கிறது?

"தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாய் இருந்த ஒரு ஸ்திரீ எலிசாவைப் பார்த்து: உமதடியானாகிய என் புருஷன் இறந்து போனான்; உமதடியான் கர்த்தருக்கு பயந்து நடந்தான் என்பதை அறிவீர்; கடன் கொடுத்தவன் இப்பொழுது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக் கொள்ள வந்தான் என்றாள்.

எலிசா அவளை நோக்கி: நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது, சொல் என்றான். அதற்கு அவள், ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீ்ட்டில் வேறொன்றும் இல்லை என்றாள். அப்பொழுது அவன் நீ போய் உன்னுடைய அயல் வீட்டிலுள்ளவர்கள் எல்லோரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டு வாங்கி, உள்ளே போய் உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவை பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து, நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான்" (II இராஜா 4:14).

ஒரு தீர்க்கதரிசியினுடைய மனைவியின் துயரத்தை கர்த்தர் எலிசா தீர்க்கதரிசியின் மூலமாக போக்குவதை இந்தப் பகுதியில் நாம் வாசிக்கிறோம்.

அவளுக்கு ஒரு கண்ணீரின் கதை இருந்தது. அது, இல்லை, இல்லை என்பதே ஆகும்! தன்னுடைய வறுமையெல்லாம் அவள் விவரிக்கும் போது, அவள் தனக்கு கணவன் இல்லையென்றும், தன்னிடம் போதுமான பணம் இல்லையென்றும் கடன் தீர்ப்பதற்கான வழி இல்லையென்றும் அடிமைகளாகப் போகிற பிள்ளைகளை விடுவிக்க பணவசதி இல்லையென்றும், அவள் விவரித்துக் கொண்டே வந்தாள். இல்லை, இல்லை, இல்லை என்பதே அவளுடைய அழுகையாக இருந்தது.

அப்படிப்பட்டவளை எலிசா தீர்க்கதரிசி பார்த்து: "உன்னிடத்திலே என்ன இருக்கிறது?'' என்று கேட்டார். இல்லையென்று சொல்லுகிறவளிடத்திலே, இருக்கிறதை அறிந்துகொள்ள எலிசா விரும்பினார்!

இன்று அநேகர் ஜெப விண்ணப்பங்களோடு ஊழியரிடத்தில் வருகிறார்கள். அதில் பெரும்பாலானவை இல்லை, ஒற்றுமை இல்லை என்கிற பஞ்சப்பாட்டு தான்! சுகம் இல்லை, ஆரோக்கியம் இல்லை, பணம் இல்லை, ஒற்றுமை இல்லை, சமாதனம் இல்லையென்று வரிசையாக துயரங்களை சொல்லி, சொல்லியே சாத்தானை மகிமைப்படுத்துகிறார்கள். ஆனால், தங்களிடம் என்ன இருக்கிறது என்று அறிந்து கர்த்தரைத் துதிக்க தவறிப் போய் விடுகிறார்கள். "உன்னிடத்தில் என்ன இருக்கிறது?'' என்று கர்த்தர் கேட்கிறார்.

உன்னிடத்தில் தேவன் கொடுத்த விலையேறப்பெற்ற இரட்சிப்பு இருக்கிறது. உனக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின தெய்வீக சமாதானம் இருக்கிறது. நித்திய ஜீவன் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்து இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். பரலோக தேவனுடைய ஐக்கியம் இருக்கிறது. இத்தனையையும் கொடுத்த கர்த்தரை ஸ்தோத்தரித்து மகிமைப்படுத்துகிறதை விட்டு, விட்டு இல்லாதவைகளை எண்ணி மனம் சோர்ந்து விடுகிறார்கள்.

தேவபிள்ளையே, உன்னிடம் இருக்கிறதை முதலாவது தேவனுக்கு தெரியப்படுத்து. நன்றியுள்ள இருதயத்தோடு தேவனை துதிப்பாயானால் உன்னிடத்தில் இல்லாததை தேவன் கண்டு உனக்கு அதை தந்தருளுவார். தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தின்படியே உன்னுடைய குறைவுகளையெல்லாம் அவர் நிறைவாக்குவார். உனக்கு இன்ன தேவை என்பதை நீ வேண்டிக் கொள்வதற்கு முன்னமே பரம பிதா அறிந்திருக்கிறார்! அல்லேலூயா!

ஒரு வேடிக்கையான கதை உண்டு. ஒரு காட்டில் ஒரு யானை இருந்ததாம். அந்த யானை எப்பொழுதும் மற்ற

பறவைகளையும், மிருகங்களையும் பார்த்து பார்த்து, தன்னோடு ஒப்பிட்டு மனம் சோர்ந்து போகுமாம்.

ஒரு சிட்டுக்குருவி உயர பறந்து போவதை பார்க்கும் போது, அது மனம் வருந்தி, இந்த ஆண்டவர் பட்சபாதம் உள்ளவர். எனக்கு இறக்கைகளை படைக்கவில்லை. என்னால் ஆகாய மண்டலத்தில் பறந்து செல்ல முடியவில்லை எனச் சொல்லி அழுமாம்.

ஒரு வண்ணத்துப் பூச்சி மலரில் உட்கார்ந்து தேனை உறிஞ்சிக்கொண்டு இருக்கிறதை பார்க்கும்போது, கர்த்தர் இந்த வண்ணத்துப் பூச்சிக்கு மட்டும் சுவையான உணவை கொடுத்திருக்கிறார். நானோ மரங்களையும், இலைகளையும் இன்னும் சுவையற்ற உணவு வகைகளையும் சாப்பிட வேண்டியதிருக்கிறது என்று மனம் சலித்துக்கொள்ளுமாம்.

எறும்புகள் பூமிக்கடியில் சென்று வருவதை பார்க்கும் போது, தனக்கு பூமிக்கு அடியில் சென்று வர வழியில்லாமல் இருக்கிறதே என்று அலுத்துக் கொள்ளுமாம். தனக்கு இல்லாதவைகளையே எண்ணி எண்ணி அழுது கொண்டிருந்த அந்த யானை கடைசியில் மிகவும் பெலவீனப்பட்டு மரணத்தருவாய்க்கு உள்ளாகிவிட்டது.

அப்பொழுது காட்டில் உள்ள சகல மிருகங்களும், பறவையினங்களும் அந்த யானையிடம் வந்து: "யானையாரே, இல்லை, இல்லை என்று சொல்லி, உங்களிடம் இல்லாதவைகளையே எண்ணி நீங்கள் மனம் சோர்ந்து மரித்து விடாதிருங்கள். உங்களுடைய குறைவுகளை எண்ணி சோர்ந்து போகாமல், நிறைவுகளை எண்ணிப் பாருங்கள். கர்த்தர் உங்களுக்கு எவ்வளவு வல்லமையையும் பெலனையும் தந்திருக்கிறார். எவ்வளவு உறுதியான கால்களை தந்திருக்கிறார். உங்களுக்கு கொடுத்திருக்கிற தந்தம் எவ்வளவு] விலையேறப் பெற்றது. சிருஷ்டிப்பிலே நீங்கள் எவ்வளவு பெரியவர்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்" என்று சொன்னார்களாம். அதற்குப் பிறகு

தான் யானைக்கு தன்னுடைய மேன்மையை உணர்ந்து கொள்ள முடிந்தது.

எலிசா அவளைப் பார்த்து உன்னிடத்தில் இருக்கிறது என்ன? என்று கேட்ட போது, அவள் சொன்ன பதில் என்ன தெரியுமா? ஒரு குடம் எண்ணெயே அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறு ஒன்றும் இல்லை என்றாள்.

"ஒரு குடம் எண்ணெய்!" அது அவளிடத்தில் இருக்கத்தான் செய்தது. ஆனால், அதை அவள் முதலில் சொல்லாமல்; இல்லை, இல்லை என்றே சொல்லி தன்னை ஏமாற்றிக் கொண்டு இருந்தாள்.

ஒரு குடம் எண்ணெய்! அதை வைத்து எவ்வளவு மகிமையான காரியங்களை செய்யலாம். ஜெபத்தோடு கொஞ்சம் எண்ணெய் எடுத்து வியாதியஸ்தர் மேல் பூசினால் அவர்கள் சொஸ்தமடைவார்கள். கொஞ்சம் எண்ணெய் ராஜாக்களை அபிஷேகம் பண்ணுவதற்கு அபிஷேகத் தைலமாக பயன்படுகிறது. கொஞ்சம் எண்ணெய் ஆசாரியர்களையும், தீர்க்கதரிசிகளையும் அபிஷேகம் பண்ண போதுமானதாகும். எண்ணெய் சமையலுக்கு மாத்திரமல்ல, மனுஷனுக்கு முகக் களையையும் கூட உண்டு பண்ணும் என்று வேதம் சொல்லுகிறது (சங் 104:15). எவ்வளவு பிரயோஜனமான எண்ணெய் அவளிடம் இருக்கிறது என்பதை அவள் மறந்து போனாள்.

தேவபிள்ளையே, எண்ணெயைப்போல இரண்டு காரியங்கள் உனக்குள் இருக்கிறது. ஒன்று கிறிஸ்து தரும் இரட்சிப்பு; அடுத்தது பரிசுத்த ஆவியின் அபிஷேகம்.

இயேசு விலையேறப் பெற்ற இரட்சிப்பை உனக்கு தந்து இருக்கிறார். அதற்காகவே அவர் கெத்செமனே தோட்டத்தில் தம்மைப் பிழிய ஒப்பு கொடுத்தார். கெத்செமனே என்றால் எண்ணெய் ஆலை என்று அர்த்தம். அங்கே இயேசு நசுக்கப்பட்டு, பிழியப்பட்டார். நம்முடைய

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிலிருந்து வழிந்தோடும் இரட்சிப்பு நமக்குண்டு. கிறிஸ்து பரலோக வித்தானவர். அந்த வித்து கெத்செமனேயிலும் கல்வாரியிலும் நசுக்கப் பட்டு, இரத்தமும் கிருபையும் வெளியானது.

மட்டுமல்ல, பரிசுத்த ஆவியானவராகிய அபிஷேகமும் நமக்குள் இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். இந்த மகத்துவமான வல்லமை தேவனால் உண்டாகியிருக்கிறது என்று விளங்கும்படி இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் (I கொரி 4:7).

மண்பாண்டத்தில் மகிமையான பொக்கிஷம்! அதுவே குடத்திலுள்ள எண்ணெய்! அது தான் நமக்குள் ஊற்றப் பட்டிருக்கிற பரிசுத்த ஆவியின் வல்லமை! அல்லேலூயா!

தேவபிள்ளையே, உன்னுடைய சரீரம் ஒரு மண் பாண்டமாகிய குடம் என்பதையும், உன்னிலே மகிமை யான ஆவியானவர் தங்கியிருக்கிறார் என்பதையும் ஒரு போதும் மறந்து போகாதே.

ஆவியானவர் உனக்குள் தங்கியிருக்கிறபடியினால், அவர் உன்னை விலையேறப்பெற்றவனாய் மாற்றுகிறார். கிறிஸ்துவின் சாயலில் உன்னை மறுரூபமாக்குகிறார். ஆவியின் வரங்களையும் வல்லமையையும் உனக்குத் தருகிறார். இனிமையான ஆவியின் கனிகள் உன்னில் காணப் பட வழி செய்கிறார். மட்டுமல்ல, உனக்குள் இருக்கிற அபிஷேகத்தின் எண்ணெய் உன்னை பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமடைய, மகிமையின் மேல் மகிமையடைய செய்கிறது.

எலிசா சொன்னார்: ''நீ போய் உன்னுடைய அயலகத் தார் எல்லோரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களை கேட்டு, வாங்கி, உள்ளே போய் உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று, கதவை பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து, நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை'' என்றான்.

அவள் அவனிடத்திலிருந்து போய், தன் பிள்ளைகளு டன் கதவை பூட்டிக் கொண்டு, இவர்கள் பாத்திரங்களை அவளிடத்தில் கொடுக்க, அவள் அவைகளில் வார்த்தாள். அந்தப் பாத்திரங்கள் நிறைந்த பின், அவள் தன் மகன் ஒருவனை நோக்கி: இன்னும் ஒரு பாத்திரம் கொண்டு வா என்றாள். அதற்கு அவன் வேறேபாத்திரம் இல்லை என்றான். அப்பொழுது எண்ணெய் நின்று போயிற்று. அவள் போய் தேவனுடைய மனுஷனுக்கு அறிவித்தாள். அப்பொழுது அவன் "நீ போய் அந்த எண்ணெயை விற்று, உன் கடனை தீர்த்து மீந்ததை கொண்டு நீயும், உன் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள்" என்றான் (II இராஜா 4:3-7).

எண்ணெய் எடுக்க எடுக்க குறையாமல் வந்தது, பெரிய அதிசயம் அல்லவா? எத்தனையோ பாத்திரங்களில் ஊற் றினாலும், இன்னும் கூட ஊற்றும்படி அந்தக் குடத்தில் எண்ணெய் பொங்கி வந்து கொண்டே இருந்தது.

தேவபிள்ளையே, உன்னில் இருக்கிற பரிசுத்த ஆவியான வர் உன் தேசத்தில் இருக்கிற அத்தனை பாத்திரங்களையும் நிரப்ப வல்லமையுள்ளவராக இருக்கிறார். ஏனென்றால், அந்த எண்ணெய் பரலோக எண்ணெய். அது ஒரு போதும் குறைவுபடாத எண்ணெய்.

நீ மற்றவர்களுக்காக பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற் காக ஜெபிக்கும்போது உன்னுடைய மனதில் இருந்து பரிசுத்த ஆவி எடுக்கப்பட்டு போய் மற்றவர்கள் இடத்தில் இருந்து விடும் என்று எண்ணாதே. உன்னுடைய உள்ளமா கிய பாத்திரத்தில் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் எத் தனையோ ஆத்துமாக்களை நிரப்புவதற்குப் போதுமானவர்!

தேவபிள்ளையே, உன்னைச் சூழ எவ்வளவு காலியான பாத்திரங்கள் இருக்கிறது என்பதை சிந்தித்துப் பார். உன் னுடைய அயல் வீடுகள், பக்கத்தில் உள்ளவர்களிடத்தில் கிறிஸ்துவின் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறாரா? அவர் இல்லாவிட்டால், அவர்களது பாத்திரங்கள் வெறுமை

யான பாத்திரங்கள் அல்லவா? அவர்களுடைய உள்ளத்தி லும் பரிசுத்த ஆவியாகிய எண்ணெய் ஊற்றப்படுவதற்கு உன் அறை வீட்டை பூட்டி கொண்டு உன் பிள்ளைகளோடு ஜெபிப்பாயா? அப்பொழுது கர்த்தர் இதே அற்புதத்தை அவர்கள் வாழ்க்கையிலும் செய்ய அவர் வல்லமையுள்ளவ ராக இருக்கிறார்.

ஒவ்வொரு அற்புதத்திலும் உலகப் பிரகாரமான அர்த்தமும் உண்டு. ஆவிக்குரிய அர்த்தமும் உண்டு. ஒரு வேளை அந்த தீர்க்கதரிசியின் மனைவியைப் போல் உலகப் பிரகாரமாக நீ கடன் பிரச்சினையில் வாழ்வாய் என்றால் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை பிடித்துக் கொண்டு விசுவாசத்தோடு ஜெபிப்பாயா? அப்பொழுது கடன் பிரச் சனைகள் நீங்கும். கர்த்தர் உனக்கு ஒரு வாக்கை கொடுக் கிறார்: ''உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு சொன்னபடி, உன்னை ஆசீர்வதிப்பதினால், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய்; நீயோ கடன் வாங்குவதில்லை. நீ அநேகம் ஜாதிகளை ஆளுவாய்; உன்னையோ அவர்கள் ஆளுவதில்லை'' (உபா 15:6).

கர்த்தர் அந்த அற்புதத்தை செய்த உடன், எலிசா அவளைப் பார்த்து நீ போய் முதலாவது அந்தஎண்ணெயை விற்று உன் கடனைத் தீர்த்துக்கொள் என்றான். ஆம், கடன் நீங்கட்டும். அநேகருக்கு கர்த்தருடைய ஆசீர்வாதமும் பணமும் கிடைத்தாலும் கூட, வாங்கிய கடனைச் செலுத்த பிரியப்படுவதில்லை. மேலும், மேலும் கடன் வாங்கத்தான் விரும்புவார்களே ஒழிய கடனை அடைக்க பிரயாசிப்ப தில்லை! ஆனால், எலிசா திட்டமாய், ''முதலாவது போய் நீ கடனை தீர்த்து விட்டு, மீந்ததை கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள்'' என்றார்.

தேவபிள்ளையே, நீ கடனைத் தீர்க்கும்போதே இனி கடன் வாங்குவது இல்லை என்று திடமான தீர்மானம் செய்து கொள்! என்ன வந்தாலும், பட்டினியாய் கிடக்க வேண்டிய சூழ்நிலை வந்தாலும் கடனே வாங்க மாட் டேன் என்று பொருத்தனை செய்து தேவ சமுகத்தில் தீர் மானிப்பாய் என்றால் கர்த்தர் உன் தீர்மானத்தைக் கண்டு கடன் இல்லாது வாழ்க்கை வாழ்வதற்கு நிச்சயமாக உனக்கு உதவி செய்வார். வானத்தின் பலகணிகளைத் திறந்து பரலோக எண்ணெயினால் உன்னுடைய பொக்கி ஷங்களை நிரப்புவார். ஆம், நீயோ அநேகம் ஜாதிகளுக்கு கடன் கொடுப்பாய். நீயோ கடன் வாங்க மாட்டாய். கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக!

சூனேமியாளின் பிள்ளை!

"பின்பு ஒருநாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும்போது, அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ அவனைப் போஜனம்பண்ண வருந்திக் கேட்டுக்கொண்டாள்; அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கே வந்து தங்குவான்.

அவள் தன் புருஷனை நோக்கி; இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன். நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக்கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள்" (II இராஜா 4:8-10).

சூனேமியாள் கனம் பொருந்திய ஒரு ஸ்திரீ. அவளுக்கு வாழ்க்கையின் எல்லா வசதிகளும் இருந்தது. குழந்தை பாக்கியமோ இல்லை.

அவள் தேவ ஊழியனாகிய எலிசாவிற்குச் செய்த பணிவிடைகளுக்குத் தக்கதாக எலிசா நன்றிகடன் நிறைவேற்றும் வகையில் நான் உனக்கு செய்யவேண்டியது என்ன? என்று கேட்டார். அதற்கு அவள், என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய் குடியிருக்கிறேன் என்று சொன்னாள். ஆகிலும் எலிசா அவளுக்கு தேவனுடைய வார்த்தையையும், ஆசீர்வாதத்தையும் கூறி ஒரு பிராண உற்பத்திகால திட்டத்தில் ஒரு குமாரனைப் பெறுவாய் என்றார். அப்படியே கர்த்தர் அவளுக்கு ஒரு குமாரனைத் தந்தருளினார். அந்தப் பிள்ளை வளர்ந்து சிறுவனானான். ஒருநாள் அறுவடையில் இருந்த தகப்பனிடத்திற்கு அவன் சென்றபோது அவனுக்கு தலைவலி எடுத்தது. தாயிடத்திற்கு கொண்டுவந்தபோது அவள் மடியில் அவன் மரித்துப்போனான்.

அந்தச் சரீரத்தைச் சூனேமியாள் எடுத்து மேல் வீட்டு அறையில் தீர்க்கதரிசிக்காக ஒதுக்கி வைத்திருந்த தேவனுடைய மனுஷனுடைய கட்டிலில் வைத்து கதவைப் பூட்டி விட்டு கர்மேல் பர்வதத்திலிருக்கிற தேவனுடைய மனுஷனாகிய எலியாவிடத்தில் வந்தாள்.

எலிசா தன் வேலைக்காரனை அவளுக்கு எதிர்கொண்டு அனுப்பி, நீ அவளுக்கு எதிர்கொண்டு ஓடி, நீ சுகமாய் இருக்கிறாயா? உன் புருஷன் சுகமாய் இருக்கிறானா? அந்தப் பிள்ளை சுகமாய் இருக்கிறதா? என்று அவளிடத்தில் விசாரித்தான். அப்பொழுதுதான் அந்தக் குழந்தை மரித்தது எலிசாவிற்குத் தெரியவந்தது.

அவள் கையோடு எலிசாவை தன்னுடைய வீட்டிற்கு கூட்டிக் கொண்டு வந்தாள். எலிசா மரித்தக் குழந்தையின் கிட்டேபோய் தன் வாயைப் பிள்ளையின் வாயின் மேலும், தன் கண்கள் அவன் கண்களின் மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின் மேலும் படும்படியாக அவன் மேல் குப்புற விழுந்து படுத்துக் கொண்டான். அப்பொழுது பிள்ளையின் உடல் மேல் அனல் கொண்டது. அவன் எழுந்து, அறை வீட்டிற்குள், இங்கும் அங்கும் உலாவித் திரும்ப கிட்டே போய் அவன் மேல் குப்புறப் படுத்தான். அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான்.

இந்த அத்தியாயத்தில் சூனேமியாள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள எலிசாவிற்குக் கொடுத்த ஏழு காரியங்களை சற்று தியானிப்போமாக. II இராஜாக்கள் 4:10-ஐ வாசித்துப் பாருங்கள். ''நாம் மெத்தையின் மேல் ஒரு சிறிய அறை வீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம்'' என்றாள்.

1. **மெத்தை:-** வீட்டின் மாடியைக் குறிக்கிறது. தனியாக, பிரத்தியேகமாக உள்ள ஒரு இடம். மேன்மையான ஒரு

இடம். எலிசாவிற்கென்று பழைய ஒரு இடத்தைக் கொடுக்காமல், புதிதாக கட்டப்பட்ட மெத்தையாகிய மாடியைக் கொடுக்க அவள் தீர்மானித்தாள்.

தானியேலுக்கும் அப்படிப்பட்ட ஒரு வீட்டு மாடி இருந்தது. ஒவ்வொரு நாளும் தன்னுடைய மாடியின் பல கணிகளையெல்லாம் எருசலேமிற்கு நேராய் திறந்து வைத்து மூன்று வேளையும் அவன் எருசலேமைப் பார்த்து ஜெபிப்பது வழக்கம்.

ஒருவேளை இந்தச் சூனேமியாள், எலிசா மெத்தையில் இருந்தால் எளிதாக எருசலேமைப் பார்க்க முடியும் என்ற எண்ணத்தினலோ என்னவோ மெத்தையை அவனுக்கென்று ஒதுக்கிக் கொடுத்தாள். மெத்தை என்பது ஜெபிக்கும் ஒரு இடத்தைக் குறித்துக் கொண்டே இருக்கிறது.

கர்த்தர் ஒரு பேழையைச் செய்யும்படி நோவாவிற்குச் சொன்னபோது அதிலே ஒரு மேல்மாடியையும் உண்டாக்கும்படி கர்த்தர் கட்டளை கொடுத்தார் (ஆதி 6:16). மேல் தட்டு இல்லாமல் போனல் பேழை இருளடைந்து போகும். மிருக ஜீவன்களின் நடமாட்டத்தால் துர்வாடை வீசிவிடும். காற்றும் வெளிச்சமும் உள்ளே வராது.

உலகப்பிரகாரமான அடித்தட்டில் நீ இருந்தாலும் தேவனேடு உறவாடக் கூடிய மேல் தட்டாகிய ஜெப அறை உனக்கு அவசியம்!

தேன் கூட்டைப் பாருங்கள். அதின் கீழ் தட்டில் குஞ்சுகளும், முட்டைகளும் இருக்கும். ஆனல் மேல் தட்டிலோ மதுரமான தேன் இருக்கும். தேவனேடு சஞ்சரித்தவர்கள் மேல் வீடாகிய மெத்தையின் அனுபவங்களை தேனிலும் மதுரமாகக் கருதுவார்கள். தேவபிள்ளையே, உன் ஜெப நேரத்தில் தேவனுடைய பிரசன்னத்தை, தேவனுடைய மகிமையை அனுதினமும் ருசிக்கிருயா?

2. **சிறிய அறை:-** மெத்தையிலே சூனேமியாள் ஒரு சிறிய அறையையும் கட்டிக் கொடுத்தாள். சிறிய அறை என்பது

கட்டுப்பாடான வாழ்க்கை முறையைக் காட்டுகிறது. ஒரு அடைக்கப்பட்ட தோட்டம் போல, முத்திரிக்கப்பட்ட கிணறு போல, மறைவு கட்டப்பட்ட நீரூற்றைப் போல அது இருக்கிறது (உன் 4:12). சிறிய அறைக்கு நான்கு சுவர்கள் உண்டு. அந்த நான்கு சுவர்களும் நமக்கு அரணாகவும், கோட்டையாகவும் பாதுகாக்கிறது. மட்டுமல்ல, நம்மை உலகத்தினின்று வேறு பிரிக்கிறது.

தேவபிள்ளையே, கிறிஸ்துவை அறிந்துகொண்ட நீ உலகத்தினின்று வேறு பிரிக்கப்பட்ட புதிய வாழ்க்கை நடத்த வேண்டும். எப்படியும் வாழலாம் என்று அல்ல, கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து வேத வசனத்தின் படியே வாழ்வதற்கு உன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும். உலகத்திற்கொத்த வேஷம் தரியாமல், தேவனுடைய நன்மையும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று அறிந்து அதற்கு ஒப்புக் கொடுத்து ஜீவிக்க வேண்டும்.

அன்றைக்கு ஒரு சிறிய அறை எருசலேமிலே பூட்டப்பட்டிருந்தது. சீஷர்கள் அதற்குள்ளே பயந்து நடுங்கிக் கொண்டே இருந்தார்கள். அந்த அறை பூட்டப்பட்டிருந்தாலும், ஜன்னல்கள் மூடப்பட்டிருந்தாலும் இயேசு அதற்குள்ளே வந்து சீஷர்களைப்பார்த்து ''சமாதானம்'' என்றார். தேவபிள்ளையே, உலகத்தாருக்கு உன் கதவுகளை அடைக்கும் போது கர்த்தர் உனக்குள் வருகிறவராய் இருக்கிறார். உனக்கு சமாதானத்தை நிச்சயமாகத் தந்தருள்வார்.

3. **கட்டில்:-** கட்டில் இளைப்பாறுதலையும், சமாதானத்தையும் நமக்கு சாட்சியாக அறிவித்துக் கொண்டே இருக்கிறது. கிறிஸ்து தருகிற இளைப்பாறுதலும், சமாதானமும் வேறு யார் நமக்குத் தரக்கூடும்? வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று ஆண்டவராகிய இயேசு அன்போடு அழைக்கிறார் (மத் 11:28). மட்டுமல்ல, கல்வாரிச் சிலுவையில் சமா

தானத்தை நமக்குச் சம்பாதித்துக் கொடுத்தார் (கொலோ 1:20). ஆகவே அவர் உங்களைப் பார்த்து அன்போடுகூட சொல்லுகிறார், "என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" (யோவா 14:27).

இயேசுவினுடைய வாழ்க்கையெல்லாம் இளைப்பாறுதலும், சமாதானமுமாகவே இருந்தது. ஒரு கட்டிலில் படுத்து தூங்குவதைப் போல கப்பலின் அடித்தளத்தில் சமாதானமாய் படுத்து நித்திரை செய்தார். எவ்வளவோ போராட்டங்களும், சோதனைகளும் அவர் மேல் அலை மோதின போதிலும் கூட அவர் ஒருபோதும் தன்னுடைய சமாதானத்தை இழந்துவிடவில்லை. தேவபிள்ளையே, உன்னுடைய சமாதானத்தை எப்போதும் காத்துக் கொள்!

4. **மேஜை:-** சூனேமியாள் எலிசாவிற்கு ஒரு மேஜையையும் ஆயத்தப்படுத்திக் கொடுத்தாள். மேஜையில் கர்த்தருடைய வேதத்தை வைத்து வாசித்து, தியானிப்பது எவ்வளவு பெரிய பாக்கியம்! மேஜையானது தேவனோடு நமக்குள்ள ஐக்கியத்தையும் நெருங்கிய உறவையும் வெளிக்காட்டுகிறது. இயேசு அந்த ஐக்கியத்தை நம்மிடத்தில் ஆவலாய் எதிர்பார்க்கிறார். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத்திறந்தால் நான் அவனிடத்தில் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான் என்று அழைக்கிறார் (வெளி 3:20).

தேவபிள்ளையே, வேதம் உனக்கு மனமகிழ்ச்சியாய் இருக்கிறதா? வேத வாக்கியங்களை வாசித்து தியானிக்கிறாயா? 119ஆம் சங்கீதம் முழுவதையும் வாசித்துப்பார்! தாவீது எவ்வளவு தேவனுடைய வசனங்களை வாசித்து தியானித்தார் என்பதை நாம் அங்கே அறிந்துகொள்ளலாம். உம்முடைய வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என்னுடைய கண்களைத் திறந்தருளும் என்று அவர் ஜெபிக்கிறார். வீண் சிந்தனைகளை வெறுத்து உமது

வேதத்தில் பிரியப்படுகிறேன் என்று வேதத்தின் மேல் தாவீதுக்குள்ள ஆர்வத்தையும்கூட வெளிப்படுத்துகிருர். தேவபிள்ளேயே, உன் வீட்டில் தியான மேஜை உண்டா?

5. **நாற்காலி:-** நாற்காலி அமரும் ஒரு ஸ்தலம் அலசடி படாமல் தேவனைச் சார்ந்து அவரிடத்தில் பொறுப்பை ஒப்புக்கொடுக்கும் இடம். கர்த்தர் எப்போதும் நம்மை அமர்ந்த தண்ணீரண்டை கொண்டுபோய் விடுகிருர். நம்முடைய ஆத்துமா கலங்குவதையோ, தவிப்பதையோ அவர் விரும்புகிறதில்லே. நீங்கள் அமர்ந்திருந்து "நானே தேவன் என்பதை அறிந்துகொள்ளுங்கள்" என்று கர்த்தர் சொல்லுகிருர்.

தன் தலேயின்மேல் பாரச் சுமையை சுமந்துகொண்டு வருகிற ஒரு மனுஷன் ஒரு சுமைதாங்கியைப் பார்க்கும் போது, தன்னுடைய பாரத்தைச் சுமைதாங்கியின்மேல் இறக்கி வைத்துவிட்டு, அந்தச் சுமைதாங்கியின் கீழே அமர்ந்து அவன் இளேப்பாறுகிருன். அது அவனுக்கு இளேப்பாறுதலேயும், தேறுதலேயும் கொடுக்கிறது. தேவ பிள்ளேயே, கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னே ஆதரிப்பார். அவர் உங்களே விசாரிக்கிற வரானபடியினுல் உங்கள் கவலேகளேயெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் என்று வேதம் சொல்லுகிறதல்லவா! அப்படியே நீயும் உன் பாரங்களே கர்த்தர்மேல் வைத்து விட்டு உன்னுடைய கவலேகலேயெல்லாம் அவர்மேல் ஒப்படைத்துவிட்டு, நீ நாற்காலியில் அமர்ந்து இருந்து கர்த்தர் உனக்காக செய்கிற யுத்தத்தைப் பார்! அவர் ஒரு போதும் உன்னேக் கைவிடுவதே இல்லே!

6. **குத்துவிளக்கு:-** குத்துவிளக்கு ஒரு அறைவீட்டிற்கு வெளிச்சத்தைத் தருகிறது. இருளில் பிரகாசிக்கிறது. அந்த காரத்தையும், இருளின் ஆதிக்கங்களேயும் நீக்கிப்போட்டு ஆச்சரியமாக ஒளியைப் பிரகாசிக்கப்பண்ணுகிறது.

நீங்களே உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள் என்ருர், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து!

வேதவசனங்கள் நம்முடைய கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய உள்ளங்களைப் பிரகாசிக்கச் செய்கிறார். நீதியின் சூரியனாகிய கிறிஸ்து இரட்சிப்பின் தீபத்தை நமக்குள் ஏற்றிவைக்கிறார் வேத வசனங்களும், பரிசுத்த ஆவியானவரும், கிறிஸ்துவும் குத்துவிளக்கைப் போல, பிரகாசத்தை உள்ளத்திற்குத் தருகிறார்கள். தேவபிள்ளையே, நீ மற்றவர்களுக்குப் பிரகாசமாய் இருக்கவேண்டுமென்று தேவன் விருப்பப்படுகிறார். பலநூறு ஆண்டுகளாக அந்தகாரத்திலிருக்கும் தேசத்தில் கர்த்தருடைய சுவிசேஷ தீபத்தை நீ ஏற்றி வைக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். நீ கர்த்தருக்காக பிரகாசிப்பாயா?

எழும்பி பிரகாசி, உன் ஒளிவந்தது; கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள் (ஏசா 60:1,3).

7. **அறைக்கதவு:-** சூனேமியாள் எலிசாவிற்கென்று கட்டிய அந்த வீட்டில் ஒரு கதவும் இருந்தது என்று நாம் பார்க்கிறோம். மரித்துப்போன, சூனேமியாளின் மகனை உயிரோடு எழுப்பும் போது எலிசா அந்த வீட்டிற்குள் போய் கதவைப் பூட்டினான் என்று வேதம் சொல்லுகிறது (II இராஜா 4:33).

இயேசு ஜெபம் பண்ணவேண்டிய விதத்தை மலைப்பிரசங்கத்தில் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். "நீயோ ஜெபம் பண்ணும் போது உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து உன்கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு! அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்" (மத் 6:6).

அறைக்கதவைப் பூட்டினதின் ரகசியம் என்ன? அறைக்கதவை மூடும்போது அது வெளி உலகத்திற்குரிய

தொடர்பை அறுத்து விடுகிறது. அப்படி நாம் ஜெபிக்கும் போதுதான், உலக சிந்தனைகளிலிருந்தும், உலக கவலைகளிலிருந்தும் விடுபட்டவர்களாய் இருந்தால் தான் தேவனிடத்தில் முழு இருதயத்தோடு ஜெபிக்க முடியும்.

அநேகர் மற்றவர்கள் காணவேண்டுமென்று ஜெபிக்கிறார்கள். மனுஷர் புகழை எதிர்பார்த்து, மனுஷரிடத்தில் நல்ல பெயர் வாங்கும்படி, எல்லாருக்கும் முன்பாக நய வசனிப்பு, பகட்டுக் கதவைத் திறந்து வைத்து ஜெபிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்குப் பரலோகத்தில் பலன் கிடைப்பதில்லை. தானதர்மம் செய்யும் போதாகட்டும், ஜெபம் பண்ணும் போதாகட்டும், அல்லது உபவாசிக்கும் போதாகட்டும், எது எப்படியிருந்தாலும் அறைக்கதவைப் பூட்டி தேவனை நோக்கிப் பார்த்து, உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஜெபிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது மாத்திரமே கர்த்தரிடத்திலிருந்து நம்மால் ஆசீர்வாதத்தை எதிர்பார்க்க முடியும்.

தேவ மனுஷனாகிய எலிசாவிற்கென்று சூனேமியாள் அந்த அறையைக் கட்டினதினாலே அவள் இரண்டு அற்புதங்களைப் பெற்றுக் கொண்டாள். முதலாவது, மலடியாய் இருந்த அவளுக்கு குழந்தை பிறந்தது. இரண்டாவது மரித்த அவளுடைய பிள்ளை உயிரோடு எழுந்தது. மட்டுமல்ல, வேதத்திலும் அவளுக்கு நீங்காத இடம் கிடைத்தது. தேவனுடைய ஊழியக்காரர்களுக்குச் செய்யப்படுகிற ஒவ்வொரு காரியங்களையும் கர்த்தர் பார்த்து, அந்த முகாந்திரத்தைக் கொண்டு உதவி செய்தவர்களை ஆசீர்வதிக்கிறவராய் இருக்கிறார். இந்த சிறியரில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ, அதை எனக்கேச் செய்தீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எலிசா ஒரு தீர்க்கதரிசி! தீர்க்கதரிசி என்னும் நாமத்தின் நிமித்தம், தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான் என்று இயேசு சொன்னது எத்தனை உண்மை! அந்த பலன் கர்த்தரால்

அவர்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது. பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரமல்லவா? அந்தச் சுதந்தரம் வேதத்தில் அற்புதமாகவும், அடையாளமாகவும் இன்றும் திகழ்ந்து கொண்டே இருக்கிறது.

ஏசாயா தீர்க்கதரிசி சொல்லுகிறார், "இதோ, நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் இருக்கிறோம்" (ஏசாயா 8:18).

தேவபிள்ளையே, உன்னைக் குறித்தும், உன்னுடைய பிள்ளைகளைக் குறித்தும் இப்படிப்பட்ட சாட்சி உண்டா? உன்னுடைய குடும்பம் கர்த்தருக்கு அற்புதமான சாட்சியாய் விளங்குகிறதா? சிந்தித்துப்பார்!

சூனேமியாளிடத்தில் இன்னொரு விசேஷத்தையும் பார்க்கலாம். தேவ ஊழியனை அவள் உபசரித்தது மாத்திரமல்ல, அவள் தேவனிடத்தில் விசுவாசமும் உள்ளவளாய் இருந்தாள். ஆகவேதான் அவள் தன் வீட்டு அறைக் கதவை மூடிவிட்டு, மகன் மரித்ததை கணவனுக்குக் கூட அறிவிக்காமல் தேவனுடைய ஊழியனை நோக்கி ஓடினாள். அவளுடைய விசுவாசம் எவ்வளவாய் புகழப்படத் தக்கது! ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடு எழுந்திருக்கப் பெற்றார்கள் என்று எபிரெயர் 11:25ல் நாம் வாசிப்பது சூனேமியாளின் விசுவாசத்தையும் கூட வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது.

தேவபிள்ளையே, நீ விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பாய்! விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார் நமது அருமை ஆண்டவர். சூனேமியாளின் வீட்டில் நடந்த அற்புதம், உன்னுடைய உள்ளத்தில் விசுவாச அக்கினியைப் பற்ற வைக்கட்டும்!

எலிசாவின் தேவன் இன்றும் உயிர்ப்பிக்கிறவராய் இருக்கிறார். அவர் தம்முடைய ஜீவிய நாட்களில் எலிசா

யைப்போல பாடுபட்டு உயிர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லாமல், ''வாலிபனே எழுந்திரு'' என்ற போதும், ''சிறு பெண்ணே எழுந்திரு'' என்றபோதும், ''லாசருவே எழுந்து வெளியே வா'' என்ற போதும், நாயீனூர் விதவையின் மகனும், யவீருவின் மகளும், மார்த்தாளின் சகோதரனுமாகிய லாசருவும் உயிர் பெற்று வெளியே வந்தார்கள். கர்த்தர் இன்றைக்கும் உயிர்ப்பிக்கிற வல்லமையுடையவர். உயிர்ப்பிக்கக்கூடாதபடி அவருடைய கரம் இன்றைக்கும் குறுகினதில்லை.

சரீரப்பிரகாரமான மரணத்தில் மாத்திரமல்ல, ஆத்தும மரணத்திலிருந்தும் கர்த்தர் உயிர்ப்பிக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், ''அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாய் இருந்த உங்களை உயிர்ப்பித்தார்'' (எபேசி 2:1). தேவபிள்ளையே, தேவ வல்லமையினால் உயிர்ப்பிக்கப்படுவாயாக! இப்பொழுதே அவருடைய உயிர்ப்பிக்கிற வல்லமை உன்மேல் இறங்கட்டும்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அத்தியாயம் 9

நாகமான்!

"எலிசா அவனிடத்தில் ஆள் அனுப்பி நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான்...... அவன் இறங்கி தேவ மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி, அவன் சுத்தமானான்" (II இராஜா 5:10-14).

கர்த்தருடைய அற்புதங்கள் இஸ்ரவேலருக்கு மாத்திரமல்ல, அவரை நம்புகிற ஒவ்வொருவருக்கும் உரியது என்பதை நாகமான் குணமான இந்த சம்பவம் நமக்கு வெளிப்படுத்துகிறது!

பொதுவாக தெய்வீக சுகமளிக்கிற சுவிசேஷக் கூட்டங்களில், கர்த்தர் கிறிஸ்தவர்களைத் தொட்டு குணமாக்குவதை விடவும் புறஜாதியாருக்கு தம்முடைய வல்லமையை வெளிப்படுத்துவதில் அதிக அக்கரையுடையவராய் இருக்கிறார் என்பதை நான் பலமுறை கவனித்திருக்கிறேன். வார்த்தையினாலும், வல்லமையினாலும் புறஜாதியாரைத் தம்முடைய சுவிசேஷத்தின்படி கீழ்ப்படியப் பண்ணும் பொருட்டு, கர்த்தர் அற்புதங்களைச் செய்துகொண்டே இருக்கிறார்.

சீரியர் படைத் தலைவனான நாகமான் பிரசித்தி பெற்றவன், மகா பராக்கிரமசாலி. ஆனால் குஷ்டரோகியாய் இருந்தான். அவனுடைய வாழ்க்கையைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்! மூன்று பகுதிகளாக அவனுடைய வாழ்க்கையைக் குறித்து தியானித்துப் பாருங்கள்!

1. குஷ்டரோகம் வரும்முன் உள்ள நாகமான்!
2. குஷ்டரோகியான நாகமான்!
3. குஷ்டம் நீங்கி சுத்தமான நாகமான்!

குஷ்டரோகம் வருவதற்கு முன்னால் உள்ள நாகமான் இளமையோடும், மிகுந்த பெலத்தோடும் உள்ள பராக்கிரமமான வீரனுய் இருந்திருப்பான். ஆகவேதான் இராணுவத்தில் அவ்வளவு உயர்ந்த பதவி அவனுக்குக் கிடைத்தது. அவன் எத்தனையோ யுத்தங்களில் தன்னுடைய பெலத்திலுைம், பராக்கிரமத்திலுைம் யுத்தம் செய்து வெற்றி கண்டிருந்திருப்பான். இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமாகக்கூட அவன் யுத்தத்திற்கு வந்து சிறு பிள்ளைகளையும் சிறைபிடித்துப் போயிருக்கிறுன்! இதனுல்தானே அல்லது வேறு பாவங்களினுலோ அவனுக்கு குஷ்டரோகம் வந்தது!

அவனுக்கு குஷ்டரோகம் ஏற்பட்டபோதோ, அந்தப் பயங்கரமான வியாதி அவனுடைய பெலத்தையெல்லாம் அரிக்க ஆரம்பித்திருக்கும். பெலன் குறைந்திருக்கும்! முன் போல அவனுல் இனி யுத்தம் செய்ய முடியாது. கொஞ்சம் கொஞ்சமாக சரீரம் அழுகி நாறியிருக்கும்.

குஷ்டரோகியை வேதம் அருவருப்பாக எண்ணுகிறது. யாராவது ஒருவனுக்கு குஷ்டரோகம் வருமென்றுல், அவன் வீட்டை விட்டும். பட்டணத்தை விட்டும் வெளியேற்றப்பட வேண்டும். குடும்பத்தோடு ஒன்றுய் அவனுல் சேர்ந்திருக்க முடியாது. மட்டுமல்ல, யாராவது அவனுடைய அருகில் வருவார்களென்றுல் தீட்டு... தீட்டு... என்று அவன் சத்தமிட வேண்டும் (லேவி 6:44-46).

ஒரு மனுஷனுடைய வாழ்க்கையை நாம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. பாவம் செய்வதற்கு முன்பாக உள்ள மனுஷன்!

2. பாவத்தில் விழுந்து உளையான சேற்றிலிருந்து விடுதலை பெற முடியாமல் தவிக்கிற மனுஷன்!

3. கிறிஸ்துவை கண்டுகொண்டு மீட்பைப்பெற்ற மனுஷன்!

குஷ்டரோகம் ஒருமனுஷனை எவ்விதமாய் சீரழிக்கிறதோ அதைவிடவும் கொடூரமாய் பாவம் ஒரு மனுஷனைக் கெடுத்து, சீரழியச் செய்கிறது. பாவம் செய்வதினால் குற்ற மனசாட்சி அவனைத் தாக்குகிறது. சமாதானத்தை அவன் இழந்து போகிறான். மட்டுமல்லாமல் அவன் பாதாளத்தை நோக்கியும், அக்கினிக் கடலை நோக்கியும் தீவிரமாய் கடந்து செல்லுகிறான்.

பாவ மன்னிப்பையும், சமாதானத்தையும், நித்திய ஜீவனையும் பெறுவதற்கு இயேசுவல்லாமல் வேறு மார்க்கமே இல்லை. இயேசு ஒருவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறார். அவர் ஒருவரே சமாதானத்தையும், சந்தோஷத்தையும் நமக்குத் தரக்கூடும். அவர் ஒருவரே பாவ குஷ்டத்தை நம்மில் இருந்து நீக்க முடியும்.

நாகமானுக்கு குஷ்டம் நீங்கும் வழியை ஒரு சிறு பெண் போதித்தாள். அவள் இஸ்ரவேல் தேசத்தை சேர்ந்த ஒரு பெண். சிறை பிடிக்கப்பட்டு சீரியாவிலே வாழ்கிற ஒரு பெண். பெற்றோரை விட்டு பிரிக்கப்பட்டு, சகோதர - சகோதரிகளின் அன்பு அவளுக்குக் கிடைக்காத சூழ்நிலையிலும் கர்த்தரைக் குறித்தும், கர்த்தருடைய ஊழியக்காரர்களைக் குறித்தும் தைரியமாய் பேசினாள்.

தேவபிள்ளையே, நீ எவ்வித சூழ்நிலையில் வாழ்ந்தாலும் எவ்வளவு கஷ்டங்களும், போராட்டங்களும் உனக்கு வந்தாலும், கிறிஸ்துவை அறிவிக்கவும், கிறிஸ்துவுக்காக சாட்சியாய் நிற்கவும் மறந்து போகாதே. கிறிஸ்துவைக் குறித்து பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் ஜீவனுள்ள வார்த்தைகளாக உள்ளங்களைத் தொடுகிறது, அற்புதங்களை நிகழ்த்துகிறது. அன்றைக்கு அந்தச் சிறு பெண் பேசிய ஒரு சில வார்த்தைகள் எவ்வளவு மகிமையான காரியங்களை நாகமானுடைய வாழ்க்கையில் நிறைவேற்றினது பார்த்தீர்களா?

அன்றைக்கு நட்சத்திரங்கள் இயேசு இருக்குமிடத்தை காண்பிக்கும்படி சாஸ்திரிகளுக்கு முன்னே சென்றதைப்

போல அந்தச் சிறு அடிமைப் பெண் விடுதலையின் நட்சத்திரமாய் நாகமானுக்கு முன் தோன்றினாள்.

சீரிய படைத்தளபதியாகிய நாகமானுக்கு இஸ்ரவேலுக்கு வருவது எல்லா விதத்திலும் கஷ்டமான ஒரு காரியம்தான். ஏனென்றால் இஸ்ரவேலுக்கும், சீரியாவிற்கும் அடிக்கடி யுத்தம் நடந்து கொண்டிருந்தது. அந்த யுத்தத்தில்தான் அவன் அந்தச் சிறு பெண்ணைச் சிறை பிடித்து வைத்திருக்கிறான். அப்படிப்பட்ட பகைவர் தேசத்திற்குச் செல்லுவது அவனுக்குக் கடினமான காரியம் தான். தான் ஒரு வீரனல்லவா? அது தன்மானத்திற்கு இழுக்கு என்று அவன் எண்ணியிருந்திருக்கக்கூடும்.

மட்டுமல்லாமல், இஸ்ரவேலர் குஷ்டரோகிகளை மிகவும் அற்பமாய் எண்ணினார்கள். இஸ்ரவேலர் இருக்குமிடத்திற்கு ஒரு குஷ்டரோகி வரவே கூடாது. மூன்றாவது அவன் தளபதியாய் இருந்தபடியினால் இஸ்ரவேலின் ராஜாவிடத்தில் அனுமதி பெறாமல் நேராக ஒரு தீர்க்கதரிசியிடம் செல்லுவதும் முடியாது. நான்காவது இஸ்ரவேல் தேசத்தில் அவனுக்கு எந்த விதமான பாதுகாப்பும் இருக்காது. எந்த நேரமும் ஆபத்துக்கள் சூழக்கூடும்.

என்றாலும் தான் எப்படியாவது குணமடைய வேண்டுமென்ற வாஞ்சை அவனுக்குள் இருந்தபடியினால் அவன் தைரியமாய் புறப்பட்டு இஸ்ரவேல் தேசத்திற்குள் வந்தான். ராஜா அவனை எலிசாவிடத்தில் அனுப்பினான். எலிசாவின் வாசல்படியிலே வந்து நின்ற நாகமானிடம் எலியா ஆள் அனுப்பி, "நீ போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி நீ சுத்தமாவாய்" என்று சொல்லச் சொன்னான்.

எவ்வளவு எளிதான ஒரு காரியம்! சுகமடைய கொடுக்கப்பட்ட நிபந்தனை எத்தனை சுலபமானது; இலவசமானது! அன்றைக்கு யோர்தான் நதியைப் போல, இன்றைக்கும் கிறிஸ்துவின் இரத்தம் நமக்காக ஓடிக்கொண்டேயிருக்

கிறது. நம்முடைய பாவங்களை நீக்கும்படி, நம்முடைய அக்கிரமங்களைச் சுத்திகரிக்கும்படி, சாபத்தின் வல்லமையைத் தகர்க்கும்படி, நம்மைப் புதிய சிருஷ்டியாய் மாற்றுவதற்கு இன்றைக்கும் கிறிஸ்துவின் இரத்தம் வல்லமையுள்ளதாய் இருக்கிறது.

உலகத்திலுள்ள மக்களெல்லாம் கல்வாரிச் சிலுவையின் வல்லமையைத் தெரியாமல், பாவத்திலிருந்து விடுதலை பெறும்படி புண்ணிய நதிகளுக்கும், புண்ணியஸ்தலங்களுக்கும் அறியாமையினால் சென்று கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் இரத்தமேயல்லாமல் வேறு மீட்பு கிடைக்காது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

அன்றைக்குப் பேதுரு இயேசுவைப் பார்த்து சொன்னார்: ''யாரிடத்தில் போவோம் ஆண்டவரே, நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே?'' என்றார்.

யோர்தானில் போய் மூழ்கவேண்டும் என்று சொன்ன எலிசாவின் வார்த்தைகள் நாகமானுடைய உள்ளத்தில் கடும் கோபத்தைக் கொண்டுவந்தது. அவன் தன் தேசத்தின் நதிகளையெல்லாம் எண்ணிப் பார்த்தான். ஆப்னநதி, பார்பார் நதி அவனுக்கு ஞாபகம் வந்தது. இஸ்ரவேலின் நதிகளைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகள் சிறந்தது அல்லவா என்று சொல்ல தீர்மானித்தான்.

''அப்பொழுது அவனுடைய ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி, ''ஐயா, எங்கள் தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும்போது அதைச் செய்ய வேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள்''

(II இராஜா 5:13).

இன்றைக்கு ஜனங்கள் இரட்சிப்பைப் பெற எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள்.

ஆனால் இரட்சிப்பு இலவசம் என்று சொல்லும்பொழுது தான், அதை பெற்றுக்கொள்ள அவர்களுக்கு விருப்பமில்லாமல் போகிறது! இயேசு சிலுவையில் சம்பாதித்த விலையேறப்பெற்ற இரட்சிப்பை, விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ளாமல், தடுமாறுகிறார்கள். இலவசமாய் இருப்பதினால் அதனுடைய விலை மதிப்பு அவர்களுக்குத் தெரியவில்லை.

ஒரு வேளை நரகக் கடலை அவர்களுக்கு முன்பாக நிறுத்தி, நீ பத்து இலட்சம் தந்தாலொழிய உன்னுடைய பாவங்கள் மன்னிப்பு அடையாது. நீ இந்த நரகத்தில் தான் நித்திய, நித்தியமான காலத்தைச் செலவழிக்கப் போகிறாய் என்று சொன்னால் எப்படியாவது பத்து இலட்சம் சம்பாதித்து நரகத்திலிருந்து தப்ப நினைக்கிறார்கள். அதே நேரத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும், உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள தயங்குகிறார்கள். இது எத்தனை வேதனையானது!

நாகமான் தன்னுடைய சுய எண்ணங்களினால் இடறலடைந்தபோது அவனோடுள்ள மற்றவர்கள் அவனுக்குக் கொடுத்த அறிவுரை, கர்த்தருடைய ஊழியக்காரனுக்குக் கீழ்ப்படியப்பண்ணிற்று.

அவன் யோர்தான் நதியிலே தொடர்ந்து ஏழுதரம் மூழ்கினான். ஏழாவது தடவை மூழ்கும்போது கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியின் வார்த்தையை கனம்பண்ணினார். அவனுடைய மாம்சம் ஒரு சிறு பிள்ளையின் மாம்சம்போல உடனே மாறினது! ஆம்! நம்முடைய தேவன் அற்புதங்களின் தேவன். வேதம் சொல்கிறது, ''ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்'' (யோபு 9:10).

அன்றைக்கு நாகமான் யோர்தான் நதியில் மூழ்கின போது அற்புதம் நிகழ்ந்தது. இன்றைக்கு கல்வாரியில்

சிந்தின கிறிஸ்துவின் இரத்தத்தில் ஒவ்வொரு பாவியும்
மூழ்கும் போதும் இரட்சிப்பாகிய அற்புதம் நிகழ்கிறது.
உலகத்திலுள்ள மிகப் பெரிய அற்புதம் ஒரு மனுஷனு
டைய மனம் மறுரூபமாக்கப்படுவதுதான்! பழைய சுபா
வங்கள் நீங்கி புதிய சிருஷ்டியாய் ஆவதுதான்! வேதம்
சொல்லுகிறது, ''இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல
பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது''
(I யோவான் 1:7).

யோர்தானில் நாகமான் ஏழு தடவை மூழ்கினான்
என்று வேதம் சொல்கிறது. ஏழு என்ற எண் எப்பொழு
தும் பூரணத்தை குறிக்கிறது. அரைகுறையாக மூன்று
முறையோ, அல்லது நான்கு முறையோ அவன் மூழ்கி
விட்டு, மேற்கொண்டு மூழ்கி எழாமல் சென்றிருப்பா
னென்றால், அவன் பூரண விடுதலை பெற்றிருக்கவே முடி
யாது. தேவபிள்ளையே, நீ கர்த்தருடைய வார்த்தைக்குக்
கீழ்ப்படியும்போது, பூரணமாக கீழ்ப்படி. ஒவ்வொரு
கட்டளையையும் நிறைவேற்று. அப்பொழுதுதான், உனக்கு
நேர்த்தியான சமாதானமும், சந்தோஷமும், பரிபூரண
மான விடுதலையும் கிடைக்கும்.

ஏழு தடவை மூழ்குவது என்பது கிறிஸ்து சபையின்
பரிபூரணமான ஏழு உபதேசங்களைக் கைக்கொள்ளுவதைக்
குறிக்கிறது. அதாவது மனம் திரும்புதல், பாவமன்னிப்
புக்கென்று ஞானஸ்நானம், பரிசுத்தாவியின் அபிஷேகம்,
வேறுபடுதலின் ஜீவியம், அப்போஸ்தல உபதேசத்தின்
ஐக்கியம், அப்பம் பிட்குதல், ஜெபம் பண்ணுதல்
ஆகியவைகளே!

அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரம் 38-ல் இருந்து
42 வரையுள்ள வசனங்களை வாசிக்கும்போது இந்த ஏழு
உபதேசங்களும் ஆதி அப்போஸ்தலர்களின் மத்தியில் நாம்
காணலாம். அவர்கள் அதைப் போதித்தார்கள், அதைக்
கடைபிடித்தார்கள்.

அதே காரியத்தை அப்போஸ்தலனுகிய பவுல் எபிரெயர் 6 ஆம் அதிகாரம் 1, 2 வசனங்களில் வாசிக்கும்போது அஸ்திபாரமான ஏழு உபதேசங்களைக் குறித்து அவர் சொல்லுகிருர். அவைகள் மனம் திரும்புதல், தேவன் பெயரில் வைக்கும் விசுவாசம், தண்ணீரின் முழுக்கு ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், கைகளை வைக்குதல், மரித்தோரின உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு ஆகியவைகளே. அவைகளை நாம் கைக்கொள்ளும்போதுதான் நாம் பூரணத்தை நோக்கிக் கடந்து செல்ல முடியும்.

அன்றைக்கு நாகமானுடைய குஷ்டரோகம் நீங்கினபோது அவனுடைய சரீரம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல் ஆயிற்று என்று வேதம் சொல்லுகிறது. அதுபோலவே, நாம் பூரணம் அடையும்போது நம்முடைய சரீரம் கிறிஸ்துவின் சாயலிலே மறுரூபமடையும். அப்போஸ்தலனுகிய யோவான் எழுதுகிருர், ''அவர் வெளிப்படும்போது, அவர் இருக்கும் வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினுல் நாம் அவருக்கு ஒப்பாய் இருப்போம் என்று அறிந்திருக்கிரும்'' (I யோ 3:2)

யோர்தானின் தண்ணீரிலிருந்து சுகம் பெற்றவனுக எழும்பிய நாகமானின் சரீரத்தில் மாத்திரமல்ல, உள்ளத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருந்தது. அவன் உடனே தேவனை மகிமைப்படுத்தினுன். ''இஸ்ரவேலில் இருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதையும் அறிந்தேன்'' என்று சொல்லி கர்த்தரைத் துதித்தான்.

எவ்வளவு நன்றியுள்ள ஒரு இருதயம் பார்த்தீர்களா? அவனுடைய பழைய தெய்வமாகிய ரிம்மோன் கோயிலுக்குச் சென்று பணிந்து கொள்ள அவன் விரும்பவில்லை. கர்த்தரையே மனப்பூர்வமாக தொழுது கொள்ள அவன் விரும்பினுன். உள்ளத்தில் அவன் ஒரு இஸ்ரவேலன் ஆனுன்.

மாத்திரமல்ல, சீரியாவிற்குச் செல்லும் முன்பு இஸ்ரவேலிலிருந்து மணலை எடுத்துக் கொண்டு போய், அங்கே ஒரு சிறிய இஸ்ரவேலனுக தான் வாழ விருப்பம் கொண்டான். எலிசாவை நோக்கி, ''இரண்டு கோவேறு கழுதை சுமக்கத்தக்க இரண்டு பொதி மண் உமது அடியேனுக்குக் கட்டளையிட வேண்டும்; உமது அடியேன் இனி கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை'' என்றான்.

பாருங்கள். எத்தனை அருமையான ஒரு தீர்மானம். தேவனை மகிமைப்படுத்தினன், தன்னை ஒரு இஸ்ரவேலனுக்கினன், இஸ்ரவேலின் மணலை எடுத்து ஒரு குட்டி இஸ்ரவேல் தேசத்தைத் தன்னைச் சூழ உருவாக்கினன். மட்டுமல்ல, அந்நிய தேவனை ஆராதிப்பதில்லை என்று தீர்மானித்தான். பலி செலுத்துவதானல் கர்த்தருக்கே செலுத்துவேன் என்று பொருத்தனையும் செய்தான்.

ஒரு நாள் ஆண்டவர் சகேயுவை அழைத்தபோது, சகேயு எத்தனை தீர்மானங்கள் உடனே செய்தான் என்பதை லூக்கா 19 ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கலாம். ஆண்டவர் சொன்னதெல்லாம் '' நீ சீக்கிரமாய் இறங்கி வா, நான் உன் வீட்டில் தங்க வேண்டும்'' என்பதுதான். உடனே அவன், ''ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானல் நாலத்தனையாய் திருப்பிச் செலுத்துகிறேன்'' என்றெல்லாம் பொருத்தனை செய்தான்.

தேவபிள்ளையே, கர்த்தர் உனக்குள் வரும்போது கர்த்தர் விரும்புகிற பொருத்தனைகளைச் செய்வாயாக! பரிசுத்தத்தை வாஞ்சித்து பொருத்தனை செய்வாயாக! தேவனைப் பிரியப்படுத்தி பொருத்தனை செய்வாயாக! கர்த்தர் உன் பொருத்தனையிலே மனம் மகிழ்கிறவராய் இருக்கிறார்.

நாகமான் அதோடுகூட நின்றுவிடவில்லை. கர்த்தருடைய ஊழியனுக்கு ஒரு காணிக்கை கொடுக்கவும்

விரும்பினுன். ஆனுல் எலிசாவோ அந்தக் காணிக்கையை வாங்க விரும்பவில்லை. நான் வாங்குவதில்லையென்று கர்த்தருக்கு முன்பாக, அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்ருன். வாங்கவேண்டுமென்று அவனை வருத்தினுலும், தட்டுதல்பண்ணிவிட்டான் என்று வேதம்சொல்லுகிறது.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் செலவில்லாமல் ஸ்தாபிப்பதே எனக்கு பலன் என்று அப்போஸ்தலனுகிய பவுல் முழங்குகிறதை சிந்தித்துப் பாருங்கள்! (I கொரி 9:18). இயேசு சொன்னுர், "இலவசமாய் பெற்றீர்கள்; இலவசமாய் கொடுங்கள்!" தேவபிள்ளையே, சத்தியத்தை வாங்கு, ஒருபோதும் விலைக்கு விற்காதே!

இங்கேதான் நாம் கேயாசியைச் சந்திக்கிருேம். கேயாசி எலிசாவின் வேலைக்காரன் உடன் ஊழியன். உன்னதமான அழைப்பைப் பெற்றவன். ஆனுல் அவனுடைய உள்ளமோ பொருள் ஆசையினுல் நிரம்பியிருந்தது. கர்த்தருடைய ஆவியின் வரங்களை வாஞ்சிக்கிறதைப் பார்க்கிலும், நாகமானுடைய வெள்ளியும், பொன்னுமே அவனுக்கு மேன்மையாய் இருந்தது.

பண ஆசை பிடித்த கேயாசி, நாகமானைப் பின் தொடர்ந்து ஓடினுன். வேதம் சொல்லுகிறது, "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிருர்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிருர்கள்" (I தீமோ 6:9-11).

கேயாசி இரண்டு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்று வஸ்திரங்களையும் நாகமானிடம் இருந்து பெற்றுக் கொண்டான். கேயாசி ஒரு இஸ்ரவேலன்தான் ஆனுல் அவனுடைய உள்ளமோ சீரியாவின் ஐசுவரியத்தில் இருந்

தது. வெளிப்பிரகாரமாக இஸ்ரவேலன். ஆனால் உள்ளத்திலோ அவன் புறஜாதியான்.

அநேகர் இப்படித்தான் பண ஆசையினால் கிறிஸ்துவை விலை பேசி விடுகிறார்கள். பண ஆசையினால் அரசாங்க ஸ்காலர்ஷிப்களை விரும்புகிறதினாலும்,வேலை வாய்ப்புகளில் சலுகை கிடைக்கும் என்பதினாலும், துணிகரமாய் தங்களை விற்றுப்போட்டு இந்துக்களாகி விடுகிறார்கள். இப்படிப் பட்டவர்கள் மேல் தேவ கோபாக்கினை நிலைத்து நிற்கும் என்பதை அறியாமல் இருக்கிறார்கள் இப்படிப்பட்டவர்களுக்கு கேயாசி ஒரு எச்சரிக்கை ஸ்தம்பம்!

கேயாசியே, எங்கிருந்து வருகிறாய்? என்று எலிசா சொன்ன வார்த்தைகள் கேயாசியை நடுக்கப் பண்ணினது என்றாலும் அவன் துணிந்து உமது அடியேன் எங்கும் போகவில்லை என்று சொன்னான். அந்த வார்த்தைகளைக் கேட்ட எலிசாவின் வாயிலிருந்து சாபமான வார்த்தைகள் வெளி வந்தது. நாகமானின் குஷ்டரோகம் உனக்கும், உன் சந்ததியாருக்கும் என்றென்றைக்கும் பிடிக்கும் என்றான். உடனே கேயாசி உறைந்த மழை நிறமான குஷ்டரோகி ஆகி அவன் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டுப் போனான். எத்தனை பரிதாபம்!

நாகமானையும், கேயாசியையும் பாருங்கள்! நாகமானே சமாதானத்தோடுகூட போனான், கேயாசியோ குஷ்டரோகியாய் புறப்பட்டுப் போனான்.

நாகமான் இரட்சிக்கப்பட்டவனாய் புறப்பட்டு போனான். கேயாசியோ பின்மாற்றக்காரனாய் திரும்பிப் போனான்.

நாகமான் குஷ்டரோகம் நீங்கி சுகமும், ஆரோக்கியமும் பெற்றவனாய் போனான். ஆனால் கேயாசியோ அவமானத்தோடுகூட குஷ்டரோகியாய் விலகிப் போனான்.

நாகமான் கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்பட்டான். கேயாசியோ கர்த்தரால் புறக்கணிக்கப்பட்டான்.

கேயாசி எலிசாவிற்கு உண்மையுள்ளவனாய் இருந்திருந்தால், எலிசாவின் மேல் இருந்த ஆவியின் வரத்தை அவன் இரட்டிப்பாய் பெற்றிருந்திருக்கக்கூடும் அதாவது எலியாவிற்கு இருந்த வல்லமையை நான்கு மடங்கு அவன் பெற்றிருந்திருப்பான். வேதத்தில் அவனுக்கு நீங்காத இடமும் கிடைத்திருக்கும்! ஆனால் அவனுக்கோ பண ஆசை இருந்ததினால் எல்லாவற்றையும் நஷ்டமாக்கி விட்டான்.

தேவபிள்ளையே, உன்னுடைய கண்கள் ஆவியின் வரங்கள் மேல் இருக்கிறதா? இயேசு சொன்னார், ''உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்'' (மத் 6:21), உன்னுடைய உள்ளத்தின் ஆழம் உலக பொக்கிஷங்களை வாஞ்சித்தால் பொருள் ஆசை உள்ளதாய் இருந்தால் கேயாசியை நினைத்து மனம் திரும்புவாயாக! யூதாஸ்காரியோத்தை எண்ணிப் பார்த்து உன்னைச் சீர்படுத்திக் கொள்ளுவாயாக!

கேயாசி இடைவிடாமல் எலிசாவோடு வாழ்ந்தும்கூட அவனுடைய உள்ளம் கர்த்தர்மேல் பிரியப்படவில்லை. தேவனுடைய ராஜ்யத்தையும், நீதியையும் அவன் தேடவில்லை. கர்த்தரை பிரியப்படுத்தும் வாழ்க்கையை நடத்த அவன் தீர்மானிக்கவில்லை.

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னுடைய நோக்கங்களையும் இருதயங்களையும் ஆராய்ந்து பார்க்கிறவர் வேதம் சொல்லுகிறது: ''எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும், செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதாக கொடுக்கும்படிக்கு இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களை சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்'' (எரேமி 17:9,10).

தேவபிள்ளையே, உன் இருதயத்தை கர்த்தர் பேரில் வை! நீங்கள் கிறிஸ்துவோடேகூட எழுந்ததுண்டானால், பூமிக்குரியவைகளை அல்ல மேலானவைகளையே நாடுங்கள்! நித்தியமானவைகளையே வாஞ்சியுங்கள்! ஆவியின் வரங்களையும், வல்லமையையும் பெற்றுக் கொள்ளுங்கள்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்க ஆவலோடுகூட இருக்கிறார்!'

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அது இரவலாய் வாங்கப்பட்டதே!

''ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி வீழ்த்துகையில், கோடரி தண்ணீரில் விழுந்தது; அவன்: ஐயோ என் ஆண்டவனே, அது இரவலாய் வாங்கப்பட்டதே என்று கூவினன். தேவனுடைய மனுஷன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான்; அவன் அந்த இடத்தை காண்பித்த போது, ஒரு கொம்பை வெட்டி, அதை அங்கே எறிந்து, அந்த இரும்பை மிதக்க பண்ணி, அதை எடுத்துக் கொள் என்ருன். அப்படியே அவன் தன் கையை நீட்டி அதை எடுத்துக் கொண்டான்'' (IIஇராஜா 6:4-7).

இந்தப் வேதப் பகுதியில் தீர்க்கதரிசிகளின் புத்திரர் சொன்ன ஒரு வார்த்தையை சற்று ஆழமாக சிந்தித்துப் பாருங்கள். ''ஐயோ, அது இரவலாய் வாங்கப்பட்டதே'' என்ருன். கோடரி அவனுக்கு சொந்தமானது அல்ல. ஆகவே, அந்த கோடாரியை குறித்து ஒரு பொறுப்பு அவனுக்கு உண்டு. கோடரி இரவல் வாங்கப்பட்டதால், கட்டாயமாக அதை திருப்பிக் கொடுத்தேயாக வேண்டும்.

அந்த கோடரி நமது ஆத்துமாவுக்கு ஒப்புமையானது. கர்த்தர் மனுஷனுக்கு ஒரு ஆத்துமாவை கொடுத்திருக்கிருர். அந்த ஆத்துமாவை, தன்னை சிருஷ்டித்த தேவனிடத்தில் கண்டிப்பாக ஒப்படைக்க வேண்டும். அந்த ஆத்துமா அவனுக்கு இரவலாக தேவனுல் கொடுக்கப்பட்டது. ஆத்துமாவை ஒரு போதும் உளையான சேற்றுக்குள் நாம் போட்டு விடக்கூடாது. பாவம் செய்கிற ஆத்துமா மரணத்திற்குள் போய் விடும். அந்த மரணத்திலிருந்து பிறகு அது பாதாளத்திற்குள் போய்விடும். நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவனுக்கு முன்பாக அந்த ஆத்துமா எவ்விதமாய் கணக்கு கொடுக்கும்?

சிந்திக்கத் தூண்டும் பாடல் ஒன்று தமிழில் உண்டு.

''நந்தவனத்தில் ஓர் ஆண்டி-அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
வாங்கி வந்தான் ஒரு தோண்டி,-அதைக்
கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்தாண்டி''

ஆண்டியான ஆத்துமா, நந்தவனமாகிய தாயின் வயிற்றிலே உருவானான். குயவனாகிய இறைவனிடம் அந்த ஆத்துமா வேண்டிக்கொண்ட படியினால் நாலாறு மாதங்களாக, பத்து மாதத்தில் கர்த்தர் ஒரு சரீரத்தை கொடுத்தாராம்.

ஆத்துமாவின் விலையறியாத மனுஷன் குடித்து, கூத்தாடி, பாவத்தில் ஈடுபட்டு ஆத்துமாவை கறைபடுத்திக் கொண்டு, மரித்துப் போனானாம்.

மனுஷன் தன் ஆத்துமாவை பரிசுத்தமாய் பாதுகாத்து மறுபடியும் தன் தேவனிடத்தில் ஒப்படைக்க வேண்டும்! பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாகும். பாவத்தின் சம்பளம் மரணம்! பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்.

ஒரு ஆத்துமா பாவத்தில் விழுந்து பாதாளத்திற்குள் செல்வதற்கு காரணம் என்ன என்பதை கோடரி விழுந்து போனதிலிருந்து சற்று தியானிப்போமா?

பொதுவாக ஒரு மனுஷன் கோடரி வைத்து மரம் வெட்டும் போது, அந்த கோடரி உடனே கழன்று விழுந்து விடாது. முதலில் அந்த கோடரியில் வைத்திருக்கிற ஆப்புகள் ஒவ்வொன்றாக கழன்று, விழுந்து கொண்டேயிருக்கும். அவ்வப்போது அதை எடுத்து சீர்படுத்தி, அந்த ஆப்புகளை எடுத்து மறுபடியும் வைத்து கோடரியை சீர்படுத்தினால் தொடர்ந்து மரம் வெட்டுவதற்கு உதவியாய் இருக்கும். அதே நேரத்தில் அந்த ஆப்புக்கள் விழும்போது அக்கறையில்லாமல் விட்டு விட்டால் கோடரியின் இரும்பு பாகம் தனியாக கழன்று விழுந்து விடக்கூடும்.

அது போலவே ஆத்துமாவும் தேவனிடத்திலிருந்து விலகி மரணத்திற்குள் விழுவதற்கு முன்பாக படிப்படியாக பாவம் மனிதனில் பிரவேசித்துக் கொண்டே வருகிறது. பாவ வழிகளை தொடர்ந்து சீர்படுத்தாமல் போனல் முடிவில் அவன் தன் ஆத்துமாவை இழந்து போக வேண்டியது வரும்.

தீர்க்கதரிசிகளின் புத்திரரின் வீழ்ச்சிக்கு சில காரணங்களை நாம் சிந்தித்துக் கொள்ளுவோம்.

1. நெருக்கமான பாதை விருப்பமில்லை:-

முதலாம் வசனம் சொல்லுகிறது தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவை நோக்கி, நாங்கள், உம்மிடம் கூட இருக்கிற இந்த இடம் எங்களுக்கு நெருக்கமாக இருக்கிறது என்ருர்கள். அவர்களின் முறு முறுப்பை கவனியுங்கள். நெருக்கத்தின் பாதை, இடுக்கத்தின் பாதையில் அவர்களுக்கு விருப்பமில்லை. மனம் போல் வாழ வேண்டுமென்று ஆசைப்படுகிருர்கள் சினிமாக்கள், ஆடம்பரங்கள், உலக இன்பங்கள், பாவ, சாபங்களை விரும்பி ஓடுகிருர்கள். கட்டுப் பாடான ஜீவியம் அவர்களுக்கு பிரியமில்லை. வேத வசனத்தின் படி தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள அவர்களுக்கு பிரியமில்லை. மனமும், மாமிசமும் விரும்பினதைச் செய்யவும், பாவங்களின் இச்சைகளைத் தொடர்ந்து அனுபவிக்கவுமே அவர்கள் விரும்புகிருர்கள். அந்த வாழ்க்கையின் முடிவு வேதனை தான்! ஆத்துமாவை இழக்க வேண்டியது வரும்! முடிவு வீழ்ச்சி தான்!

இயேசு சொன்ஞர்: இடுக்கமான வாசலின் வழியாய் பிரவேசியுங்கள். கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விலாசமுமாய் இருக்கிறது. அதன் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் (மத் 7:13).

முதலில் விழுகை உள்ளத்தில் தான் ஆரம்பிக்கிறது. தேவபிள்ளையே, ஒருபோதும் உல்லாசமான வாழ்க்

கையை நாடி விரும்பாதே. கெட்டக் குமாரனின் வாழ்க்கையை வாசித்துப் பாருங்கள். தன்னுடைய தகப்பன் கைகளுக்கு கீழ், அடங்கி, கட்டுப்பாடான வாழ்க்கை வாழ விரும்பாமல், தன்னுடைய நண்பர்களோடு சேர்ந்து உலகத்தின் உல்லாசங்களை அனுபவிக்க அவன் எண்ணினான். அதனுடைய ஆரம்பம் அவனுக்கு மகிழ்ச்சியாக தோன்றினாலும், முடிவில் பன்றிகளுக்குரிய தவிடு கூட கிடைக்காமல் போயிற்று.

அதே நேரத்தில் மோசேயின் வாழ்க்கையை தியானித்துப் பாருங்கள். வேதம் சொல்லுகிறது. மோசே தான் பெரியவன் ஆனபோது பார்வோனின் குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்து அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய பிள்ளைகளோடு கூட பாடு அனுபவிப்பதையே தெரிந்து கொண்டான். எகிப்தியருடைய பொக்கிஷங்களைப் பார்க்கிலும் கிறிஸ்துவின் நிமித்தம் வருகிற நிந்தையையே அவன் அதிக பாக்கியம் என்று எண்ணினான் (எபி 11:25).

2. சகோதரரோடுகூட சேர்ந்து வாழ விருப்பம் இல்லை:-

வீழ்ச்சியின் இரண்டாவது காரணம், அவர்களுக்கு ஒன்றாக வாழ விருப்பம் இல்லை. சகோதர சிநேகத்தின் மேல் நம்பிக்கையில்லை. ஒருவருடைய பாரத்தை ஒருவர் சுமக்க விருப்பம் இல்லை. நாங்கள் இருக்கும் இடம் நெருக்கமாக இருக்கிறது, ஆகவே நாங்கள் தனித்தனியாக பிரிந்து செல்ல விருப்பப்படுகிறோம் என்பதே அவர்களுடைய தீர்மானமாயிருந்தது.

ஆனால், வேதம் சொல்லுகிறது: "இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது" (சங் 133:1).

சபை கூடுதல், ஒருமனம் உள்ள ஜெபம், ஐக்கிய ஆராதனை, ஒருவருக்கொருவர் திடப்படுத்துதல் எவ்வளவு அவசியம் தெரியுமா?

ஒருமனமாய் கர்த்தருடைய நாமத்தில் நிற்கும்போது தேவனுடைய வல்லமையும், கிருபையும் அபரிமிதமாய் வெளியாகும். ஒருவன் ஆயிரம் பேரை துரத்துவான். இரண்டு பேர் பதினாயிரம் பேரை துரத்துவார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

நான்கு பசுக்கள் ஒன்றாக மேய்ந்தால் சிங்கத்தையும் கூட எதிர்த்து ஜெயம் பெற்று விடலாம். ஆனால், தனித் தனியாக பிரிந்து சென்றால் எதிராளிக்குத்தான் கொண் டாட்டம்.

தேவபிள்ளையே, மற்றவர்களைக் குறை கூறி தேவ மக்களின் ஐக்கியத்தை அலட்சியம் செய்கிறாயா? சகோதர அன்பில் குறைவு படுகிறாயா? ஜெபங்களை, காணிக்கைகளை, ஊழியத்தை புறக்கணிக்கிறாயா? அப்படியானால் நீ ஆதி அன்பில் இருந்து விழுந்து விட்டாய் என்றுதான் அர்த்தம்.

3. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு உத்தரம்:-

''ஒவ்வொருவரும் ஒவ்வொரு உத்தரத்தை வெட்டு வோம்'' என்று அவர்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது (II இரா 6:2). இன்றைக்கு பல தரப்பட்ட சபைகள், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கொள்கைகள், ஒவ்வொரு உபதேசங்கள். வேதம் சொல்கிறது, ''கிறிஸ்து வின் அஸ்திபாரமே அல்லாமல் வேறொரு அஸ்திபாரம் போட ஒருவனாலும் கூடாது. வேதத்தின்படியே கிறிஸ்து வோடு, அப்போஸ்தலரோடு ஒரே மாளிகையாய் கட்டப் பட ஒப்புக்கொடுப்போம். பிரிவினைகளோ, தாறுமாறான கொள்கைகளோ வேண்டாம் (எபே 2:20-22).

4. தேவனுக்கு இரண்டாம் இடம் கொடுத்தல்:-

''நீர் உமது அடியாரோடேகூட வர வேண்டும்'' (3-ம் வசனம்). முடிவு எல்லாம் எடுத்தாகி விட்டது. தாங்கள் தீர்மானித்ததின்படியே செயலாற்றப் போகிறார் கள். கடமைக்காக எலிசாவை அழைக்கிறார்கள். எவ்வ ளவு பெரிய தவறு! சில விசுவாசிகள் இப்படித்தான் செய்

கிறார்கள். பணத்திற்கு ஆசைபட்டு புறமதஸ்தரில் திருமணம் செய்து விடுகிறார்கள். பின் கர்த்தருடைய ஊழியக்காரர் வந்து ஆசீர்வாதம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். வேதம் சொல்வது என்ன? முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும் (மத் 6:33).

5. **தங்களைப் பற்றியே மேன்மை பாராட்டல்:-**

''கோடரியானது தன்னால் வெட்டுகிறவனுக்கு விரோதமாய் மேன்மை பாராட்டலாமோ?'' (ஏசா 10:15). மேன்மை பாராட்டிய நேபுகாத் நேச்சார் மிருகங்களோடு சஞ்சரிக்க வேண்டியதாயிற்று. ஜாதி பெருமையோ, பண பெருமையோ, அந்தஸ்து பெருமையோ நமக்கு வேண்டாம். ''மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும், நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக் கடவன்'' என்று கர்த்தர் சொல்கிறார் (எரே 9:24). சங்கீதக்காரன் சொல்கிறார், ''சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள். நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்'' (சங் 20:7). பவுல் அப்போஸ்தலன் சொல்கிறார், ''நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையை குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக'' (கலா 6:4). தேவனுடைய பிள்ளையே, உனது மேன்மை பாராட்டுதல் எப்படிப் பட்டது?

6. **அது இரவலாக வாங்கப்பட்டதே:-**

மனுஷனுடைய ஆத்துமா பாவத்தில் அமிழ்ந்து போக ஐந்து காரணங்களை மேலே நாம் பார்த்தோம். ஆம் பாவம் செய்கிற ஆத்துமா நோய்வாய்ப்பட்டு, பெலவீனமாகி கடைசியில் மரிக்கும்; அமிழ்ந்து போகும். கோடரி

யின் ஆப்புகளும், ஆணிகளும் விழுந்து கடைசியில் கோடரியும் மூழ்கிப் போயிற்று. அப்பொழுதுதான் மரம் வெட்டினவன், எலிசாவிடம் ஐயோ, என் ஆண்டவனே அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினன். ஆ! இந்த பாவ உணர்வை உன் ஆத்துமாவின் சீர் கெட்ட நிலையை நீ உணர்ந்தால் எவ்வளவு நன்ருய் இருக்கும்? பரம எலிசாவைக் கண்ணீரோடு நீ அழைத்து உன் ஆத்துமாவின் நிர்ப்பந்தமான நிலையை அறிவிப்பாயா?

7. அது எங்கே விழுந்தது?

தேவனுடைய மனுஷன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான். ஆம்; தேவனிடம் நாம் பாவ அறிக்கை செய்து, நமது இருதயத்தை திறந்து அவரிடம் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். வேதம் சொல்கிறது, ''ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக'' (வெளி 2:5). நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம் (I கொரி 11:31). எனவே கண்ணீரோடு கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்து, தேவனுடைய இரத்தம் நம்மை முற்றிலும் கழுவும் வரை, அவர் இரட்சிப்பின் சந்தோஷத்தால் நிரப்பும் வரை பாவ அறிக்கை செய்வோமாக!

8. ''ஒரு கொம்பை வெட்டி அங்கே எறிந்து...''

அந்த கோடரியை தண்ணீரிலிருந்து மிதக்கச் செய்ய வேண்டுமாளுல் ஒரு கொம்பு வெட்டப்பட வேண்டியது மிகவும் அவசியமானது. பாவமில்லாத, பரிசுத்தமான ஒரே கொம்பு இயேசு கிறிஸ்துவே. சங்கீதக்காரன் (சங் 18:2)-ல் ''ஈசா என்னும் அடி மரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி அதன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்'' என்று காண்கிறோம். இயேசுவைக் குறித்து சகரியா தீர்க்கதரிசி, ''இதோ ஒரு புருஷன்; அவருடைய நாமம் கிளை எனப்படும்'' (சகரியா 6:12).

எங்கே மனுஷனின் விழுகை நேர்ந்ததோ, அங்கே அந்த இரட்சிப்பின் கொம்பானது மீட்பை உண்டாக்க

இறங்கினது. ஏதேன் தோட்டத்திலே விழுந்த மனிதனை தூக்குவதற்காக, அவர் கெத்செமனே தோட்டத்தில் இரத்த வேர்வை சிந்த வேண்டியதாயிற்று. மரத்தின் கனியை மனுஷன் புசித்து பாவம் செய்ததால் இயேசுவும் மரத்தில் தொங்க வேண்டியதாயிற்று. நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் தோட்டத்தின் மத்தியில் இருந்ததைப் போல, அவர் கள்ளர்களின் மத்தியில் தன் ஜீவனை விடவேண்டியதாயிற்று. அவர் ஒருவரே இரட்சகர், அவரையல்லாமல் வேறு இரட்சிப்பில்லை. உனக்காக அடிக்கப்பட்டு, கிழிக்கப்பட்டு, இரத்தத்தை சிந்தி உன்னை நேசிக்கிற இயேசுவை உள்ளன்போடு உன் உள்ளத்தில் ஏற்றுக் கொள்.

9. இரும்பு தண்ணீரில் மிதந்தது:-

ஆச்சரியமான ஓர் காட்சி! ஆம்; இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள், அவர் வருகையின்போது பூமியினின்று மேலாக மிதப்பார்கள். உலகமோ, மாமிசமோ அவர்களைக் கட்ட முடியாது. ஏனென்றால் தங்களுக்காக பிளக்கப்பட்ட கிளையாகிய இயேசு, அவர்களின் எல்லாக் கட்டுகளிலிருந்தும் அவர்களை விடுவித்திருக்கிறார்.

எக்காள சத்தம் தொனிக்கும். ஒரே நிமிடத்தில் தேவ மக்கள் மறுரூபமாவார்கள். "மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயமெங்கே?" என்று வெற்றி முழக்கமிடுவார்கள். என்றும் ஆனந்தம்! எப்பொழுதும் கிறிஸ்துவில் மகிழ்ந்து களிகூர்வார்கள்!

தேவபிள்ளையே, உங்கள் ஆத்துமாவின் நிலையென்ன? ஆத்துமா பரிசுத்தமாய் இருக்கும்படி ஆத்துமாவில் கவனம் செலுத்துங்கள்! அது இரவலாக வாங்கப்பட்டதே!

எலிசாவின் மரணம்!

''எலிசா மரணத்திற்கேதுவான வியாதியாய் கிடந்தான். அப்பொழுது இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ், அவனிடத்திற்கு போய் அவன் மேல் விழுந்து, அழுது, என் தகப்பனே, என் தகப்பனே இஸ்ரவேலுக்கு இரதமும், குதிரை வீரனுமாய் இருந்தவரே என்றான்''
(II இராஜா 13:14).

எலிசாவின் நாட்கள் முடியப் போகிறது. ஒரு பெரிய சகாப்தம் கடைசி நேரத்திற்கு வந்து விட்டது. ஒரு தேவ மனுஷன் பூமியை விட்டுகடந்து போகப் போகிறான்.

எலிசாவின் மரண நேரத்திலும், அவர் தேவ பக்தியுடைவராயவராக இருந்தார். ஆவியின் வல்லமையும், வரமும் நிறைந்தவராக இருந்தார். அவருடைய சரீர பெலவீனமோ வியாதியோ அவர் பெற்றுக் கொண்ட ஆவியின் இரட்சிப்பின் வரத்தை கொஞ்சமும் குறைத்து விடவில்லை!

எலியா எப்படி இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரனுமாய் இருந்தாரோ அப்படியே எலிசாவும் இருந்தார். மரணத்திலும் அற்புதங்களை நிகழ்த்துவதற்கு உண்மையுள்ளவராக இருந்தார். மரித்த பின்னும் அவர் எலும்புகள் அற்புதங்களை நிகழ்த்தினது. வேதத்தில் யாரும் செய்யாத அற்புதங்கள் இவைகள்!

எலிசா மரணத் தருவாயில் இருந்தபோது அவரைப் பார்க்கும்படி இஸ்ரவேல் ராஜாவந்து,அவர் மேல் விழுந்து புலம்பி அழுதார். அவன் அழுவதற்கு ஒருகாரணம் எலிசா மரணப் படுக்கையாக இருந்தாலும் மறுபக்கம் சீரியரின் படை அவனுக்கு விரோதமாய் வந்தது அடுத்தக் காரணமாகும்.

மனதுருகின எலிசா இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து கிழக்கே இருக்கிற ஜன்னலை திறந்து அம்பை எய்யும் என்று சொன்னார். அவன் எய்தபோது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு நேராய் வந்தது. "இது கர்த்தருடைய இரட்சிப்பின் அம்பு. சீரியரின் கையில் இருந்து விடுதலையாக்கும் அம்பு. நீர் உம்முடைய சத்துருக்களை முறியடித்தீர்" என்றார். அதுதான் எலிசா பேசின கடைசி வார்த்தைகள். மரணத்திலும் சத்துருக்களை முறியடிக்கிற தெய்வீக வல்லமை நிறைந்தவராக இருந்தார். ஜெயம் கொண்டவராகவே அவர் மரித்தார்.

தேவபிள்ளையே, எலிசாவின் வாழ்க்கை முழுவதையும் வாசித்துப் பாருங்கள். ஒரு முறுமுறுப்போ, ஒருசோர்வோ, ஒருதோல்வியோ, ஒருபின்மாற்றமோ இருந்ததில்லை. தனக்கு ஜெயம் கொடுக்கிற தேவனாலே அவர் எப்பொழுதும் ஜெயமான வார்த்தைகளைப் பேசினார். கர்த்தரின் கெம்பீரசத்தம் அவருக்குள் இருந்தது.

எலிசா ஒருபோதும் மனுஷனை நம்பினதில்லை. எந்த மனுஷனையும் சார்ந்து இருந்ததும் இல்லை. தாவீதுசொல்லுகிறதுபோல மனுஷனுடைய உதவி விருதா. தேவனாலே பராக்கிரமம் செய்வோம். அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார் (சங் 60:11,12).

தேவபிள்ளையே, உன்னுடைய வாழ்க்கையில் இவ்விதமான சாட்சி விளங்கட்டும். ஜெய கெம்பீரமாய் தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டே மரிக்கும் எலிசாவை நோக்கிப்பார்! ஒரு வீரனாக மரித்தார். தேவனுடைய மனுஷனாக அவர் மரித்தார். இஸ்ரவேலுக்கு இரதமும், குதிரை வீரனுமாயிருந்து அவர் மரித்தார்.

நாம் வாழும்போது பலரோடு வாழலாம். ஆனால், மரிக்கும்போது தனித்தனியாக மரிக்கிறோம். மரண நேரத்தில் தேவனுடைய பிரசன்னம் நம்மோடுகூட இருக்க வேண்டும். மரணத்தை நீ ஜெயமாக விழுங்க வேண்டும். மரணத்தை பார்த்து நீ சவால் கொடுக்க வேண்டும்!

''மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே?'' என்பதே உன்னுடைய வெற்றி முழக்கமாக இருக்கட்டும். அல்லேலூயா!

மார்ட்டின் லூத்தர் ஒருமுறை சொன்னார், ''மரண நேரம் வரும்போது உலகத்தில் உள்ள ஒவ்வொருவனும் உலகப் பிரகாரமான ஒன்றையும் குறித்து சிந்திக்காமல், கர்த்தரையே தன் முழு நினைவாகக் கொள்ள வேண்டும். ஒருவன் இன்னொருவனுக்காக மரிக்க முடியாது. மரிக்கிற தருணமே முக்கியமான தருணம். நல்ல போராட்டத்தைப் போராடி, ஓட்டத்தை முடியுங்கள். மரணம் ஜெயகரமான தாக இருக்கட்டும்'' என்று அந்த பக்தன் முழங்கினார்.

நாம் கிறிஸ்துவோடு என்றென்றும் இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் இனி அந்நியரும், பரதேசிகளுமல்ல. நமக்கு பரலோக தேவன் உண்டு. பரிசுத்தமான தேவனுடைய குடும்பமும் நமக்குண்டு. அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், நீங்கள் இனி அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருக்கிறீர்கள்

(எபேசி 2:19).

எலிசாவின் சரித்திரம் அவருடைய மரணத்தோடு முடிவடையவில்லை. வேதம் சொல்கிறது, எலிசா மரணம் அடைந்தான். அவனை அடக்கம் பண்ணினார்கள். மறு வருஷத்தில் மோவாபியரின் தண்டுகள் தேசத்திலேவந்தன. அப்பொழுது அவர்கள் ஒரு மனுஷனை அடக்கம் பண்ண போகையில் அந்தத் தண்டைக் கண்டு அந்த மனுஷனை எலிசாவின் கல்லறையில் போட்டார்கள். அந்த மனுஷனின் பிரேதம் அதிலே விழுந்து எலிசாவின் எலும்புகள் மேல் பட்டபோது அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான் (II இராஜா 13:20,21).

எலிசாவின் எலும்புகளில் பரலோக அபிஷேகம் இருந்தது. அந்த எலும்புகள் மரித்தோரை உயிர்ப்பிக்க வல்லமை

யுள்ளதாய் இருந்தது! அபிஷேகம் எவ்வளவு விசேஷமானது என்பதை சிந்தித்துப் பாருங்கள்!

இயேசு கிறிஸ்து ஜனங்கள் மத்தியில் சஞ்சரித்தபோது, பெரும்பாடுள்ள ஸ்திரீ அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டாள். கிறிஸ்துவின் வல்லமையும், அபிஷேகமும் அவருடைய வஸ்திரத்தின் மேலும் இறங்கியிருந்தது!

பவுலின் சரீரத்திலிருந்து உருமால்களையும், கச்சைகளையும் வியாதிஸ்தர்கள் மேல் கொண்டு வந்து போட்டார்கள். அந்தக் கச்சையில் கூட அபிஷேகமும் தேவனுடைய வல்லமையும் இறங்கியிருந்தபடியினால், வியாதியஸ்தர்கள் அந்த நிமிடத்திலேயே சொஸ்தமானார்கள்.

பேதுருவின் நிழலில் கூட அபிஷேகம் இறங்கியிருந்தது என்பதை நாம் அறிகிறோம். பேதுருவின் நிழல்பட்டவர்கள் கூட சொஸ்தம் ஆனார்கள்.

எலியாவின் எலும்புகளில் அந்த அபிஷேகம் இருந்தது. அவர் மரித்து விட்டார். அவருடைய இருதயத்தின் துடிப்புகள் நின்று விட்டது. அவருடைய சரீரம் அழுகி மண்ணோடு மண்ணாய் போனது. ஆனாலும், அவருடைய எலும்புகளில் அற்புதத்தை நிகழ்த்தக் கூடிய தெய்வீக அபிஷேகம் இருந்தது.

சாதாரணமாய் ஒரு மனுஷன் மரிக்கும்போது, அவன் பாவியாய் மரித்தால் அந்தப் பாவங்கள் அவனுடைய எலும்புகளோடுகூட படுத்துக்கொள்ளும் சகல மனுஷரும் உயிர்த்தெழும்பும் போது அவன் பாவங்கள் அவனோடு கூட எழுந்து நியாயத்தீர்ப்புக்கு நேராய், நித்திய ஆக்கினைக்கு நேராய் வழி நடத்திச் செல்லும்.

ஆனால் தேவபிள்ளைகளின் மரணத்திலோ ஒரு எதிர்ப்பார்ப்பு உண்டு; ஒரு அபிஷேகம் உண்டு; அற்புதம் நிகழ்த்தும் கிருபைகள் உண்டு! எலிசாவின் எலும்புகளில் அவை இருந்தன.

எலும்புகளை குறித்து ஒரு ஆழமான ரகசியம் வேதத்தில் உண்டு. ஆகவேதான், "நீதிமான்களின் எலும்புகள் முறிக்கப்படுவதில்லை" என்று சங்கீதக்காரன் சொல்கிறன்.

சிலுவையிலே இயேசு கிறிஸ்துவினுடைய எலும்புகளும் முறிக்கப்படவில்லை. அவருடைய எலும்புகளை முறிப்பதற்காக சத்துருக்கள் வந்த போதிலும் அவர் அதற்கு முன்பாக மரித்து விட்டபடியினுல் எலும்புகளை முறிக்காமல் கடந்து சென்றுர்கள்.

யோசேப்புக்கு தன்னுடைய எலும்புகளைக் குறித்து ஒரு தரிசனம் இருந்தது. ஆகவே அவன் தன்னுடைய எலும்புகளை கானுனுக்குள் கொண்டு போக விரும்பினுன். இஸ்ரவேல் புத்திரரை அழைத்து, நீங்கள் தற்போது என்னை எகிப்தில் அடக்கம் பண்ணினுலும், ஒரு நாள் நிச்சயமாகவே கர்த்தர் உங்களை சந்திப்பார் நம்முடைய முற்பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணினபடியே பாலும், தேனும் ஓடுகிற கானுனுக்குள் உங்களை கொண்டு போவார். அந்த நாளில் நீங்கள் இந்த எலும்புகளைத் தோண்டி எடுத்துகானுனிலே அடக்கம் செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டான்.

தன்னுடைய எலும்புகளில் அபிஷேகம் நிறைந்திருக்கிறதையும், ஒரு நாள் தேவஎக்காளம் தொனிக்கும் போது தனது எலும்புகள் உயிர்ப்பிக்கப்படும் என்பதையும் அவன் திடமாய் நம்பி இருந்தான். மட்டுமல்ல, எக்காள சத்தம் தொனிக்கும் போது நம் முற்பிதாக்களோடு கூட, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு அவர்களோடு கூட ஒன்றுக உயிர்த்தெழும்படி அவன் தீர்மானித்திருந்தான்.

எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு கர்த்தர் எலும்புகளைக் குறித்த தரிசனத்தைக் கொடுத்தார். இந்த எலும்புகள் உயிர்ப்பிக்கப்படுமா? என்று கேட்டார். மட்டுமல்ல, எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைத்தபோது பள்ளத்தாக்கில் கிடந்த ஏராளமான எலும்புகள் இமைப் பொழுதிலே

ஒன்றாய் சேர்ந்து, உயிரடைந்து பெரிய சேனையாய், காலூன்றி நின்றார்கள். எத்தனை அருமையான ஒரு காட்சி!

ஒரு நாள் எக்காள சத்தம் தொனிக்கும். பிரேதக் குழியிலுள்ளவர்கள் மனுஷக் குமாரன் சத்தத்தைக் கேட்கும் ஒரு காலம் வரும். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடு இருக்கும் நாமும் அவருக்கு எதிர் கொண்டு போவோம். ஆ! அந்த நாள் எத்தனை மகிமையான ஒரு நாள்.

தேவபிள்ளையே, ஒரு நாள் தேவ வல்லமை உன்னுடைய எலும்புகளை உயிர்ப்பிக்கும் என்பதை மறந்து போகாதே. உன்னுடைய எலும்புகளில் எப்போதும் அபிஷேகம் நிரம்பியிருக்கட்டும்.

வேதம் சொல்லுகிறது: "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11).

நம்முடைய தேவன் மரித்தோரின் தேவனல்ல; அவர் உயிருள்ளோரின் தேவன்! அவருடைய வார்த்தைகள் இன்றைக்கும் அக்கிரமத்திலும் பாவத்திலும் மரித்த மக்களை உயிர்ப்பித்திருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை முழுவதும் திரும்ப திரும்ப தியானித்துப் பாருங்கள். எத்தனை ஒரு சவாலான வாழ்க்கை. எலியா எடுத்துக் கொள்ளப்படும் போது, எலிசா என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும், குதிரை வீரருமாய் இருந்தவரே, என்று புலம்பினான். அது போலவே, எலிசாவின் மரண நேரத்தில் இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் அந்த வார்த்தைகளைக் கூறி புலம்பி அழுதான்.

ஆம்! அன்றைக்கு எலியாவும், எலிசாவும் இஸ்ரவேலுக்கு இரதமும், குதிரை வீரருமாய் இருந்தார்கள். இரண்டு பேருடைய ஊழியக் காலங்கள் ஏறக்குறைய 80 ஆண்டுகள் நீடித்தன. கி. மு. 870 முதல் கி. மு. 790 வரை அவர்கள் இஸ்ரவேலுக்கு இரதமும், குதிரை வீரருமாய் விளங்கினார்கள். அந்த நாட்கள், பல்வேறு வகையான ராஜாக்கள் அரசாண்ட போதிலும், அகசியா, யோராம், யெகூ, யோகாஸ் போன்ற ராஜாக்கள் ராஜரீகம் பண்ணினாலும், அவர்கள் இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாயிருக்கவில்லை. அவர்கள் கர்த்தருக்காக பக்திவைராக்கியம் பாராட்டவில்லை அவர்களுடைய படை வீரர்களும், இரதங்களும், குதிரை வீரர்களும் வெறும் மனுஷீகத்திற்குரியவைகளுமாகவே இருந்தன.

ஆனால், எலியாவும், எலிசாவுமோ, ஆவிக்குரிய அக்கினி இரதங்களாக, குதிரைகளாக விளங்கினார்கள்! இரதமும், குதிரையும் யுத்தத்தின் சின்னங்கள் அல்லவா? அவை சத்துருவின் வல்லமையை மடங்கடிக்கும் அடையாளங்கள்! கர்த்தருக்கு விரோதமாய் எழும்புகிற ஒவ்வொரு வல்லமையையும் நிர்மூலமாக்குகிற போர் ஆயுதங்கள்! கர்த்தரே தெய்வம் என்று நிரூபிப்பதற்கு கர்த்தர் கொடுத்த வாகனங்கள்.

தேவபிள்ளையே, இன்று நீ ஜனங்கள் மத்தியில் நிற்கிறாய்! கர்த்தர் உன்னை அபிஷேகித்து இருக்கிறார். இஸ்ரவேலருக்கு எலியாவும், எலிசாவும் அன்றைக்கு இரதங்களும், குதிரை வீரர்களுமாய் இருந்தது போல நீ இன்றைக்கு இந்தியாவுக்கு கிறிஸ்துவுக்குள் இரதமும், குதிரை வீரனுமாய் இருப்பாயா? நீ இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லும்போது ஜனங்கள் எல்லாம் உன்னைப் பார்த்து எங்கள் ஆவிக்குரிய தகப்பனே, இந்தியாவுக்கு இரதமும், குதிரை வீரருமாய் இருந்தவரே என்று போற்றுவார்களா? சிந்தித்துப் பார்.

எலிசாவின் வாழ்க்கையும், மரணமும் நமக்கு ஒரு சவாலாக இருக்கிறது. கர்த்தருக்காக நிற்க தீர்மானம் செய். அவர் உனக்காக வைராக்கியமாய் நிற்க எழுந்து விட்டார். ஆவியின் வரத்தை இரட்டிப்பாய் பெற்றுக் கொள்ள எழும்பி பிரகாசிப்பாயா?

கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்!

மனம் விட்டு உங்களோடே...!

இந்தப் புத்தகத்தின் மூலமாய் உங்களை சந்திக்க கிருபை செய்த தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன். கிருபையும், சமாதானமும் உங்களில் பெருகுவதாக!

ஏனெக்கு. என்ற புத்தகத்தை எழுத ஆரம்பித்ததில் இருந்து வேதத்திலுள்ள பல பரிசுத்தவான்களைக் குறித்து எழுதினால் என்ன என்று சிந்திக்கலானேன். அதைத் தொடர்ந்து எலியாவின் வாழ்க்கையை அக்கினி இரதங்கள் என்ற புத்தகத்தின் மூலமாக எழுதி தமிழ் கிறிஸ்தவர் களுக்கு வழங்கினேன். அதை தொடர்ந்து அநேகர் எலிசாவைப் பறறியும் எழுத வேண்டுமென்று விரும்பி கேட்டுக்கொண்டார்கள். ஆகவே, இந்தப் புத்தகத்தை ஜெபத்தோடு எழுதியிருக்கிறேன். எலிசாவின் வாழ்க்கை முழுவதையும் எழுத முடியாமல் போனாலும் கூட முக்கியமான பகுதிகள் இந்தப் புத்தகத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது உங்களுடைய கருத்துக்களை எழுதுங்கள்.

இந்தப் புத்தகத்தை எழுத ஆரம்பித்தபோது ஒரு சகோதரி மிகவும் அன்புடன் இந்த ஊழியத்திற்காக உதவி செய்தார்கள், இந்தியாவிலிருந்து தற்போது வெளி தேசத்தில் பணிபுரியும் அவர்களுக்காக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mrs. Vimala Alexander & Family, MUSCAT.

இந்தப் புத்தகத்தினால் வரும் ஒவ்வொரு ஆசீர்வாதங் களும் அவர்களையும், அவர்களுடைய அருமைக் குடும்பத் தினரையும் சேருவதாக.

இந்தப் புத்தகத்திற்கு ஓய்வு தரவேண்டாம். குறைந்தது 50 பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புது புத்தகங்களை மலரச் செய்யும்!

ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமை யாதவை.

ஏறக்குறைய 100 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந் நூலையும் வெளி யிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்ல மையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தி யிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக் குரிய புஸ்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசிர்வதிப்பாராக !

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :
J. சாம்ஜெபத்துரை, M.A.,
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.